உ

கணபதி துணை.

திருவனந்தபுரம் ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ
கெ. ஜி. சேஷய்யர் அவர்கள் விருப்பத்தின்படி
மதுரைமாநகரின் கயற்கண்ணிதாசனாகிய
மகா-ா-ா-ஸ்ரீ

**எம். எஸ். பிச்சுவையரவர்கள்**

இயற்றிய

# மதுரை யென்...

# ...டலந்தாதி மூலமும்

# ...ஸ்தோத்திரமாலையும்,

# ...ஆறுமுகப்பதிகமும்,

...மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன வித்வான்
மகா-ா-ா-ஸ்ரீ
சுப்பிரமணியதேசிகரவர்களியற்றிய

## ஷை அந்தாதி உரையும்.

மதுரை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ B.A., B.L.,
**எஸ். இராமச்சந்திர ஐயரவர்கள்**
பொருளுதவியைக்கொண்டு

மதுரை B.A., B.L.,
**...க்கீல் எம். எஸ். சேஷய்யரவர்களால்**

மதுரை வடக்குமாசிவீதி:
ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1912.

(இதன் விலை) (அணா நா...

...ANA MUNIVAR LIBRARY 143
...ஞானமுனிவர் நூல் நிலையம்

உ

சிவமயம்.

MUNIVAR LIBRARY
முனிவர்
நிலையம்

# சிறப்புப் பாயிரம்.

இஃது மதுரை மாணவகர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராஸனாதிபதி

**மகா-௱-௱-ஸ்ரீ கோபாலகிருஷ்ண ஐயரவர்க ளியற்றியது.**

## அகவற்பா.

பூமலி கற்பகப் பொதும்பர்வீற் றிருப்போன்
தோமகன் றுய்யவுந் துய்யநற் றுயை
விழைந்தவன் பாதகம் விலகவுந் திருவருள்
வழங்கிய பெருமான் மான்மழு வேந்தி
ஆறணி சடையா னாரணப் பரியான்
நீறணி மேனியா னின்மல மூர்த்தி
உலகெலா மீன்ற வொருத்தியை மணந்து
நிலவுமா மரபி னெடுந்தவம் விளங்கக்
கோல்கொண் டுறையுங் கூடலம் பதியிற்
சேல்கொண்ட கண்ணியின் றிருவடிப் பத்தியாற்
கயற்கண்ணி தாசனுங் கலையுணர் முதிஞன்
மயற்கண்ணி மேவா மறையவர் திலகன்
சிற்பரற் கன்புறுஞ் சேஷைய னன்குசெய்
பொற்புறு தவத்தாற் பூதலத் துதித்தோன்
உத்தம குணத்தின னொப்பிலாச் சீலன்
சத்திய வசனன் றண்ணளி யுடையான்
பிச்சு வையப் பெருந்தகை விரும்பி
எச்சு வையுமிதற் கிணையிலை யென்னா
அந்தாதி மாலையொன் றுவலி னியற்றிச்
செந்தாதி யைகுழற் றேவிமீ தணிந்தனன்
இன்னநூற் றன்மையை யெண்ணுபு மகிழா
தென்னவன் கொடுஞ்சுரந் தீர்த்தாட் கொண்ட
அருட்பெருங் குரவ ராதி னத்தில்
மருட்டபு கலைபுகல் மகாவித் வானுஞ்
சுப்பிர மணிய தேசிகன் றுலங்கத்
திப்பிய நல்லுரை செய்தன னாக
பொருட்சுவை சொற்சுவைப் பொலிவெலாங் காணூஉ
தெருட்பெறு முலகிவை செழித்துவா ழியவே.

மதுரை அமெரிக்கன்மிஷன் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ

## நாராயண ஐயரவர்க ளியற்றிய

விருத்தம்

தென்றணைந்து செவ்வழிப்பண் ணுளும் பாடுஞ்
செழுமலர்த்தண் டலையுடைசூழ் தெய்வக் கூடற்
கோன்புரிந்த தவக்கிரங்கிக் குமரி யாய்ச்செங்
கோற்செலுத்து மம்பிகையின் குளிர்பொற் றண்மேற்
றன்றெரிந்த கலைத்திறனு றக்கோ ரேத்தத்
தகுகூட லந்தாதித் தனித்தார் சூட்டி
ஊனிலைநந்த வுடற்பயனைப் பெற்றோங்கி னானே
தூயமதுரைக் கயற்கண்ணி தாச னோர்ந்தே.

வேறு

இத்தகைய வந்தாதிக் கியைந்தபதப் பொருட்சுவையை
யெவரும் போற்ற
வுத்தமமாக திருஞான சம்பந்த நாதனைத்
துவந்து வாழ்வோன்
முத்தமிழும் பரமனடிப் பணிவிடையுந் தனதாக்கி
முதிர்ந்த ஞான
வித்தகன்சுப் பிரமணிய தேசிகனே றுரைசெய்து
விளக்கி னானே.

மதுரை மகா-ள-ள-ஸ்ரீ

## ஸ்ரீபாஷ்யம் இராமாநுஜதாச நாயுடு அவர்களியற்றிய

வெண்பா.

தேசவருங் கூடலந்தா தித்தேன் கயற்கண்ணி
தாசனுல கோருந்த தானளித்தான் — மாசடைந்த
கற்கண்டும் பாகுங் கனியமிழ்து மேனவன்செஞ்
சொற்கண்டு கேட்டுணரிற் சூழ்ந்து.

## மதுரை மகா-ள-ள-ஸ்ரீ சோமசுந்தர முதலியாரவர்களியற்றிய

வெண்பா.

கருக்கூடா வண்ணங் கயற்கண்ணி தாசன்
திருக்கூட லந்தாதி செய்தா — னிருக்கோது
மெய்ப்பொருளுங் காண விதற்கோ ருரையிந்தான்
சுப்ரமண்ய நாவலவன் சூழ்ந்து.

உ

அம்பிகை துணை.

# மதுரை யென்னுங்
# கூடலந்தாதி மூலமும்
# உரையும்.

## விநாயகர் காப்பு.

பொன்னினம் போருகப் பூந்தடக் கூடற் புராதனிதாள்
தன்னினப் பைந்தமி ழந்தாதிப் பாத்தொடை சாத்துதற்கு
முன்னிய வாக்குப் பொருள்வள மோங்க மொழிவித்தருள்
உன்னிணைத் தாண்மற வேன்கய மாமுக முற்றவனே.

இதன் பொருள். மா கயமுகம் உற்றவனே - பெரிய யானை முகத்தையுடைய விநாயகமூர்த்தியே, உன் இணை தாள்மறவேன் - நின்னிரண்டு திருவடிகளைத் தியானஞ்செய்வேன், இன் பொன் அம்போருகப்பூ தடம் - இனிய பொற்றாமரை மலர்த் தடாகஞ் சூழ்ந்த, கூடல் புராதனிதாள் தன்னின் - மதுராபுரியின்கண் ணெழுந்தருளிப் பழமையுற்ற மீனாட்சி தேவியாரின் திருவடிகள்மீது, அம் பைந்தமிழ் அந்தாதி பாதொடை சாத்துதற்கு - அழகிய குளிர்ந்த தமிழ்மொழியை அந்தாதியாய்த் தொடுக்கப்பெற்ற பாமாலையை யணிதற்கு, முன்னிய - நினைப்பவைகளும், வாக்கு - சொற்களும், பொருள் - பொருள்களும், வளம் ஓங்க - சுவை பெருகும்படி, மொழிவித்து அருள் - சொல்வித்துக் காப்பாயாக. (க)

## சுப்பிரமணியர்.

உற்றக ராசலங் கொண்டீர்ப் பதையொழித் துய்நெறிவே
றற்றக ராசலங் காத்தோன் பிணைமது ராம்பிகைக்குச்
சொற்றக ராசல மெய்தாக் கவித்தொடை சூட்டிடவேல்
பெற்றக ராசல மூர்த்திமைந் தாவெனைப் பேணையனே.

(இ - ள்.) வேல்பெற்றகரா - வேலாயுதபாணியே, சலமூர்த்தி மைந்தா - சிவபிரானது குமாரனே, ஐயனே - தலைவனே, உற்ற கரா சலம்கொண்டு ஈர்ப்பதை ஒழித்து - (தடத்துப்) பொருந்திய முதலை

யாற் சினங்கொண் டிழுக்கப்படுவதை நீக்கி, உய் நெறி வேறு அற்ற கராசலம் காத்தோன் பின்னை - கரையேறத்தக்க வழி வேறுபெறாத கஜேந்திரனை இரட்சித்த விஷ்ணுமூர்த்தியின் தங்கையாகிய, மதுராம்பிகைக்கு - மதுரை மீனாட்சி தேவியார்க்கு, சொல் தகர் ஆசு அலம் எய்தா - மொழியின சிதைவும் (பொருட்) குற்றமுமாகிய சஞ்சலம் அடையாத, கவி தொடை சூட்டிட - பாமாலையை யணிதற்பொருட்டு, என்னை பேண் - அடியேனை யிரட்சிப்பாயாக. (உ)

## சரசுபதி.

பேணி வரம்பலர் சூழ்ந்தேத்த வோர்தனம் பின்மறையக்
காணி வரம்பல வாணரென் றேய்ந்தருங் காந்தையராய்
நாணி வரம்பல ரோனைவென் றாள்பத நாவழுத்த
வாணி வரம்பல வாக்கருள் கூடலின் வந்திப்பனே.

(இ - ள்.) வாணி - கலைமகளே, கூடலின் வந்திப்பன் - மதுராபுரியில் (நின்னைத்) தொழுவேன், வரம்பலர் பேணி சூழ்ந்து ஏத்த ஓர் தனம் பின் மறைய - அனேக ராதரித்து வளைந்து புகழும்படியொரு முலையானது பின்னர்க் காணாதாக, காண் இவர் அம்பலவாணரென்று ஏய்ந்து - பார்க்கின்ற இவர் சபாநாயகரெனக்கொண்டு, அரும் காந்தையராய் - அருமைக்குகந்த மணவாட்டியராய், நாண் இவர் அம்பு அலரோனை வென்றாள் - (வில்) நாணியிலிருந் தெழுகின்ற புட்பபாணத்தையுடைய மன்மதனையும் வென்றாளாகிய தடாதகைப் பிராட்டியாரது, பதம் நா வழுத்த - திருவடிகளை நாக்கொண்டு துதிக்கும்படி, வரம் பலம் வாக்கு அருள் - மேன்மையும் பயனுமுற்ற சொற்றொடர்பை யுதவுவாயாக. (ஏ - அசை.) (௩)

## அவையடக்கம்.

வந்தாழி நீருண் டமுதாக்கி மேகம் வழங்குவபோ
லிந்தார் குணப்பெரி யோரடி யேனிங் கிசைத்தபுன்சொ
லந்தாதி யையுளங் கொண்டினி தாக்கி யளித்திடுவார்
செந்தா மரைச்செழுங் கூடற் பிராட்டிக்குத் தித்திக்கவே.

(இ - ள்.) மேகம் ஆழி வந்து நீர் உண்டு - மேகமானது சமுத்திரத்தை யடைந்து நீரை யருந்தி, அமுதாக்கி வழங்குவபோல் - அமுதாகச் செய்து உதவுதலையொப்ப, இந்து குணம் ஆர் பெரியோர் - சந்திரனைப்போலும் (அமுத) குணமுற்ற ஆன்றோர், இங்கு அடியேன் புன் சொல் இசைத்த அந்தாதியை - இச்சமையத்து அடியேன்

அற்ப மொழியாற் றொடுத்த பாமாலையை, உளங்கொண்டு - உள்ளத் திலேற்று, செம் தாமரை செழும் கூடல் பிராட்டிக்கு தித்திக்க - செழித்த செந்தாமரைத் தடாக வளஞ்சூழ்ந்த மதுராபுரியின் மீனாட்சி தேவியார்க்கு மகிழ்ச்சியுண்டாகும்படி, இனிது ஆக்கி அளித்திடுவார் - சுவை பொருந்தச்செய்து உதவுவார்கள்.

செந்தாமரை - அன்மொழித்தொகை. ஏகாரம் - அசை.

## நான்முகம்.

திருவரம் பாலனம் வாழ்வோங்கு கூடலிற் செங்கனிவாய்ப்
பருவரம் பாதியர் சூழவிண் ணோரும் பணிந்துதுதி
தருவரம் பார்க்கவுற் றோமெனும் வேதமித் தற்பரைதாள்
கருவரம் பாலுழ லாதிங் களித்தெமைக் காத்திடுமே.

(இ - ள்.) திரு வரம் பாலனம் வாழ்வு ஓங்கு கூடலில் - (கல்வி முதலிய) செல்வமும் மகிமையும் செங்கோன்மையும் வாழ்க்கையும் விளங்கப்பெற்ற மதுராபுரியின்கண், அம் - (உண்மைப்பொருளின்) சொரூபத்தை, வேதம் பார்க்க உற்றோம் என்னும் - வேதங்கள் தரிசிக்கப்பெற்றோமென்று முழக்கமிடும், செம் கனிவாய் பருவம் ரம்பாதியர் சூழ - கொவ்வைக் கனியை யொத்த அதரமுற்ற இளம் பருவத்தை எக்காலுமுடைய அரம்பையாதியர்சூழ, விண்ணோரும் பணிந்து துதி தருவர் - (அந்தணர்முனிவரொடு) தேவர்களும் வணங்கிப்போற்றல் செய்வார், இ - இத்தகைய சிறப்பு வாய்ந்த, தற்பரை தாள் - தடாதகைப் பிராட்டியாரின் திருவடிகள், இங்கு - இம்மைப்பயனையும், கரு வரம்பால் உழலாது அளித்து - (இனி) கருப்பவாசக் கட்டுண்டு வருந்தாது (பரமுத்தியையுங்) கொடுத்து, எம்மைக்காத்திடும் - எங்களை ரட்சிக்கும். அம்—ஆகுபெயர். (க)

காத்திர மேதி நிசாசரன் கோரத்தைக் கண்டுமதித்
தாத்திர மேதினிக் கூடலன் பர்க்கென வம்பிகைநின்
னேத்திர மேதின மாறுக் கருணையி னீண்டகருத்
தாத்திர மேதினி மீனாட்சி யென்றுனைச் சாற்றிடுமே.

(இ - ள்) அம்பிகை - பிராட்டியே, காத்திரம் மேதி நிசாசரன் - பருத்த மயிடாசுரனது, கோரத்தை கண்டு மதித்து - கொடுஞ்செயலை நோக்கி மத்திக்கச்செய்து, கூடல் அன்பர்க்கு இனி ஆத்திரம் ஏது என்ன - மதுராபுரியிற் பத்தியுடையார்க் கினி யாபத்தேதென்று கொ

ண்டாடும் வண்ணம், நின் நேத்திரமே தினம் மாறு கருணையின் நீண்டகருத்தா - நினது கண்களே யனுதினமும் நீங்காத கிருபையினாலே விசாலித்ததென்னும் பொருள் விளங்குமாறு, மேதினி திரம் உன்னை மீனாட்சியென்று சாற்றிடும் - உலகமானது உறுதியாக நின்னை மீனாட்சி என்று புகழுமன்றோ. ஏ—அசை. (உ)

சாற்றுங் களைவளைக் கைவிலை மாதர்வஞ் சத்திற்சிக்கி
யூற்றுங் களைவளை யாச்செருக் காலுண் டுழன்று நைவீர்
மாற்றுங் களைவளை யமகா துமைபத மாமலர்கள்
கூற்றுங் களைவளை யாதருங் கூடற் குறிக்கொண்மினே.

(இ - ள்.) கள் சாற்றும் ஐ வளை கை - களவைப் பேசுகின்ற அழகிய வளையலைத் தரித்த கைகளையுடைய, விலை மாதர் வஞ்சத்தில் சிக்கி - வேசையரது கபடத்திற் கட்டுண்டும், ஊற்றும் கள்ளை வளையா செருக்கால் உண்டு - வடிக்கின்ற கள்ளை வணக்கமற்ற எக்களிப்பாற் குடித்தும், உழன்று நைவீர் - வருந்தி மெலிகின்றவர்களே, அரும் கூடல் வள்ளை அம் காது உமை - அருமையாகிய மதுராநகரின் வள்ளைபோலு மழகிய செவியுடைய மீனாட்சி தேவியாரது, பதமாமலர்கள் குறிக்கொள்மின் - திருவடித் தாமரைகளைக் கவனமாகப் பற்றுங்கள், களை மாற்றும் - (அவை) சோர்வை யொழிக்கும், உங்களை கூற்று வளையாது - (சரீராந்தத்தில்) உங்களை எமபாசமும் கட்டுப்படுத்த மாட்டாது. (ந)

கொண்டலைத் திக்கரிக் குங்கரத் தாள்குழல் கூர்மதுரக்
கண்டலைத் திக்கரிக் கும்மொழி யாள்கடை காத்துநிற்குந்
தண்டலைத் திக்கரிக் கும்மற்றை யோர்க்குந் தரும்பதத்தாள்
அண்டலைத் திக்கரிக் குந்தலை கூடலை வாழ்த்தகமே.

(இ - ள்.) அகமே - மனமே, கொண்டலை திக்கரிக்கும் கரத்தாள் - (கொடையினாலே) மேகத்தைப் பழிக்குங் கையினள், மதுரம் கூர் குழல் கண்டு இக்கு அலைத்து அரிக்கும் மொழியாள் - சுவைமிகுந்த வேணுகானத்தையுங் கற்கண்டையுங் கரும்பையுமலைத்துப் பகைக்கத்தக்க இன்சொல்லினள், கடை காத்து நிற்கும் - வாயிலிற் காத்து நிற்கின்ற, தண் தலை திக்கு அரிக்கும் மற்றையோர்க்கும் தரும் பதத்தாள் - குளிர்ந்த முதற்றிசைப்பாலகனாகிய இந்திரனுக்கும் ஏனையோர்க்கும் அளிக்குந்திருவடியினள், இ - இங்ஙனுற்ற, கரி குந்தளை கூடலை அண்டல் ஐத்து - இருண்டகூந்தலையுடைய மீனாட்சிதேவியாரின் மதுராபுரியைச் சார்தல் அழகுடைத்தாதலால், வாழ்த்து - போற்றுவாயாக. (ச)

வாழு மருந்ததிக் கொப்பிடுங் கற்பயன் மங்கையர்வாய்க்
கூழு மருந்ததின் மேலென்று காதலைக் கொண்டுநர
கேழு மருந்ததி பாதகத் தீர்மது ரேச்சுரியைத்
தாழு மருந்ததி யோர்ந்துய்கு வீரிது சத்தியமே.

(இ - ள்) வாழும் அருந்ததிக்கு ஒப்பிடும் கற்பு - வாழ்கின்ற அருந்ததிக்கொப்பிடத்தக்க கற்புவாய்ந்த, அயல் மங்கையர் வாய் கூழு - பாதாரங்களின் இதழாகியவுணவை, மருந்ததின் மேல் என்று காதலை கொண்டு - அமுதினுமினியதென்று மயலடைந்து, நரகு எழும் அருந்து அதி பாதகத்தீர் - (ரௌரவாதி) நரகங்களேழையு மனுபவிக்கக்கூடிய கொடியபாவிகாள்!, அரும் ததி ஓர்ந்து மதுரை ஈச்சுரியை தாழும் - அருமையுற்ற சமையமுணர்ந்து கூடற் பிராட்டியை வணங்குமின், உய்குவீர் இது சத்தியம் - கரையேறுவீ ரிதுவுண்மை.
ஏ - அசை (நி)

சத்தியஞ் சக்கரங் கொண்டங் கயற்கண்ணி தாடொழுவோர்க்
கத்தியஞ் சக்கர வாங்கூட லீச னருளுமெய்தும்
பத்தியஞ் சக்கரங் கால்சோர வோடிப் பணத்திச்சையால்
நித்தியஞ் சக்கரம் போற்றிரி யாதன்பி னின்மனனே.

(இ - ள்.) மனனே - மனமே!, அஞ்சு அக்கரம் கொண்டு - பஞ்சாட்சரத் தியானஞ்செய்து, சத்தி அம் கயல் கண்ணி தாள் தொழுவோர்க்கு - சத்தியாகிய அழகிய மீனாட்சிதேவியாரின் திருவடிகளைப் பணிவோர்க்கு, அத்தி அம் சக்கர் அவாம் கூடல் ஈசன் அருளும் எய்தும் - உடம்பெலா மழகிய கண்களைப்பெற்றவிந்திரன் விரும்பத்தக்க மதுரைநகரின் சோமசுந்தரக்கடவுள் கிருபையுஞ் சித்திக்கும், பணத்து இச்சையால் - (மிகு) பணத்தாசையினாலே, பத்தி அஞ்ச கரம் கால் சோர ஓடி - பத்தியஞ்சவுங் கைகால்தளரவு மோட்டம் பிடித்து, நித்தியம் சக்கரம்போல் திரியாது - பிரதிதினமும் கறங்கைப்போற்சுழலாது, அன்பில் நில் - (இனிநீயும் அத் திருவடிகட்கு) அன்புகொண்டமைக. [அத்தி - எலும்பு, அதனையுடைய உடம்புக்காதலாலாகுபெயர்]
(சு)

மனகன கம்பத்தி ராவணற் போக்கிநன் மாறன்சுதாய்
சனகன கம்பத் திரமாக்கி னாளொடு சாருளைப்
பனகன கம்பத் திரந்தங் கரிக்கரன் பாலித்தனன்
தனகன கம்பத்தி யீந்திடுங் கூடனின் றன்மைகொண்டே.

(இ-ள்.) நல் மாறன் சுதாய் - நலமுற்ற பாண்டியராஜபுத்திரியே!, தன கனகம் பத்தி ஈந்திடும் கூடல் நின் தன்மை கொண்டு - தனமாகிய சுவர்ணாதிகளையும் பத்தியையுமுதவுகின்ற மதுரைக்கரசியாகியவுனது தன்மையைப்பற்றி, அரன் - சோமசுந்தரக்கடவுள், பன்னகன் நகம் பத்திரம் தங்கு அரிக்கு - ஆதிசேடனிலும் மலைகளிலும் (ஆல்) இலையிலும் பொருந்துகின்ற விஷ்ணுமூர்த்தியாகிய இராகவனுக்கு, மனம் கனம் கம் பத்து இராவணன்போக்கி - மனத்திண்ணத்திற் சிறந்த பத்துத்தலைகளையுடைய இராவணனையழித்து, சனகன் அகம் பத்திரம் ஆக்கினளொடும் சார் அருளைப்பாலித்தனன் - சனகராஜனுள்ளத்தை மங்களமாகச்செய்த சீதாதேவியாரொடு (மீண்டு அயோத்தியாபுரியை) அடையுங்கிருபையை யுதவினன் அன்றோ. (எ)

தன்மத வம்புதி தின்மறை கூடலைச் சாற்றலின்றிப்
பன்மத வம்பு தினந்தொறும் பேசிப் பரத்தையரால்
மன்மத வம்புதி வாவினுந் தாக்கு மயற்றிரையார்
துன்மத வம்புதி வீழ்வார் பலரிதென் சுந்தரியே.

(இ - ள்.) சுந்தரியே - மீனாட்சியம்மையே!, பலர் - அநேகர், தன்ம தவம் புதிது இல் மறை கூடலை சாற்றல் இன்றி - தர்மமாகிய தவத்தையும் பழமையுற்றவேதங்களையும் மதுரைத்தலவிசேடத்தையுமுரைப்பதையொழிந்து, பல் மத வம்பு தினந்தொறும் பேசி - பலவாறு செருக்கால் அவமாகியவைகளைப் பிரதிதினமுமுரைத்து, பரத்தையரால் - பொதுமாதர்களால், மன்மதன் அம்பு திவாவினும் தாக்கும் - காமபாணம் பகலினும்மோதத்தக்க, மயல் திரை ஆர் துன்மதம் அம்புதி வீழ்வார் - காதலென்னும் அலைபொருந்திய கெட்ட சமையமாகிய கடலில் விழுவார், இது என் - இதென்ன ஆச்சர்யம்?. (அ)

[கூடல் - ஆகுபெயர்.]

சுந்தர மந்தர விந்தமெ னுந்தனத் தோகையர்வஞ்
சந்தர மந்தர விந்தனர் கூடலைச் சாருமன்பர்க்
கந்தர மந்தர விந்தநி திக்கிணை யம்பிகையார்
கந்தர மந்தர விந்தணி வாரொடுங் கைதந்துமே.

(இ - ள்.) கூடலை சாரும் அன்பர்க்கு - மதுராநகரையடையும் பத்தர்க்கு. அந்தரம் மந்து அரவிந்த நிதிக்கு இணை அம்பிகையார் - வானமுதையும் பதுமமுதலிய நிதிகளையும்போன்ற அங்கயற்கண்ணியார், அம் தர கந்தரம் இந்து அணிவாரொடும் கை தந்தும் - அழகு

தவ மேகங்களேயுஞ் சந்திரனேயுந் தரிப்பாராகிய சோமசுந்தரக் கடவுளொடுங்கூடிக் கைகொடுத்திருந்தும், மந்தம் தரர் - தாமதகுணமுடையார், (இதனையுணராது) மந்தரம் விந்தம் என்னும் சுந்தரம் தனம் தோகையர் வஞ்சம் அவிந்தனர் - மந்தரமலேயோ விந்த வெற்போ என்றுமயங்கத்தக்க அழகிய முலைகளையுடைய மாதர்கள் வஞ்சகத்திற் பட்டு அழிந்தார்கள். [மருந்து என்பது - எதுகைநோக்கி மந்து என நின்றது; ஆந்த்ரபாஷையை மருவியதெனினும் ஒக்கும்.] (௯)

தந்தனஞ் சந்தன மல்கு னடையிடைத் தற்பரையார்
தந்தனஞ் சந்தனம் பூசுதற் கேர்பெறத் தாள்பிடித்தான்
தந்தனஞ் சந்தனங் காதலிக் கென்பர் தமிழ்க்கருண்மாத்
தந்தனஞ் சந்தனங் கூடற் புரிமணத் தாரணிந்தே.

(இ - ள்.) நம் காதலிக்கு அல் சந்து தந்தனம் என்பர் தமிழ்க்கு அருள் - நமது ஆசைநாயகிக் கிரவிற் றூதாகவுதவினேமென் றிரங்கிப் போற்றிய (சுந்தரமூர்த்தி நாயனரின்) தமிழ்ப் பாடலுக்குக் கிருபைசெய்கின்ற, மா தந்தன் நஞ்சு அந்தன் - பன்றிக் கொம்பையும் விடத்தையும் அழகுறத்தரித்த சொக்கலிங்கப்பெருமான், அம் கூடல் புரி மணம் தார் அணிந்து - அழகிய மதுராநகரின்கண் மணமாலிகை புனைந்து, தந்து அன்னம் சந்தனம் - நூலேயும் அன்னப்பட்சியையும் தேரையும் நிகர்த்த, அல்குல் நடை இடை - அல்குலேயும் நடையையும் மருங்குலேயும் உடைய - தற்பரையார்தம் - தடாதகைப்பிராட்டியாரது, தனம் சந்தனம் பூசுதற்கு - முலைகள் செங்கலவைச்சாந்தைப் பூசுதலுக்கு, ஏர் பெற தாள் பிடித்தான் - (தனதுபுயமார்பு முதலிய அவயவங்கள்) எழில்கொள்ளும் வண்ணம் (அத்தேவியாரின்) திருவடியைப்பற்றினன். [காதலி என்பது - பரவைநாச்சியார். முதலடியெதிர் நிரனிறைப்பொருள்கோள்] (௰)

தாரகங் கண்டிரு நெஞ்சே திருவடி சார்ந்துபணி
வாரகங் கண்டிரு நோக்கா லொழிப்பவள் வைகுமணி
பூரகங் கண்டித்து மால்போற்றுங் கூடற் புரிக்கரசி
தேரகங் கண்டிகை வெண்ணீ றுவந்தருள் சேற்கண்ணியே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!, திரு அடி சார்ந்து பணிவார் அகம் - (தன்) திருவடிகளைப்பற்றித் தொழுவோரது பாவத்தை, கண் திரு நோக்கால் ஒழிப்பவள் - நேத்திரங்களின் கருணைப்பார்வையால் நீக்குபவளும், வைகும் மணிபூரகம் கண்டித்து மால் போற்றும் கூடல்

புரிக்கு அரசி - தங்கற்குரியநாபிஸ்தானத்தை வெறுத்து விஷ்ணுமூர்த்திபோற்றத்தக்க மதுராபுரிக்கிறைவியும், தேரகம் வெண்ணீறு கண்டிகை உவந்து அருள் - தெளிந்த வுள்ளத்தையும் விபூதி ருத்திராட்சங்களையும் (ஆதாரமாகக் கொண்டுநின்று ஈண்டுள்ள அன்பர்செய்யும் பூஜையைச்) சந்தோஷித்துக் கிருபை செய்பவளுமாகிய, சேல்கண்ணியே தாரகம் - மீனாட்சிதேவியே ஆதாரமாதலின், கண்டு இரு - (இதனை) உணர்ந்து அமைவாயாக. (௰௧)

கண்ணிக் கடம்ப வனவாசி னீகயற் கண்களினெம்
புண்ணிக் கடம்ப வனவாசி வாவென்று போற்றினரை
எண்ணிக் கடம்ப வனவாசி நூலியற் கேற்றிநரி
நண்ணிக் கடம்ப வனவாசி யாக்கிய நன்மைகொண்டே.

(இ - ள்.) அம்ப வனவா சிவா என்று போற்றினரை எண்ணி - அம்பிகையே கங்காதராசிவா என்றுமுறையிட்டுத்தொழுத அன்பரைத்திருவுளங்கொண்டு, கடம் பவன் அவாசி நூல் இயற்கு ஏற்றி - அகஸ்தியமுனிவராற் றென்மொழி யிலக்கணோபதேசம் பெற (க்கரை) யேற்றியதும், நரி நண்ணி கடு அம் பவனம் வாசி ஆக்கிய நன்மைகொண்டு - நரிகளையடைந்து கடுமையுற்றவழகிய வாயுவேகமுடைய பரியாகச்செய்ததுமாகிய திருவிளையாடலைப்பொருந்தி, கண்ணி கடம்ப வனம் வாசினீ - பூங்கொத்துக்களையுடைய கடம்பவனஞ்சூழ்ந்த கூடற்பதிவாழுமம்மையே, எம் புண் இக்கு - எம்மை நோவச்செய்கின்ற ஆபத்தை, கயல் கண்களின் அடு - மீனைப்போலுங் கடாட்சத்தாலொழிப்பாயாக. [அன்பரென்பவை - முறையே நக்கீரரும், மாணிக்கவாசகரும். கரையாவது — பொற்றாமரைத்தடக்கரை.] (௰உ)

கொண்ட விரத்தக் கடம்பேணு தற்குளங் கூருமெலிற்
றெண்ட விரத்தக்க கூடனின் பாதத் துணைக்கென்செய்வேன்
பண்ட விரத்தக்க பாலிக்கி டேனெனப் பாழ்த்தமகத்
தெண்ட விரத்தக்க னாவியுண் டானிடத் தென்மருந்தே.

(இ - ள்.) பண்டு அவி ரத்தம் கபாலிக்கு இடேன் என்ன பாழ்த்த மகத்து - முற்காலத்து அவிப்பாகத்தை யுருத்திரனுக்குக் கொடேனென்ற நாலவடாகிய யாகத்தில், எண் தவிர தக்கன் ஆவி உண்டான் இடத்து என் மருந்தே - (உணவுகொள்ளக்கூடியிருந்த தேவர்களது) நினைப்பொழியுமாறு தட்சனுடைய சீவனையுண்ட சிவபிரானின் வாமபாகத்தமர்ந்த வெனது அமுதையொத்ததாயே', கொண்ட விரத்தம் கடம் பேணுதற்கு உள்ளம் கூரும் என்னில் - அடைந்த அருவ

ருக்கக்கூடியவுடம்பைப் பருக்கச்செய்தலுச்கு மனம்விருத்தியாமென்றால், தொண்டு அவிர தக்க கூடல் - தொண்டர்விளங்கத்தக்க மதுராபுரியினிடத்து, நின் பாதத்துணைக்கு என்செய்வேன் - நினதிரண்டு திருவடிகளுக்கு மென்னபணிவிடை செய்வேன். [இரத்தக்கபாலம் - பிரமாதலேயோடு. தொண்டு - ஆகுபெயர்.] (௰௩)

மருத வளந்தரு மஞ்சாருங் கூடலின் மாதங்கிசெந்
திருத வளந்தரு மாதயி ராணிநின் றெத்திசையும்
விருத வளந்தரு மஞ்சொடு நின்பதம் வேண்டுவரேற்
கருத வளந்தரு மன்பின்றி யாருனைக் காண்பவரே.

(இ - ள்.) மருதவளம் தருமம் சாரும் கூடலின் மாதங்கி - செந்நெல்முதலியவளமும் தருமங்களும் பொருந்தியிருக்கின்ற மதுரைப்பதிக்கரசியே!, எத்திசையும் விருதவள் - திசைமுழுதும் வெற்றிகொண்டவளே!, அம் தரு மஞ்சொடு - அழகிய கற்பகாதிகளொடும் மேகங்களொடும், செந்திரு தவளந்தருமாது ஐராணி நின்று - இலட்சுமி சரசுபதி இந்திராணியரும் (நின்சந்நிதியில்) நின்று, நின்பதம் வேண்டுவரேல் - நினது திருவடிகளைப் போற்றுவாராயின், கருத அரும் அன்பின்றி - நியானித்தற்கருமையாகிய அன்பில்லாது, உன்னை அளந்து காண்பவர் யார் - உன்னையளவிட்டறிவார் யாவர்? (௰௪)

காணில வம்பஞ்சு கொங்கைமின் னார்கருங் கண்ணிற்கும்பிச்
சாணில வம்பஞ்சு கஞ்சாருங் கூடற் றயாபரியைப்
பேணில வம்பஞ்சு நஞ்சுங்கொ ளாதுனைப் பேதைநெஞ்சே
சேணில வம்பஞ்சு துஞ்சவிஞ் சாலென்ன சீருனக்கே.

(இ - ள். பேதை நெஞ்சே - அஞ்ஞானமனமே!, காண் நிலம் மின்னார் வம்பு அஞ்சு கொங்கை கரும் கண்ணில் சாண் கும்பியில் அவம் - காண்கின்ற நில மாதரது கச்சுத்தெறிக்கத்தக்க தனங்களினும் கரியவிழிகளினும் சாண்வயிற்றினும் வீணாக, இலவம்பஞ்சு துஞ்ச சேண் விஞ்சால் உனக்கு சீர் என்ன - இலவம்பஞ்சுங் கீழாகும்படியந்தரத்தின்மிகுவதா லுனக்கு மேன்மையாவை? (ஒன்றும் இல்லையன்றோ) பம் சுகம் சாரும் கூடல் தயாபரியை பேணில் - இருகத்தினது சுகம்பொருந்துகின்ற மதுராபுரியின் மீனாட்சிதேவியாரைப் போற்றுவாயாயின், அ அம்பு அஞ்சும் நஞ்சும் உன்னை கொள்ளாது - (மன்மதன்) அந்த வாளியைந்தும் (மற்றும்) தீயவைகளுமுன்னை யடையாது.

உனக்கோ டரம்பிகை கோலோட் டுரைப்ப வுகந்தவரைச்
சினக்கோ டரங்கப் பவநீக்கிக் கூடலிற் சேர்த்திடுமேல்
வனக்கோ டரங்கொண்ட பூமாலை போல வருந்துமெம்மை
மனக்கோ டரந்தைநின் றேற்றரி தோநின் மலரடிக்கே.

(இ - ள்.) அம்பிகை - தேவியே!, கோல் ஓட்டு ஓடர் உனக்கு உரைப்ப உகந்து - தெப்பமோட்டுதலை வலைஞர் உனக்குக் கற்பிக்க மகிழ்ந்து, அவரை - அவ்வலைஞரை, சினம் கோள் தரங்கம் பவம் நீக்கி - கோபக்குற்றமாகிய அலைகளையுடையபிறவி(க்கடலை) ஒழித்து, கூடலில் சேர்த்திடுமேல் - (முத்திக்கரையாகிய) கூடற்பதிபிற் சேர்க்குமாயின், வனம் கோடரம் கொண்ட பூமாலைபோல வருந்தும் எம்மை - காட்டுக்குரங்கினகப்பட்ட மலர்மாலையைப்போல் வருந்துகின்றவெங்களை, மனம் கோடு அரந்தை நின்று ஏற்று - மனங்கோணச்செய்கின்ற துன்பத்தழுந்தாது ஈடேற்றுதல், நின் மலர் அடிக்கு அரிதோ - நினது திருவடிகளுக்கு முடியாதவோ. [ஏற்று என்பது - முதனிலைத்தொழிற்பெயர். (௰௫)

அடிகம லந்துடை வாழையென் றாடவர்க் கன்புருகி
வடிகம லந்துடை நீக்கவி டாதுதை வஞ்சியரான்
மிடிகம லந்துடை நெல்லாக்கு முன்கன்னி மீனவட்காட்
படிகம லந்துடைப் பாண்மன னேசுகம் பல்கிடுமே.

(இ - ள்.) மனனே - மனமே!, அடி கமலம் துடை வாழை என்று - காலைத் தாமரை துடையை வாழையென்றுமோகித்து, ஆடவர்க்கு - புருஷர்களுக்கு, அன்பு உருகி வடிக மலர்ந்து - அன்புருகிவடியும்படி மலர்ந்தும், உடை நீக்க விடாது உதை வஞ்சியரால் - துகிலை நெகிழ்த்தவிடாதூடுகின்ற மாதராதுசேர்க்கையால், மிடி கம்மல் அந்து உடை நெல் ஆக்கும் முன் - வறுமையும் பிணியும் வண்டுகுடைந்த நெல்லையொப்ப ஆக்குதற்குமுன்னர், கன்னி மீனவட்கு ஆட்படு - கன்னி(நகரின்றலைவியாகிய) மீனாட்சிதேவியார்க்கு அடிமைப்படு, இகமலம் துடைப்பாள் - பிறவிக்குக்காரணமாகிய (ஆணவாதி)மலத்தையொழிப்பாள், சுகம் பல்கிடும் - இன்பந்தழைக்கும். [கன்னி - ஆகுபெயர், ஏ - அசை, இரண்டாவது அடியில்மலந்து என்பது இடைக்குறை.()

பல்லக்கங் கோகன கத்தார் மதுரையின் பாங்குபெற
நல்லக்கங் கோகன கத்தாளி னீந்திடு நாயகியைச்
சொல்லக்கங் கோகன கத்தார் களைவரிற் சோர்ந்திடினெல்
லல்லக்கங் கோகன கத்தாலு மாவ தவமதிப்பே.

(இ - ள்.) பல்லக்கு கோ கனகத்தார் - சிவிகை பசுக்கள் சொர்ணமாலை முதலிய (இகபோக)த்தையும், அம் - (பரத்துமோட்ச ஐசுரிய) அழகையும், மதுரையின் பாங்கு பெற - கூடற்புரியின்கண் முறைமையாக (அடியார்) அடையும்வண்ணம், நல் அக்கம் கோகனகம் தாளின் ஈந்திடும் - கடாட்சத்தினுஞ் சரணம்புயத்தினு மளிக்கின்ற, நாயகியை சொல்ல கங்கோ - இறைவியின் புகழையுரைத்தற் கடங்குவனவோ, (அல்லவாதலின்) கன்னகத்தார்கள் ஐவரில் சோர்ந்திடின் - சோரராகிய பஞ்சேந்திரியங்களிற்பட்டு (அத்தேவியாரை) மறப்பின், (பின்னர்) எல் அல் லக்கம் கோகு அன்ன கத்தாலும் - பகலினுமிரவினும் இலட்சங்கழுதையொப்பக் கத்தினும், ஆவது அவமதிப்பே - கிடைப்பது வசையே. [கன்னகம் என்பது - திருடற்குட்புகுமாறு மதிலைத்துளைக்குங்கருவி; அதனைக்கன்னக்கோலென வுலகவழக்கு.] (ருஅ)

அவமதிப் பத்தரைக் காவென்றும் வேசையர்க் கன்புகொண்டு
நவமதிப் பத்தரை மாற்று டகமென்று நாட்கழித்துப்
பவமதிப் பத்தரை சோர்ந்திரங் கூடலெம் பாண்டியன்சேய்த்
தவமதிப் பத்தரைச் சார்வோமைக் கூற்றென்ன சாதிப்பதே.

(இ - ள்.) மதிப்பு அவம் அத்தரைகா என்றும் - எண்ணத்தை யவத்து விடுக்குஞ் செல்வரையடைந்து சோலையென்றும், வேசையர்க்கு அன்பு கொண்டு - பரத்தையரை யடைந்து, இ நவமது பத்தரை மாற்று ஆடகம் என்றும் - இதுபுதியதேனோ பத்தரைமாற்றுத் தங்கமோ என்றுங்கொண்டாடி, நாள்கழித்து - ஆயுளைப்போக்கி, பவம் தரை மதிப்ப - சனனமரணமாயவைகள் பூமியினிடத்து மத்திக்கும்படி, சோர்ந்து இரம் - சோர்வாயிருக்க மாட்டோம், எம் கூடல் பாண்டியன் சேய் - எமதுமதுராநகரிற் பாண்டியராசகுமாரிக்குகந்த, தவம் மதி பத்தரை சார்வோம் - பணிவிடையிற் புத்திகூருந்தொண்டரைச் சார்ந்திருப்பொம், ஐம கூற்று என்ன சாதிப்பது - (இனி) கரியமறலியென்னசெய்யக் கிடக்கின்றன. [வேசையர்க்கு என்பது - உருபுமயக்கம்.] ஏ:-அசை. (ருகூ)

சாதிக்கும் பாலனந் தம்பேத மாக்கிடத் தக்கவிரிஞ்
சாதிக்கும் பாலனஞ் செய்கூட லம்பிகை தாட்டுணையைச்
சாதிக்கும் பாலன மாக்கொள்ளு வோமுத்தி தந்துபிர
சாதிக்கும் பாலனந் தாயென் றினியெவண் சார்விப்பதே.

(இ - ள்.) சாதி கும்பால் அனந்தம் பேதம் ஆக்கிட தக்க விரிஞ்சா - சாதிக்கூட்டத்தினாலே யநேகவேறுபாடு தோன்றச் சிருட்டிக்

குந் தகுதியுற்ற பிரமாவே!, திக்கு பாலனம் செய் கூடல் அம்பிகை தாள் துணையை - திசைமுற்றும் ஆட்சிசெய்கின்ற மதுராபுரி மீனாட்சி தேவியாரின் உபையபாதங்களையும், சாதிக்கும் பால் அன்னமாய்கொள்ளுவோம் - (வினைப்பசியை) வெல்லும் பாலமுதாக் கொள்வோம், (அவைகள்) முத்தி தந்து பிரசாதிக்கும் - மோட்சத்தை யுதவித் தந் நிழலிற் சேர்த்துக்கொள்ளும், (இனி) அம் பாலன் தாய் என்று எவண் சார்விப்பது - அழகியகுழந்தை யன்னையென்று எங்கு அடைவிப்பது? (உ௰)

சாடி வருந்தின மாலருஞ் சோதரி தாபதர்கண்
டோடி வருந்தின மாமனை மக்களுக் குற்றவெலாந்
தேடி வருந்தின மென்பரென் கூடலைச் சேவிப்பக்கை
கூடி வருந்தின மாக்கமென் றுய்மறை கூறவுமே.

(இ - ள்.) சாடு இவர் உந்தின மால் அரும் சோதரி - சகடாசுரனை யெழும்படியுதைத்த விஷ்ணுமூர்த்தியின் அருமைத்தங்கையே, கூடலை தினம் சேவிப்ப - பிரதிதினமு மதுராநகரைச் சேவைசெய்யின், ஆக்கம் கை கூடி வரும் என்று - ஐசுவரியங் கைகூடிவருமென்று, ஆய் மறை கூறவும் - ஆராயத்தக்க வேதங்கள் கோஷிக்கவும், (அதனை யுணராது) தாபதர் கண்டு ஓடும் - தபசியர்கண்டோடத்தக்க, இ அருந்து இனமாம் மனை மக்களுக்கு உற்ற எல்லாம் தேடி - இங்குண்கின்ற கூட்டமாகிய மனைவிமக்களுக்குப் பொருந்தியயாவையுஞ் சம்பாதித்து, வருந்தினம் என்பர் என் - வருத்தமுற்றோமென்று பிதற்றுவார்களிவையென்னகாரணம்? (உக)

கூறோங் கரிகுப்பொ யெக்காலுங் கூடலைக் கொண்டுதவப்
பேறோங் கரிக்குற்ற தங்கையஞ் சேற்கட் பிராட்டியன்பின்
மாறோங் கரிக்குழ லாரிற்சிக் கோமிந்த மாநிலத்திற்
சோறோங் கரிக்கும் பிணிகா ளினியெங்குச் சூழ்வதுவே.

(இ - ள்.) இந்த மா நிலத்தில் - இந்தப்பெரிய பூமியில், சோறு ஓங்கரிக்கும் பிணிகாள் - அன்னத்துவேஷத்தை யுண்டாக்கும் நோய்களே!, எக்காலும் கரிக்கு பொய் கூறோம் - எப்பொழுதுஞ் சாட்சியின்கண்ணே பொய்யைச்சொல்லமாட்டோம், கரி குழலாரில் சிக்கோம் - கரியகூந்தலுடைய மாதரிற்கட்டுண்ணோம், கூடலை கொண்டு - மதுராபுரியை யடைந்து, தவம் பேறு ஓங்கு - தவப்பயன் வளரப்பெற்ற, அரிக்கு உற்ற தங்கை - விஷ்ணுமூர்த்திக்குகந்த தங்கையாகிய, அம் சேல் கண் பிராட்டி அன்பில் மாறோம் - அங்கயற்கண்ணியரசியினது அன்பிற் பிரியமாட்டோம், இனி சூழ்வது எங்கு - (நீங்கள்) இனிச்சூழுமிடமாவன யாவை?

வதிந்தது வந்தது வென்றது கொண்டது மண்ணிற்றள்ளி
மிதித்தது வந்தது கைலாயம் வேள்வித் திசைவிடையோன்
கொதித்தது வந்ததும் பாத்தா னவனருங் கூடலென்ப
வுதித்தது வந்தது ரோகமற் றார்க்கரு ளுத்தமியே.

(இ - ள்.) உதித்த துவந்தம் துரோகம் அற்றார்க்கு அருள் உத்தமி - சனித்ததின் றொடர்பாகிய துரோகத்தி னீங்கினோர்க்குக் கடாட்சிக்கின்ற மீனாட்சிதேவியார், வதிந்தது வந்தது வென்றது கொண்டது மண்ணில் தள்ளி மிதித்தது உவந்தது - வசித்தது மூண்டாயதும் வென்றதும் (மணம்) கொண்டதும் பூமியிற் கிடத்தித் துகைத்தது மகிழ்ந்தது மாயவைகள், கைலாயம் வேள்வி திசை விடையோன் கொதித்த துவம் ததும்பா தானவன் அரும் கூடல் என்ப - கைலாயம் யாக குண்டம் திக்குகள் சோமசுந்தரக்கடவுள் கொதித்த நிலைபசையாத மயிடாசுரன் அருமையுற்ற மதுராபுரி யென்று அரிய நூல்களினாலே கூறப்படுகின்றன. (உரு)

மிக்க மடங்கலை யாற்றெதி ரேடு விடுத்தமணத்
தக்க மடங்கலைக் கூடலி னாற்றுவித் தஞ்சரணிற்
புக்க மடங்கலை வாகன மாக்கொளும் பூரணிகாத்
திக்க மடங்கலை வெய்தா தெம்முள்ளு மிருப்பியல்பே.

(இ - ள்.) மடங்கும் அலை மிக்க - சுருண்டுவரும் அலைமிகுந்த, ஆற்று எதிர் ஏடு விடுத்து - வைகைநதியி லெதிர்ந்தேறும்படி ஏட்டைச் செலுத்தி, கூடலின் அமணம் தர்க்கம் அடங்கலை ஆற்றுவித்து - மதுராநகரின்கண் சமணசமையவாத மொடுங்குதலைச் செய்வித்து, அம் சரணில் புக்க மடங்கலை - அழகிய சரணிற் புகுந்த சிங்கத்தை, வாகனமாய் கொள்ளும் பூரணி - வாகனமாக் கொள்பவளாகிய பூரணியே!, இக்கு அமடு அம் கலைவு எய்தாது காத்து - ஆபத்தாகிய மோசங்களுஞ் சீர்மையின் சிதைவு மடையாது காப்பாற்றி, எம் உள்ளும் இருப்பு இயல்பே - எம்முள்ளத்தும் (நீ) இருத்தலியல்பன்றோ. (உசு)

இரும்புந்தங் கங்கணஞ் செய்வோ மதனெடுத் தேவுசரச்
சுரும்புந்தங் கங்கணம் பாவிலை கூடலிற் சூழ்திரெம்மை
விரும்புந்தங் கங்கணங் கெய்தா தெனும்பல வேடர்க்கலாற்
றிரும்புந்தங் கங்கணம மைக்குத வார்கெடுந் துற்சனரே.

(இ - ள்.) கெடும் துற் சனர் - அழியத்தக்க வுன் மத்தர்கள், இரும்பும் தங்கம் கணம் செய்வோம் - இரும்பையுந் தங்கமாக நிமிடத்துச் செய்வோம். மதன் எடுத்து ஏவும் சரம் சுரும்பு உந்து அங்கம்

கள் நம்பால் இல்லை - மன்மதனெடுத்து விடுக்கின்ற கணைகளாகிய வண்டினங்குடைடயத்தக்க அவயவங்கள் எம்மிடத்திலில்லை, (ஆதலின்) எம்மை கூடலில் சூழ்திர் - நம்மைக் கூடற்பதியாக வளையுங்கள், (இங்ஙன்) விரும்புந்தம் கங்கு அணங்கு எய்தாது என்னும் பல வேடர்க்கு அல்லால் - ஆசையுற்றோர் தம் பக்கலிற் றுன்பமடையாதென்று வஞ்சிக்கும் பலவேஷதாரிகளுக்கல்லாது, துரும்பும் தங்கு அம் கண் அம்மைக்கு உதவார் - முற்றுநிறைந்த வழங்கிய நேத்திரங்களுடைய பிராட்டியாரின் பொருட்டுக் கொடார்கள். (உ௫)

சனித்துக் கடாயெனப் போதனிங் கோட்டச் சரமதன்விற் [ற்
குனித்துக்கடாவலைநந் தோயென் றிருதலைக் கொள்ளியைப்போ
றுனித்துக் கடாநம னங்கோட்டத் தொல்வினை சூழ்பிழையை
மனித்துக் கடாட்சமிட் டாள்வாய் மதுரை மணப்பவளே.

(இ - ள்.) மதுரை மணப்பவளே - மதுராபுரியி னித்தியகல்யாணியே!, அடாய் சனித்து உக்கு என்ன - தகாய் பிறந்திறக்குதியென்று, போதன் இங்கு ஓட்ட - பிரமன் கீழே தள்ளவும், மதன் வில் குனித்து சரம் கடாவ லைநந்தோய் என்று - காமன் சிலையை வளைத்துப் பாணங்களாற் றுக்கப்பட்டு மெலிந்தவனே யென்று, கடா நமன் துனித்து அங்கு ஓட்ட - கடா வேறுமெமன் றண்டித்து மேலே செலுத்தவும், இருதலை கொள்ளியைப்போல் - இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்பை யொப்ப, தொல் வினை சூழ் பிழையை மன்னித்து - பழவினை பற்றியுழலத்தக்க குற்றங்களை மன்னித்து, கடாட்சம் இட்டு ஆள்வாய் - கருணையைத் திரட்சிப்பாயாக. (உ௬)

மணத்தகைக் குங்கொடு நோய்தீர் மருந்திந்த வையகத்திற்
பணத்தகைக் குந்தி குளிர்நீர்த் தடாகம் பவத்திலுரங்
தணத்தகைக் குந்து மரக்கலமாகுஞ் சதா சிவையாம்
வணத்தகைக் குங்குமந் தோய்கூட லம்மை மலர்ப்பதமே.

(இ - ள்.) சதா சிவையாம் கூடல் அம்மை வண்ணம் தகை குங்குமம் தோய் பதம் மலர் - எக்காலு மங்கலமுற்றவளாம் மதுராபுரியில் வீற்றிருக்கு மீனாட்சிதேவியாரது வண்ணச் சிறப்புவாய்ந்த குங்குமந்தோய்ந்துள்ள திருவடித் தாமரைகள், மணத்த கைக்கும் கொடும் நோய்தீர் மருந்து - (மதுர) வாசனையுடையவைகளை அருவருக்கச் செய்கின்ற கொடிய பிணிகளைப் போக்கு மமுதாகும், இந்த வையகத்

தில் - இந்தப் பூவுலகில், பணம் தகைக்கு - தனத்தாபத்திற்கு, உந்தி குளிர் நீர் தடாகம் - வயிற்றைக் குளிரச் செய்யும் நீர்த்தடாகமாகும், பவத்தில் உரம் தணந்த கைச்கு - பிறவிக் கடலில் அழுங்கி வலியிழந்த கரங்களுக்கு, உந்து மரக்கலம ஆகும் - செலுத்துதற்குகந்த கப்பலாகும், [தணத்த என்பது - வலித்தல் விகாரம்] (உஎ)

பதம்பத்தை யாயிரந் தாண்மானங் காத்தொரு பாலனுக்காக்
குதம்பத்தை யானன மாயுதித் தோனயன் கூடலுற்று
நிதம்பத்தை யாயிரங் கண்ணு யவன்றொழு நித்தையின்பேர்ச்
சதம்பத்தை யாயிரங் காதநெஞ் சேயறுஞ் சங்கடமே.

(இ - ள்.) இரங்காத நெஞ்சே - உருகாத மனமே!, பதம் பத்தையாய் இரந்தாள் மானம் காத்து - திருவடிப் பற்றுடையாளாய் வேண்டிக்கொண்ட துரோபதையின் மானத்தைக் காப்பாற்றியும், ஒரு பாலனுக்காய் - ஒப்பற்ற பிரகலாதன் பொருட்டு, தம்பத்து ஐயானனமாய் கு உதித்தோன் - தூணிலிருந்து (நர) சிங்கமாகப் பூமியிலவதரித்தும் அருளிய விஷ்ணுமூர்த்தியும், அயன் - பிரமாவும், நிதம்பத்தை ஆயிரம் கண்ணுயவன் - யோனிகளை யாயிரங் கண்களாகப் பெற்ற இந்திரனும், கூடலுற்று - மதுராநகரை யடைந்து, தொழும் நித்தையின் பேர் சதம் பத்தை ஆய் - வணங்கத்தக்க நித்தியையாகிய மீனாட்சி தேவியாரின் திருநாம மாயிரங்களையுந் தியானிப்பாயாயின், சங்கடம் அறும் - துன்பமொழியும். (உஅ)

கடக்குஞ் சரம்பரி தேராட்க ளோடு கலந்துவெம்போ
ரடக்குஞ் சரம்பரித் தாங்கரிப் பீர்மது ரைக்கலிரேற்
றடக்குஞ் சரம தசைவரு மாட்டெம தூதர்முன்னர்க்
கிடக்குஞ் சரந்திரும் பாதோடு போதெது கிட்டுவதே.

(இ - ள்.) கடம் குஞ்சரம் பரி தேர் ஆள்களோடு - மதங்கொண்ட யானை குதிரை யிரதங் காலாளோடு, வெம்போர் கலந்து - வெய்ய போர்முகத் தடர்ந்து, அடக்கும் சரம் பரித்து ஆங்கரிப்பீர் - (பகைஞரை) வெல்லு மம்புகளைக்கொண்டு வீரவாதம் பேசுகின்றவர்களே!, மதுரைக்கு அல்லீரேல் - கூடற்புரிக்காட்படீராயின், துடக்கும் சரம தசை மாட்டு வரும் எமன் தூதர் முன்னர் - (கபங்) கட்டுமரண சமையத்துக் கடாவில் வரு மெமதூதர் முன்பாக, கிடக்கும் உம் சரம் - (நீட்டி நிமிர்ந்து) கிடக்கின்ற வுமது பிராணன், திரும்பாது ஓடும் போது கிட்டுவது ஏது - மீளாதகலுங்காற் றுணைவருவதியாது? (உக)

கிட்டிக்கு மாரனை நீற்றிப்பின் கூடலிற் கீரனொடு
செட்டிக்கு மாரனை யுங்காத்த துன்பதி சித்தமெனப்
புட்டிக்கு மாரனை வோரும் புகழினும் போழும்பன்றிக்
குட்டிக்கு மாரனை யாய்முலை யீந்தது கோமகளே.

(இ - ள்.) கோமகளே - இராஜகுமாரியே; கிட்டு இக்கு மாரனை நீற்றி பின் - நெருங்கிய (வில்) கரும்பையுடைய காமனை யெரித்துப் பின்னர், (அவனையும்) கூடலில் கீரனொடு செட்டி குமாரனையும் காத்தது - மதுராபுரியில் நக்கீரனொடு வைசிய குமாரனையு மிரட்சித்தது, உன் பதி சித்தம் என்ன - நினது மணாளனாகிய சொக்கலிங்க மூர்த்தியின் திருவுள்ளமென்று, மார் புட்டிக்கும் அனைவோரும் புகழினும் - நெஞ்சிற் றிண்ணமடைகின்ற யாவரும் போற்றினும், போழும் பன்றி குட்டிக்கும் - பிளக்கும் பன்றிக்குட்டிகளுக்கும், அன்னையாய் முலை ஈந்தது ஆர் - தாயாகி முலைப்பாலை யுதவிய தியார்? நீயன்றோ. (௰)

கோமாதங் கத்தினைப் பண்டொழித் தோங்கிடுங் கூடனகர்க்
கோமாதங் கத்தினைப் பாதத்தை நற்றுணைக் கொள்ளின்மயங்
கோமாதங் கத்தினை யோமன் னவளருள் கூரவணங்
கோமாதங் கத்தினைப் போதும் பொறுதுழல் கோரநெஞ்சே.

(இ - ள்.) தினை போதும் தங்க பொறுது உழல் கோரம் நெஞ்சே - அற்பநேரமேனுந் தரிக்கச்சகியா தலைகின்றகொடிய மனமே! பண்டு - முற்காலத்து, கோ மாதங்கத்தினை ஒழித்து - (மாயப்) பசுவையும் யானையையுமழித்து, ஓங்கிடும் கூடல் நகர் கோமாது - பிரகாசிக்கின்ற மதுராபுரிக்கரசியினது, அங்கத்தின் ஐ பாதத்தை நல் துணை கொள்ளின் - சொரூபத்து அழகியசரணங்களைத் துணையாகக்கொள்வோமாயின், ஆதங்கத்தில் மயங்கோம் நையோம் - தீங்கின்மயங்கோமெலியோம், (ஆதலின்) அன்னவள் அருள் கூர வணங்கோமா - அம்மீனாட்சிதேவியாரது கருணைபெருகும்படி பணியமா. (௰௧)

நெஞ்ச மணக்குங் குமக்கொங்கை மீனவ ளேர்ந்தரனைக்
கொஞ்ச மணக்கு மரியாய்ச் சிவமதங் கொண்டிலவம்
பஞ்ச மணக்கும் பெனவோட்டி யாளுமிப் பாரினிற்பொற்
கஞ்ச மணக்குந் திருக்கூட லாவிக் கதிதருமே.

(இ - ள்.) குங்குமம் கொங்கை மீனவள் - செஞ்சாந்தணிந்த தனங்களையுடைய மீனாட்சிதேவியார், அரனை நேர்ந்து - சிவபிரானை யெதிர்ந்து, நெஞ்சம் அண்ண கொஞ்சு அம் மணம் குமரியாய் - மன

ம்பொருந்தக்கொஞ்சத்தக்க அழகியமணமங்கையராய், சிவமதம் கொண்டு - சைவசமயத்தைமேற்று, அமணம் கும்பு இலவம்பஞ்சு என்ன ஓட்டி - சமணக்கூட்டத்தை யிலவம்பஞ்சென்னும்படி சிதறச்செய்து, ஆளும் இ பாரினில் - ஆட்சிசெய்கின்ற இந்தப்பூவுலகின்மீது, பொன் கஞ்சம் மணக்கும் திருகூடல் - பொற்றாமரைகமழும் பெருமையுற்ற மதுராபுரியானது, ஆவி கதி தரும் - சீவன்முத்தியைக் கொடுக்கும் ()

தருப்பையி லாதனந் தோலா லுடைசடை தாளொன்றுசூழ்
நெருப்பையி லாவிர தங்கொண்டு யோக நெறிக்கியைந்து
பொருப்பையி லாவுடை யாருநின் கூடலைப் போற்றிலரேற்
கருப்பையி லாவருட் கென்செய்வ ரேர்கயற் கண்மணியே.

(இ - ள்.) தருப்பையில் ஆதனம் - தர்ப்பையா லாசனத்தையும், தோலால் உடை - தோலாலுடையையும், சடை - சடைமுடியையும், சூழ் நெருப்பு - பஞ்சாக்கினியையும், தாள் ஒன்று - (நிலையில்) ஒற்றைக்காலையும், அயிலா விரதம் கொண்டு - உபவாசவிரதத்தையுங் கொண்டு, யோகம் நெறிக்கு இயைந்து - யோகமார்க்கத்திற் கேற்றுமையாய், பொருப்பை இல்லை உடையாரும் - குகையை வீட்டாகப்பொருந்திய துறவினரும், நின் கூடலை போற்று இலரேல் - நின்னையும் (நினக்குகந்த) மதுராநகரையுந் தியானித்திரா ரரயின், கருப்பையிலா அருளுக்கு என் செய்வர் - கர்ப்பவாசமில்லாமற் செய்யத்தக்ககிருபையைப்பெறுவதற் கென்னசெய்வார்? (௯௯)

கண்ட விடத்தினன் றென்கூடல் வாழ்கநின் கைப்பிடித்தோன்
கொண்ட விடத்தனை நின்னதன் றோபண்டு கூற்றையுதைத்
தண்ட விடத்தக்க தல்லவென் றன்பர்க் களித்தவடி
யெண்ட விடத்துணை யாம்போதி னெற்கு மெதிர்ந்தருளே.

(இ - ள்.) கண்டம் விடத்தினன் - கழுத்தில் விஷத்தையுடையானும், தென் கூடல் வாழ்க நின் கை பிடித்தோன் - தென்மதுராபுரிவாழ்க்கையின்பொருட்டு நின்னைப்பாணிக்கிரகணஞ் செய்தானுமாகியசிவபெருமான், இடத்து கொண்ட அன்னை - இடப்பாகத்திற்கொள்ளப்பெற்ற அம்மையே!, பண்டு - முற்காலத்து, அண்டவிட தக்கது அல்ல என்று கூற்றை உதைத்து - கிட்டவிடத்தக்கதில்லையென்றுநினைந்து மறலியையுதைத்துத்தள்ளி, அன்பர்க்கு அளித்த அடி நின்னது அன்றோ - மார்க்கண்டமுனிவர்க்குதவிய திருவடி நின்னதல்லவோ? (ஆதலினதுபோல) எற்கும் - அடியேற்கும்; எண் தவிடு அ துணை

ஆம் போதின் - சாணுதிகள் அனுபவஅவசரத்தக்க (மரண) சமையத்தில், எதிர்ந்து அருள் - தரிசனமுதவிக் காப்பாயாக. [சிவபிரான்கூற்றையுதைத்ததென்பது அம்பிகைபாகத்துக்குரிய இடப்பாத மானது பற்றி அம்மைக்கேற்றப்பொருள் சித்தித்தது.] (௬௪)

அருந்தக்கா தம்பல சென்றிரந் தற்பரை யம்புயப்பூப்
பொருந்தக்கா தங்க மலேச்சிலை யாவென்று போற்றலின்னுத்
தருந்தக்கா தங்கெது மம்பிகை கூடலேச் சாரப்பெறீர்
வருந்தக்கா தந்தக னேவிடு தூதரை மாற்றரிதே.

(இ - ள்.) அம்பிகை கூடலை சார பெறீர் - மீனாட்சிதேவியாரின்மதுராபுரியை யடையப்பெறாதவர்களே!, அருந்த பல காதம் சென்று இரந்து - உண்ணற்பொருட்டு நெடுந்தூரஞ்சென்றுயாசித்து, அற்பரை - உலோபியரைநோக்கி, அம்புயம் பூ பொருந்து அக்கா தங்கம் மலேசிலேயா என்று போற்றல் - தாமரைமலரையொத்த கண்ணனே பொன்வரையை வில்லாகவளைத்தவனேயென்று துதிப்பது, இன்னு - தரும் அங்கு எதும் தக்காது - துன்பத்தைக்கொடுப்பதல்லது அவ்விடத்தியாதொன்றுமேனுங் கிடைக்கமாட்டாது, (அன்றியும்) வருந்த காது அந்தகன் ஏவிடும் தூதரை மாற்று அரிதே - நோகும்படி வதைக்கத்தக்க காலனால்விடப்பட்டுவருகிற தூதரைவிலக்குவ தரிதாகமுடியும்.()

அரிசிரங் கூன்முதற் றேசாந் தரச்சரக் காழியிற்பாய்
விரிசிரங் கூனுட னுவாயிற் கொண்டு விலேக்களிக்கும்
பரிசிரங் கூனமி லாக்கூட லம்பிகைப் பற்றலிரேற்
சொரிசிரங் கூனிழி நோய்மீத லன்றிச் சுகமரிதே.

(இ - ள்.) ரங்கூன்முதல் தேசாந்தரம் அரிசி சரக்கு - இரங்கூன் முதலியதேசாந்தரங்களிலுற்ற அரிசியையும் (ஏனைய) வஸ்துக்களையும், ஆழியில் - கடலிற்செல்லுகின்ற, பாய் விரி சிரம் கூன் உடல் நாவாயில் கொண்டு - பாய்விரித்துள்ளதலையையும் வளைந்தவடிவத்தையுமுடைய கப்பலிற்கொண்டு, விலைக்கு அளிக்கும் பரிசீர் - விக்கிரையஞ்செய்யும் வியாபாரிகளே!, அங்கு - அச்சமையத்து, ஊனம் இல்லா கூடல் அம்பிகை பற்று அல்லீரேல் - குறைவற்ற மதுராபுரிக்கரசியாகிய மீனாட்சிதேவியார்க் கன்புபூண் டிரீராயின், சொரிசிரங்கு ஊன் இழிநோய் மீதல் அன்றி - அப்பியசிரங்கும் நிணநீர்வடியும் வியாதிகளுமே மிகுவதல்லது, சுகம் அரிதே - இலாபங்கிடைப்பது அருமையாய்முடியும். (௬௫)

சுகந்தன தானியஞ் சுற்றநெஞ் சேமிகச் சூழ்ந்துறினு
மிகந்தன தானியந் தோர்நினை யாயினி யேனுமற்ப
ரகந்தன தானிய மாவென் றடாதற மாற்றுதியே
லுகந்தன தானிய மிப்பாள் மதுரை யுமைதுணைக்கே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!, தனதானியம் சுற்றம் சுகம் மிக சூழ்ந்து உறினும் - தனதானியாதிசெல்வங்களுஞ் சுற்றத்தாருஞ் சுகம்பெருகுமாறுவளைந்திருப்பினும், அந்தோ இகந்தனது ஆனி நினையாய் - ஐயோபிறப்பினதிறபை யுணராய், இனி யேனும் - இனியாயினும், அற்பர் அகம் - அறிவீனரிடத்து, தனதா நியமா என்று அடாது. தனபதியே புண்யவானே யென்றுபுகழ்ந்துசாராது, அறம் ஆற்றுதியேல் - அம்மைக்குகந்த பணிவிடைசெய்வாயாயின், மதுரை உமை - மதுராபுரித்தேவி, துணைக்கு உகந்தன தான் நியமிப்பாள் - காத்தற்குரியவைகளைத் தானாகவே நிலைபெறவருள்வாள். (கூஎ)

துணைக்கான கஞ்சநின் பாதத்தை யேத்துஞ் சுகத்தையிழந்
திணைக்கான கங்களுந் தேயநொந் தேனலைந் தெம்மருங்கும்
பணைக்கான கந்தருந் தேன்பாயுங் கூடற் பதிக்கணியே
கணைக்கான கங்கட்டி யாவிடு மோவிளங் கன்றினையே.

(இ - ள்.) பணைக்கு ஆன் நகம் தரும் தேன் பாயும் - வயல்களுக்கு இடபகிரியினின்றுபெருகுந் தேனருவிபாய்கின்ற, கூடல் பதிக்கு அணியே - மதுரைத்தலத்துக்கலங்காரமாயுள்ளவளே!, துணைக்கு ஆன நின் கஞ்சம் பாதத்தை ஏத்தும் சுகத்தை இழந்து - காத்தற்குரியநினது பங்கையத்தாளைப்போற்று மின்பத்தைவிடுத்து, இணை கால் நகங்களும் தேய எம் மருங்கும் அலைந்து நொந்தோன் - இரண்டு கால்களின்நகங்களுஞ் சிதையும்படி எத்திசையினுந்திரிந்து வருத்தமுற்றேன், ஆ இளம் கன்றினை கண்ணைக்கட்டி கானகம் விடுமோ - பசுவானது இளங்கன்றின் கண்களைமறைத்துக்காட்டில்விடுத்திருக்குமோ இராதன்றே? (கூஅ)

கன்றை யலுக்கும் பசுவிருந் தாலுங் கருணையிலை
யென்றை யலுக்கும் படிகண்ணை நீக்கு மிமையுமுண்டோ
பொன்றை யலுக்குந் தருங்கூட லம்பிகை போந்துதிசை
வென்றை யலுக்கும் பகற்குமெட் டாயருள் வேட்குவனே.

(இ - ள்.) பொன் தையலுக்கும் தரும் கூடல் அம்பிகை - பொன்னனையாள் ளென்னுந் தாசிக்கு மளித்ததாகிய மதுராபுரியின்

மீனாட்சிதேவியே!, திசை போந்து வென்றை - திக்குகளிற் சென்று வெற்றிகொண்டவளே!, பகற்கும் அல்லுக்கும் எட்டாய் - பகலிரவென்னுங் காலங்களைக் கடந்து நிற்பவளே!, கன்றை அலுக்கும் பசு இருந்தாலும் - (தானீன்ற) கன்றை வெறுக்கும் பசுவிருப்பினும், கருணை இல்லை என்று - கிருபையில்லையென்று, உக்கும்படி கண்ணை அயல் நீக்கும் இமையும் உண்டோ - சிதையும்படி நேத்திரங்களைப் புறந்தள்ளு மிமையுமுளதோ, (இல்லையாதலின்) அருள் வேட்குவன் - (உனது) காத்தலை விரும்புகின்றேன். (௩௯)

குவித்துவ சந்தனுங் கைகா னடுங்கக் குறைகளைநீக்
குவித்துவ சந்தனைக் காக்குநெஞ் சேயதைக் கூறுவன்கேள்
கவித்துவ சங்கத் தினரேத்துங் கூடற் கயற்கணன்னை
கவித்துவ சம்பெற்ற தேர்ப்பாகன் பின்னை கழற்றுகளே.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!, (விசேடமிருக்கின்றது) அதை கூறுவன் கேள் - அதனைச்சொல்லுகின்றேன் கேட்பாயாக, கவி துவசம் பெற்ற தேர் பாகன் பின்னை - அநுமக்கொடியை யுடைய தேர்ச் சாரதியாகிய விஷ்ணுமூர்த்தியின்தங்கையும், கவித்துவ சங்கத்தினர் ஏத்தும் கூடல் கயல்கண் அன்னை - கவிப்புலமையிற்சிறந்த சங்கத்தார்போற்றத்தக்க மதுராபுரியின்மீனாட்சிதேவியுமாகிய மாதாவின், கழல் துகள் - திருவடித்தூளியானது, வசந்தனும் கைகுவித்து கால் நடுங்க - மன்மதனுங்கரங்கூப்பிக் கால்பதறும்படி, குறைகளை நீக்குவித்து - குற்றங்களைப்போக்குவித்து, தனக்கு வசம் ஆக்கும் - (நின்னையும்) தன்வசப்படுத்திக்கொள்ளும். (௪௰)

துகளத் திரஞ்சிறி தென்னுநெஞ் சோதியர் சூதறியா
துகளத் திரந்தின மார்பூ டுருவத் துணைக்குமிகுந்
துகளத் திரந்தவிக் கத்திரி வீர்வலஞ் சூழலெப்போ
துகளத் திரந்தவன் றங்கையைக் கூடற் சுபாலயத்தே.

(இ - ள்.) துகள் அத்திரம் சிறிது என்னும் நெஞ்சு ஓதியர் - தூளியினிலையில்லாமையை யற்பமென்றுசொல்லத்தக்க மனத்தையுங் கூந்தலையுமுடைய வேசையரின், சூது அறியாது - வஞ்சத்தையுணராது, கள் அத்திரம் தினம் மார்பு ஊடு உருவ - தேன் (வடியுமலர்) வாளியானது நாள்தோறும்மார்பூடுதைக்கும்படி, துணைக்கு களத்திரம் மிகுந்து தவிக்க திரிவீர் - உதவியின்பொருட்டு மனைவியானவள்மிகவும்வருந்தவிடுத்து (ஊர்சுற்றியாய்) அலைகின்றவர்களே!, களத்து இரந்தவன் தங்கையை - (போர்க்) களத்திற் (கர்னனிடம்) யாசித்தவிஷ்ணு

மூர்த்தியின் தங்கையாகிய மீனாட்சி தேவியை, கூடல் சுபம் ஆலயத் து வலம் சூழல் எப்போது - மதுராபுரிக்கு மங்களமாகிய கோயிலின் கண்ணே பிரதட்சணஞ்செய்வ தெக்காலமென்றிருக்கின்றீர்கள். (சுக)

ஆலைக் கரும்பவ ளங்கநின் னாசையி னாகிமுத்த
மாலைக் கரும்பவ ளந்தரு வாரையும் வைதுகண்ணீர்
வேலைக் கரும்பவ ளம்பாலு ணாளென மேவுசந்தின்
பாலைக் கரும்பவ ளங்கூட லம்மை பகையுமக்கே.

(இ - ள்.) நின் ஆசையின் அவள் அங்கம் ஆலை கரும்பு ஆகி - நின்மீது காதலாலே யவள் சரீரமானது ஆலையிலிட்ட கரும்பைப் போல் நைந்து, மாலைக்கு முத்து அரும் பவளம் தருவாரையும் வை து - மாலைக் கருமையாகிய முத்துக்களையும் பவளங்களையுங் கொடுப்ப வரையும் வெறுத்து, வேலைக்கு கண் நீர் அரும்ப - கடலுக்காகும்படி கண்ணீர் சொரிய, வள்ளம் பால் உண்ணாள் என்ன - கிண்ணத்திலுள்ள பாலுங்குடியா ளென்று பொய்சொல்லி, மேவு சந்தின் பால் ஐக்கியர் - வருகின்ற தூதின ரிடமாய் வசப்படுபவர்களே, உம்பர் வளம் கூடல் அம்மை உமக்கு பகை - விண்ணுலகப் பெருமைபூண்ட மதுராபுரி யின் மீனாட்சிதேவியாருமக்குப் பகையாயென்ன. (சுஉ)

பகைவரைக் கும்பியி னோயாற் பணிந்துயிர் பாழ்த்தவுடற்
புகைவரைக் குந்தனத் தாசைப் பிசாசெனைப் புல்லமனத்
தகைவரைக் கும்விதிக் கென்செய்கு வேன்முனி சாற்றவருந்
துகைவரைக் கும்பத நல்கால வாயிற் சுமங்கிலியே.

(இ - ள்.) முனி சாற்ற வருந்து கை வரைக்கும் பதம் நல்கும் ஆலவாயில் சுமங்கிலியே - (தூர்வாச) முனிவரது சாபத்தினாலே துய ரடைந்த யானையாகிய ஐராவதத்திற்குங் கதியுதவிய மதுரை நகரிற் சுமங்கிலியாகிய பிராட்டியே, கும்பியின் நோயால் - வயிற்றின்கொடு மையினாலே, பகைவரை பணிந்து - சத்துருக்களையும் வணங்கி, உயிர் பாழ்த்த உடல் புகை வரைக்கும் - ஆவிநீங்கிய சரீரமெரிந்து நீறுமள வும், தனத்து ஆசை பிசாசு என்னை புல்ல - தனவிச்சை யென்னும் பேயான தென்னைப் பிடித்தலைக்குமாறு, மனம் தகைவு அரைக்கும் விதிக்கு என் செய்குவேன் - மனக் கட்டைச் சிதைக்கும் விதிக்கு (நின்னருட்கொண்டல்லது மற்று) என்ன செய்யக்கடவேன். (சுங)

சலைக்குந் திவாகன மாயா தணைந்தரைக் காசெனினு
முலைக்குந் திவாகன மாயும் விடாரின் முயக்கம்விரி
தலைக்குந் திவாகனம் போற்கொண் டவரையுந் தள்ளையன்றோ
நிலைக்குந் திவாகனங் கற்கீந்த கூடலந் நேத்திரியே.

(இ - ள்.) அனங்கற்கு வாகு நிலைக்கு உந்தி ஈந்த - (எரிபட்ட) மன்மதனுக்கு வடிவத்தை (முன்) நிலைமைக்குச் செலுத்தி யுதவிய, கூடல் அம் நேத்திரியே - மதுராபுரிக்கு வந்த வழகிய மீனாட்சியம்மையே, திவாகனம் ஆயாது - காலத்தையு முயர்வையுங் கவனியாது, கலைக்கும் அணைந்து - சிலைக்கும் புணர்ந்து, உந்தி முலைக்கு வாகனம் ஆயும் - வயிறானது முலைக ளேறியிருக்கு மிடமாகியும், அரை காசு எனினும் விடாரின் - (செம்பு) அரைக்காசுவரினும் கலப்பவர்களது, மயக்கம் விரி தலை குந்தி - கலவியையும் தெங்கு பனை மரங்களின் கள்ளையும் வாகு அன்னம்போல் கொண்டவரையும் தள்ளை அன்றோ- கைக்கொண்ட வழுதை யொப்ப வுண்டவரையும் (பின்னர்த்தெளிந்து போற்றுவாராயின்) நீக்கமாட்டாயல்லவோ. (சுசு)

திரிபுரத் தார்ப்பொருங் கைத்தனு மாழைச் சிலையென்கினுந்
தரிபுரத் தாற்றருக் குண்டுருகாது சதிக்கு நெஞ்சே
கரிபுரத் தான்றொழுங் கூடலெம் மான்கொள்க யற்கண்ணியின்
பரிபுரத் தாட்கம்மி யாகுதி மாமணப் பந்தரினே.

(இ - ள்.) தரி புரத்தால் தருக்கு உண்டு உருகாது சதிக்கும் நெஞ்சே - வகித்த வுடலாலே யகங்கரித்து இளகாது வஞ்சிக்கு மனமே, கரி புரந்தான் தொழும் கூடல் எம்மான் - கஜேந்திரனை யிரட்சித்த விஷ்ணுமூர்த்தி போற்றத்தக்க மதுராபுரிக் கெழுந்தருளிய வெமது சொக்கலிங்கப் பெருமான், திரி புரத்தார் பொரும் கை தனு மாழை சிலை என்கினும் - முப்புரத்தாரை வெற்றிகொள்ளும்பொருட்டுக் கைக்கொண்ட வில்லானது பொன்மலை (யாதலிற் குழைந்தது) என்பாயேனும், மா மணம் பந்தரில் - பெருமைதங்கிய கல்யாண மண்டபத்தில், கொள் (அச்சிவபெருமானது கரத்தாற்) பற்றப்பொருந்திய, கயல் கண்ணியின் பரிபுரம் தாட்கு - மீனாட்சிதேவியாரின் சதங்கை யொலிக்கின்ற திருவடியை வைப்பதற்கு, அம்மி ஆகுதி - அம்மியாக வமையக்கடவாய். (சுரு)

பந்திக்கப் பம்பர மானமுங் கூடலிற் பார்த்திடினும்
நிந்திக்கப் பம்பர மாவார் விருந்தன்பை நேர்பெறுமேற்
சந்திக்கப் பம்பரந் தீவளி பூமயத் தற்பரையை
வந்திக்கப் பம்பர மாதரும் போதரு மானுவரே.

(இ - ள்) நிந்திக்க பம்பரம் ஆவார் - தூஷிப்பதற்கு விரைவாய்த்திரிபவர், அப்பம் பரமான்னமும் பார்த்து பந்திக்கு இடினும் - பணியாரங்களையும் மேன்மையுற்ற அன்னங்களையும் நோக்கிப்பந்திக்

கிட்டபோதினும், விருந்து - அவ்விருந்தோம்பலானது, கூடலின் அன்பை நேர் பெறுமேல் - மதுராபுரியின்மீதுற்ற வுள்ளன்பைநிகர்பெறுமாயின், வந்திக்க பம்பு அரமாதரும் போதரும் - பணிதற்குநெருங்குகின்ற தேவமங்கையரும் கமலாதனிகளும், சந்திக்கு அப்பு அம்பரம் தீ வளி பூ மயம் தற் பரையை - கலக்கின்றபஞ்சபூதபரிபூர்ணையாகிய மீனாட்சிதேவியாரை, மானுவர் - ஒப்பாவார். (சசு)

மானங் கலந்த கரும்போ தகமும் வகுக்கமென்பீர்
வானங் கலந்த கருந்துமுன் கூடலை வாழ்த்துதிரேற்
கூனங் கலந்த சரும்போ துளரிற் குலையவிடாள்
மீனங் கலந்த கரும்போ தனவிழி வித்தகியே.

(இ - ள்.) மானம் கல்லம் தகரும் போதகமும் வகுக்கம் என்பீர் - மானமாயிருக்கப்படியோம் அஜமுங்கஜமும்பகுத்தறியோமென்றுதவிப்பவர்களே!, அல் அந்தகர் வான் அங்கு உந்து முன் - கரியகாலதூதர்வெளியினிடமாய்த் தள்ளுதற்கு முன்னரே, கூடலை வாழ்த்துதிரேல் - மதுராநகரைப்போற்றுவீராயின், மீனம் கலந்த கரும் போது அன்ன விழி வித்தகி - கயலைப்பொருந்திய நீலோற்பலத்தையொத்த கண்களையுடைய பிராட்டியார், கூன் அம் கலம் தகரும்போது - வளைந்தவழகிய கப்பலுடையுஞ்சமையத்து, உள்ளாரில் குலையவிடாள் - (அக்கப்பலின்) உற்றுரையொப்பக் குலையும்வண்ணம் விடுத்திராள்.()

வித்தேக மண்டலம் போருகங் கூடலின் மேவவிருட்
டத்தேக மண்டல மீதென்கொ லோசெயுந் தாவரசம்
பத்தேக மண்டல முற்றோ ரகம்பயில் பைங்கிள்ளையே
முத்தேக மண்டலந் தீர்த்தாள் கதிரின் முறையுகந்தே.

(இ - ள்.) வித்தே - மூலமே, தாவரம் சம்பத்தே - நிலைத்தசெல்வமே, கமண்டலம் உற்றோர் அகம் பயில் பைங்கிள்ளையே - துறவினருள்ளத் துறையும் பச்சைக்கிளியே!, கம் அண்டு அம்போருகம் - நீரிற்பொருந்திய தாமரையானது, இருள் அல் தத்து ஏக - இருள்மூடிய விராக்காலமாகிய ஆபத்துநீங்கற்கும், கூடலில் மேவ - மதுராபுரியில் வாழ்தற்கும், மண் தலம் மீது என்கொலோ செய்யும் - பூதலத்தின்கண்ணே புரிவதியாது? (ஒன்றுமில்லையன்றோ அங்ஙனுற்றும்) கதிரின் மூறை உகந்து - இரவியின் முறையைபோல மகிழ்ச்சியடைந்து, முத்தேகம் மண்டு அலம் தீர்த்து ஆள் - மூன்றுவிதமான சரீரம்நெருங்கத்தக்க சஞ்சலத்தையொழித்து (எம்மைக்)காப்பாயாக. (சஅ)

உகந்தவிக் கோமத் தழலோங்கு குண்டத்தி னுற்பவித்துத்
திகந்தவிக் கோமளை கோலோச்சுங் கூடனுஞ் சீரெணிக்கற்
பகந்தவிக் கோடர மீண்டுமிற் பாய்பொழிற் பாதவங்கா
ளகந்தவிக் கோரெனச் சூழ்தவம் யாதெவ னாக்கியதே.

(இ - ள்.) பொழில் பாதவங்காள் - சோலையாகிய விருட்சங்களே!, அவிக்கு உகந்து தழல் ஓங்கு ஓமகுண்டத்தின் உற்பவித்து - அவிசுக்குவிரும்பி அக்கினிசுவாலிக்கும் யாககுண்டத்திற் றோன்றி, திக்கு அந்தம் கோல் ஓச்சும் கோமளை - திசைகளின்முடிவுவரை செங்கோல்செலுத்துமிளமைச் செவ்வியுடைய மீனாட்சிதேவியாரின், இ கூடல் நும் சீர் எண்ணி - இந்தமதுராபுரியில் நுமது பெருமையைச் சிந்தித்து, கற்பகம் தவ்வி கோடரம் - கற்பகாதிவிருட்சங்களிற் றாவியிருந்த குரங்கினங்கள், மீண்டு உம்மில் பாய் - திரும்பிநும்மிடத்துக்குதிக்கத்தக்க வளமையடைந்து, அகம் தவிக்கோர் என்ன - உள்ளத்தவிப்பற்ற மெய்யன்பரைப்போல, சூழ் தவம் யாது எவண் ஆக்கியது - (இப்பதியைநீவிர்)வளைந்திருக்கத்தக்கதவமியாது? எங்காற்றினீர்கள்,? (அவைகளையடியேனுக்குபதேசிப்பீராக)

ஆக்கந் தராதலங் கோலமென் னாரிடத் தாவல்கொண்டு
காக்கந் தராதலந் தோகொடி தங்கயற் கண்ணியன்பாற்
சீக்கந் தராதலஞ் சூழ்கூடற் காவற் செலுத்துதியென்
றாக்கந் தராதலஞ் சார்முடி யீந்திங்குறப்பெற்றமே.

(இ - ள்.) அம் கயல் கண்ணி அன்பால் - அழகியமீனாட்சிதேவியார் கிருபையினாலே, சீ -கந்தரா - நீலகண்டனே, தல்லம் சூழ் கூடல் காவல் செலுத்துதி என்று - தண்ணீர்த்தடஞ்சூழ்ந்த மதுராபுரியினாட்சியைப்புரியக்கடவாயென்றுத்தரவுசெய்து, தராதலம் ஊக்கம் சார் முடி யீந்து இங்கு உற பெற்றும் - உலகங்கள் தைரியத்தையடையத்தக்க கிரீடத்தைச்சூட்டி (த்தானும்) இப்பதியிலிருக்கப்பெற்றும், (அச்சன்னிதானங்களையெண்ணாது) அலங்கோலம்ஆக்கம் தராது என்னார் இடத்து - ஒழுங்கீனமானது சம்பத்தைபுதவாதென் றுணராரிடத்து, ஆவல்கொண்டு - பேராசையுற்று, காக்கும் அந்தர் ஆதல் - காக்கின்றகுருடராகுதல், அந்தோ கொடிது - ஐயோ கொடுமையன்றோ.()

பெற்றேவ ராலையஞ் சாதாள் பவரெனப் பீழைகொண்ட
நற்றேவ ராலயம் வாழ்க்கையென் னாஞ்சைவ நாத்திகர்காள்
கற்றேவ ராலயஞ் செய்காட்டுங் கூடலின் காவலனைச்
செற்றேவ ராலய மாக்குவித் தாண்முன் செலாவிடினே.

(இ - ள்.) கற்றே சைவ நாத்திகர்காள் - படித்துஞ் சைவசமயத்தை மறுக்கத் துணிபவர்களே, ஆலே அஞ்சாது ஏவர் பெற்று ஆள்பவர் என்ன பீழை கொண்ட நல் தேவர் - விடத்தை யஞ்சாது யாவர் பெற்றுக் காப்பவரென்று துயரடைந்த (அரிபிர மேந்திராதி) மிகுந்த தேவர்கள், வராலே காட்டும் அம்செய் கூடலின் காவலனை செற்று வராலினங்களைக் காட்டு மழகிய வயல்சூழ்ந்த மதுரை நகரி னரசனைப் பகைத்து, ஏவு அரா லயம் ஆக்குவித்தாள் முன் செல்லாவிடின் - (சமணர்) விடுத்த நாகத்தை யழியும்படி செய்வித்த அம்பிகையார் சன்னிதானத்தை யடையாவிட்டால், ஆலயம் வாழ்க்கை என் ஆம் - (அத்தேவர்களின்) இருப்பிடங்களும் வாழ்க்கையு மெக்கதியை யடைந்திருக்கும், அதனை யுணர்ந்திலீர்போலும். (ருக)

விடங்கா வியம்பன்ன கண்ணாரைப் பற்றிய வெய்யகரத்
தடங்கா வியங்குவ போற்சிலர் மாலைய சைப்பதன்றித்
தடங்கா வியங்கொளுங் கூடலஞ் சேற்கண்ணி தாளையுன்னார்
மடங்கா வியம்பரங் கொண்டெதி போற்றிரி மாயமென்னே.

(இ - ள்.) விடம் காவி அம்பு அன்ன கண்ணாரை பற்றிய வெய்ய கரத்து - விஷத்தையுங் குவளையையும் பாணத்தையுமொத்த கண்களையுடைய மாதரைத் தீண்டிய கொடிய கையில், அடங்கா இயங்குவபோல் - தரிக்கப் பொருதவைகளாய் (புறத்துக்) குதிப்பனபோல. சிலர் - சிலபேர், மாலே அசைப்பது அன்றி - மாலையை யசைத்துக் கொண்டிருப்ப தல்லாமல், தடம் கா இயம் கொளும் கூடல் அம் சேல் கண்ணிதாளை உன்னார் - தடாகத்தையுஞ் சோலையையும் மங்களவாத்திய முழக்கத்தையும் பொருந்திய மதுராபுரி யங்கயற்கண்ணரசியினது திருவடிகளைத் தியானஞ் செய்யார், (இன்னார்) காவி அம்பரம் மடம் கொண்டு - காஷாய வஸ்திரத்தையும் (சடை முடியையும்) மடாலயங்களையும் (தமதாய்) கொண்டு, எதிபோல் திரி மாயம் என்னே - துறவினரைப்போலுந் திரிகின்ற வஞ்சமென்னத்திற்காகும். ()

மாயா தவத்திரந் துண்டேனுங் கூடலை வாழ்த்தவெண்ணிற்
றுயாத வத்திரம் போற்சிறி யாங்க டமரிருப்ப
நீயாத வத்திரஞ் சார்வதென் றேசி நிலைகுலையக்
காயாத வத்திரங் கொண்டறுக் காதெமைக் காவரதே,

(இ - ள்.) வரதே - வரனைக்கொடுப்பவளே, அவத்து மாயாது - வீணிலழியாது, இரந்து உண்டேனும் கூடலை வாழ்த்த எண்ணில் - [illegible] தருந்தியாயினு மதுராபுரியைப் போற்றிக்கொண்டிருக்கக் கரு

தின், தமர் - சுற்றத்தார், யாங்கள் இருப்ப - நாங்களிருப்ப, நீயா தவம் திரம் சார்வது என்று - நீதானு தவத்துநிலே பெறுவதென்று, தாயார், தர் வத்திரம்போல் சீறி நிலே குலேய ஏசி - ஞாதியர் முகத்தையொப்பச்.சினங்கொண்டு உறுதி சிதையுமாறு பழித்து, காயாத வத்திரம் கொண்டு அறுக்காது - உலராத சீலேயைக்கொண்டு (சுழுத்தை) அறுக்காதமையும் வண்ணம், எம்மை கா - எங்களேக்காப்பாயாக. (௫௩)

வரவிலக் கந்திரு வாதிய ரேத்திட வைகினும்பூ
தரவிலக் கங்கொளு மெம்பெரு மானெடு சங்கரிவா
ழிரவிலக் கம்பொரு தேசார் விமானத் தெழின்மதுரா
புரவிலக் கஞ்சகி யார்பர லோகப் புலவருமே.

(இ - ள்.) பரலோக புலவரும் - ஏனைய வுலகத் திந்திராதி தேவர்களும், அ கந்திருவாதியர் ஏத்திட - அந்தக்கந்திருவாதியர் வாழ்த்தத்தக்கதாய், வர இல் வைகினும் - மேன்மையுற்ற (சுவர்க்காதி) இருப்பிடங்களில் வாழினும், பூதரம் வில் அக்கம் கொள்ளும் - மலேச்சிலேயையும் உருத்திராட்சத்தையுங் கொள்ளத்தக்க, எம் பெருமானொடு சங்கரிவாழ் - எமது சிவபெருமானொடு மீனுட்சி தேவியார் வீற்றிருக்கின்ற, லக்கம் இரவி பொரும் தேசு ஆர் விமானத்து எழில் - இலட்சஞ்சூரிய ருதித்தாற்போலும் பிரகாசம் பொருந்திய (கனக) விமானத்தினழகுற்றதாகிய, மதுராபுர விலக்கம் சகியார் - கூடற்புரிக்குப் புறம்பாயிருக்கப் பொறுர். (என்னின் இத்தலப் பெருமையைச் சிறியே னொருநாக் கொண்டெங்ஙன் புகழ்வேன்.) (௫௪)

புலவருண் டமுதைத் தந்த வேலேயைப் போற்றல்செய்வீ
ரெலவருண் வினுக்கின் பெய ராற்றரு மீச்சுரியும்
பலவருண லேய மேழையு மீந்திடும் பாங்குளதால்
நலவருணொ டொறு மேவுறக் கூடனகர் நண்மினே.

(இ - ள்.) புலவர் உண் நாடு அமுதை தந்த வேலேயை போற்றல் செய்வீர் - தேவருண்ண விரும்பிய வமிழ்தை யுதவிய கடலேத் துதிக்கின்றவர்களே, கூடல் நகர் - மதுராபுரியின் பெருமையையுணர்க, எல்லவர் உள் நாவினுக்கு இன் பெயரால் தரும் ஈச்சுரியும் - எவ்வுலகத்தினரது அகத்திற்கும் புறத்திற்கு மின்பத்தைத் (தனது திருப்) பெயராலுதவுகின்ற மீனுட்சிதேவியாரையும், பல வருண ஆலேயம் ஏழையும் ஈந்திடும் பாங்கு உள்ளதால் - பயனுற்ற கடலேழையும் அளிக்கு முறைமையுற்றிருப்பதினுலே, நாள் தொறும் நல்ல அருள் மேவுற - பிரதிதினமும் நன்மையாகிய கிருபையைப் பெறும்பொருட்டு, நண்மின் - (இந்நகரை) அடைவீராக. (௫௫)

நண்டுவ ளைக்குளம் பேடழைத் தாலன்றி நைந்திறுமேற்
றெண்டுவ ளைக்குள மாதரைத் தேடித் தொடர்வதென்னாம்
விண்டுவ ளைக்குளஞ் சூழ்கூடற் பாண்டிய வேந்தர்குலத்
தண்டுவ ளைக்குள் மீதாருஞ் சத்தியை யாய்தல்விட்டே.

(இ - ள்.) நண்டு வளைக்குள் பேடு அம் அழைத்தால் அன்றி நைந்து இறுமேல் - (ஆண் நண்டானது) துவாரத்துள்ளிருக்கின்ற பேடு அழகுற (எதிர்சென்று) அழைத்தாலல்லது (உட்புகாது) வருந்தியழிந்துவிடுமாயின், விண்டு வளை குளம் சூழ் கூடல் - விஷ்ணுவின் சங்கினங்களுரைத்தக்க தடாகஞ் சூழ்ந்த மதுராபுரியின், பாண்டிய வேந்தர் குலத்து அண்டுவளை - பாண்டிய ராஜர்க்குரிய சந்திரகுலத்துண்டானவளும், குளம் மீது ஆரும் சத்தியை - புருவமத்தியிற்பொருந்தும் சத்தியுமாகிய மீனாட்சிதேவியாரை, ஆய்தல் விட்டு - உணர்தலைவிடுத்து; தொண்டு வளைக்கும் உள்ள மாதரை தேடி தொடர்வது என் ஆம் - (ஆடவரை) அடிமையாக்கட்டுப்படுத்துமெண்ணமுடைய மாதரைத் தேடிப் பின்பற்றித் திரிவது என்னத்திற்காகும். (௫௬)

விட்டை யிராவண மிந்திர னாதிவிண் ணோர்களுடைந்
திட்டை யிராவணங் கண்ணரை வென்றது மோர்வியப்போ
கெட்டை யிராவண மார்மயி டாதியர் நேர்ந்தவுடற்
கட்டை யிராவணந் தேய்த்தாளுங் கூடற் கயற்கொடிக்கே.

(இ - ள்.) நெட்டை இரா வண்ணம் ஆர் மயிட ஆதியர் - (வீரத்தின்) உயர்வையும் இருண்ட நிறத்தையும் பொருந்திய மகிடாசுரன் முதலியோர், நேர்ந்த உடல் கட்டை இராவண்ணம் தேய்த்து - அடைந்த சரீரத்தினுறுதிப் பாட்டைத் தரியாதாகும்படி தொலைத்து, ஆளும் கூடல் கயல் கொடிக்கு - செங்கோற் செலுத்துகின்ற மதுராபுரியின் மீனத்துவசத்தைக் கொண்ட தேவியார்க்கு, இந்திரன் ஆதி விண்ணோர்கள் இந்திராதி தேவர்கள், உள் தயிரா உடைந்து - உள்ளமானது (மத்திட்ட) தயிரைப்போற் சிதைவுற்றவர்களாய், ஐராவணம் விட்டு - ஐராவதம் (முதலிய வாகனங்களையும்) விடுத்து, வணங்கு அன்னாரை வென்றதும் ஓர் வியப்போ - பணிவுபூண்ட அத்தேவர்களை வெற்றிகொண்டதும் ஒரு அதிசயமோ. (அல்ல) (௫௭)

கொடிக்கப் பலாழியை யூடறுத் தேகினுங் கொண்டுவிற்போர்
துடிக்கப் பலாய்னக் கேடுங்கண் டேபினுங் கூடற்சொக்கர்
முடிக்கப் பலாள்பவ னேத்திட மாமணி மோலியிட்டா
னடிக்கப் பலாதுழ னெஞ்சையென் னேகொண் டலைவதுவே.

(இ - ள்.) கொடி கப்பல் ஆழியை ஊடு அறுத்து ஏகினும் - கொடியையுடைய கப்பலானது கடலை யிடையிற் பிளந்து செல்வதா யிருப்பினும், கொண்டு விற்போர் துடிக்க - (பொருளை) வாங்கி விக்கிரயஞ் செய்யும் வாணிபர் வருந்தும்படி, பல அயன கேடும் கண்டே - பலமார்க்கத் தழிதலையுமறிந்தும், பின்னும் - பின்னரும், உழல் நெஞ்சை - சுழல்கின்ற மனதை, (அடக்கி) அப்பு அல் ஆள்பவன் ஏத்திட - கங்காதேவியுஞ் சந்திரனும் கொண்டாடும் வண்ணம், கூடல் சொக்கர் முடிக்கு - மதுராபுரியிற் சொக்கலிங்கப் பெருமானது சிரசிற்கு, மாமணி மௌலி இட்டாள் - பெருமையுற்ற விரத்தினங்களி ழைத்த கிரீடத்தை யணிந்தாளாகிய மீனாட்சிதேவியாரின், அடிக்கு அப்பு அல்லாது - திருவடியிற் செலுத்துதலில்லாது, கொண்டு அலைவது என்னோ - பற்றித்திரிவதென்னத்திற்காகவோ. (ருஅ)

அலையாத ரைக்கணம் போருக சேடவென் றுழ நெஞ்சே
நிலையாத ரைக்கண மன்னா ருறவுதண் ணீரெழுத்தாம்
உலையாத ரைக்கணஞ் சிந்தா மணியென்ன வுற்றதறிந்
திலையாத ரைக்கணங் கூடற் பிராட்டியை யேத்துவைத்தே.

(இ - ள்.) அலை ஆதரை கண் அம்போருக சேட என்று ஆழும் நெஞ்சே - திரிகின்ற மூடரைக் கண்களா லம்புயத்தையும் (அறிவால்) அனந்தனையு மொப்பாவா யென்று புகழ்ந்து அழுந்தும் மனமே, அன்னார் உறவு அரை கணம் நிலையாது தண்ணீர் எழுத்து ஆம் - அம்மூடரின் சிநேகமானது அரை நிமிடமுந் தரியாது தண்ணீரெழுத்தைப்போலழியும், உலையாது அரை கண் அம் சிந்தாமணி என்ன உற்றது அறிந்திலையா - சோராது இடையின்கண்ணுற்ற வழகிய சிந்தாமணி யொப்பத் தோன்றிய துணர்ந்திலையா, தரைக்கு நம் கூடல் அண் பிராட்டியை வைத்து ஏத்து - பூமிக்காக நமது மதுராபுரியில் வீற்றிருக்கின்ற தேவியாரை யமைத்துப் போற்றுவாயாக. (ருகூ)

வையத்துப் பல்லவஞ் சாநஞ் சராவெனு மாதர்கொடுங்
குய்யத்துப் பல்லவ மேலவ ராற்றலென் கூடனகர்ச்
சையத்துப் பல்லவ மென்றாள் கயல்விழி தாமரைகை
செய்யத்துப் பல்லவம் பாளிதழ் கூந்தலைச் சேவிக்குமே.

(இ - ள்.) கூடல் நகர் சையத்து பல்லவம் - மதுராபுரிக்குரிய (பொதிய) மலையினுற்ற தளிர்கள், அ அம்பாள் மென் தாள் - அவ் வம்பிகையாகிய மீனாட்சி தேவியின் மெல்லிய திருவடிகளையும், கயல்

விழி - மீனங்கள் நேத்திரங்களையும், தாமரை கை - தாமரையத்தங்களையும், செய்ய துப்பு அல் இதழ் கூந்தலை - சிவந்த பவளமும் இருளும் அதாரத்தையுங் கூந்தலையும், சேவிக்கும் - வணங்குமாயின், வையத்து - இப்பூமியின் மீது, மாதர் - மங்கையராது, அஞ்சா நஞ்சு பல்ல அரா என்னும் கொடும் குய்யத்து - (கொலைக்கு) அஞ்சாத விஷப்பற்களுற்றசர்ப்பமென்னுங் கொடுமைபூண்ட அல்குலின் பொருட்டு, பல் அவம் - பல வீண் செய்கைகளை, மேலவர் - உயர்திணையாயினோர், ஆற்றல் என் - புரிதலென்னத்திற்காகும். (௩௰)

சேவிக்கப் பாவிக்கா மாதுருவாய் வந்தசேற் கண்ணியாந்
தேவிக்கப் பாவிக்கா மாதுளமா கண்சொற் சிலையென்னீர்
கோவிக்கப் பாவிக்கா மாதுரத்தீ ரருங்கூடற் றொழீர்
சாவிக்கப் பாவிக்கா மாதுணை யென்றறஞ் சார்வதுவே.

(இ - ள்.) கோவிக்க பாவி காம ஆதுரத்தீர் - (சிவபெருமானால்) கோவிக்கப்பட்ட பாவியாகிய மன்மதனால் அவாவுற்றலைகின்றவர்களே, அரும் கூடல் தொழீர் - அருமைதங்கிய மதுரைநகரை வணங்கீர், சேவிக்க பாவிக்கா மாதுருவாய் வந்த சேல்கண்ணி யாம் தேவிக்கு - (அன்பர்) பணியும்பொருட்டு ஒப்பனையற்ற தாயைப்போலெழுந்தருளிய மீனாட்சிதேவியார்க்கு, அம்பா இக்கா மாதுளமா - பாணமா? கரும்பா? மாதுளமலரா?, கண் சொல் சிலை என்னீர் - நேத்திரங்கள் வார்த்தை யாடையென்றுதுதியீர், சாவிக்கும் அப்பு ஆவிக்கு துணை ஆமா - மரணத்தைச்செய்விக்கும் (விஷ) நீரானது ஆன்மாவுக்குத்துணைசெய்யுமா? (செய்யாதன்றோ ஆதலின் துணைசெய்தற்கேற்ற) அறம் சார்வது என்று - தர்மத்தையடைவதெக்காலத்தென் றிருக்கின்றீர்கள். [கண்களைப்பாணமென்றது பகைவர்க்கெனக்கொள்க] ( )

சாராத வித்தையென் றங்கூட லம்பிகை தாட்டுணையிற்
பேராத வித்தையிற் றேர்ந்தோர் பெறும்பொருட் பெட்டையு
ணீராத வித்தைவ ரோடுழல் வீரினி யேனுமதிற் [ண
சேராத வித்தைய மற்றப்ப ரீக்கையிற் றேறுமினே.

(இ - ள்.) ஐவரோடு தவித்து உழல்வீர் - பஞ்சேந்திரியங்களின்வழியாய்த்தவித் தலைகின்றவர்களே!, அவித்தை சாராது என்று - அஞ்ஞானமடையாதென்று, அம் கூடல் அம்பிகை தாள் துணையில் பேராத வித்தையில் தேர்ந்தோர் - அழகியமதுராபுரி மீனாட்சிதேவியாரினிரண்டு திருவடிகளினின்றும் பெயராதிருக்கத்தக்க கல்வியிற்றேர்ச்சியடைந்தோர், பெறும் பொருள் பெட்டை உணரீரா - கொள்

னும்பொருளின்பெருமையை யறியீரா?, இனியேனும் - இனியாயினு ம, அதில் சேராது அவித்து - அவ்விந்திரியங்களினிணங்காது (அவை களை) அடக்கி, ஐயம் அற்று - சந்தேகம் (விபரீதங்கள்) இல்லாமல், அ - பரீக்ஷையில் தேறுமின் - அந்தப்பரீட்சையில் (நீவிரும்) தேறுதலடைவீராக. (௬௨)

தேறலைக் காமர முண்டார்க்குஞ் சோலை செழித்தவைகை
யாறலைக் காமரம் பொன்வீசுங் கூடற் கரசிதுணைக்
காறலைக் காமர மங்கையர் கோனிங்கு காப்பனென்னுக்
கூறலைக் காமரங் குன்றென் றேதிவங் கோருவதே.

(இ - ள்.) தெறலை உண்டு காமரம் ஆர்க்கும் சோலை செழித்த வைகை ஆறு - தேனைக்குடித்து வண்டினங்களிசைக்குஞ் சோலைசூழ்ந்தவேகவதிநதியானது, அலைக்கும் ஆ மரம் பொன் வீசும் கூடற்கு அரசி - பெயர்த்துக்கொணர்கின்றபசுக்களையும் மரங்களையும்பொற்றூக்களையு மிறைக்கப்பொருந்திய மதுராபுரிக்குத்தலைவியாகிய மீனாட்சிதேவியாரின், துணைக்கால் தலைக்கு ஆம் அரமங்கையர் கோன் - இரண்டுசரணங்களையும் தம்) சிரசிற்சூட்டிக்கொள்ளு மரம்பையாதிமாதரி னுபகனாகியவிந்திரன், இங்கு காப்பன் என்னு கூறலை - இச்சன்னிதானத்திற்காத்திருப்பானென்று நூல்களிசைத்திருத்தலை, உன்னாது - கவனியாது, காமர் - காம்யகர்மிகள், திவம் அங்கு கோருவது என்னே - சுவர்க்கம்பரலோகத்தென்று பிரார்த்திப்பதேனோ?, (௬௩)

கோரிக் கவலை யொழிந்துனைப் போற்றியங் கூடல்வசிப்
பாரிக் கவலை யிரந்தேனு முண்டருட் பாக்கியராய்ப்
பூரிக் கவலை யுறுமானை மானெற்குப் போதமுப
காரிக் கவலை யலையோ கயற்கணின் கற்பகமே.

(இ. - ள்.) கயல் கண்ணின் கற்பகமே - கயற்கண்களையுடைய கற்பகத்தருவைப்போலும் மீனாட்சிதேவியே!, இக்கு அவலை இரந்து உண்டேனும் - கரும்பையுமவலையு மிரந்துண்டாயினும், அம் கூடல் வசிப்பார் - அழகியமதுராநகரின்கண் வாசஞ்செயுமன்பினர், உன்னை கோரி போற்றி கவலை ஒழிந்து - நின்னைக்குறித்துப்புகழ்ந்து துயர்நீங்கி, அருள் பாக்கியராய் பூரிக்க - அருட்செல்வராய் மகிழ்ந்திருக்க, வலை உறும் மானை மான் எற்கு - வலையிற்சிக்கியமானைப்போன்ற எளியேனுக்கு, போதம் உபகாரிக்க வல்லை அல்லையோ - மெய்ஞானத்தை யுதவிசெய்ய (நீ) வலிமையல்லாதவளோ?. (௬௪)

கற்பக லாமுரு குங்கண மென்பரென் காதலெல்லாங்
கற்பக லாவித வைத்தனம் போன்றுங் கருத்துருகா
யற்பக லாசி தராயெனிற் கூடனின் னாட்சியன்றோ
அற்பக லாமதிப் பித்தருக் கோவய மம்பிகையே.

(இ - ள்.) அம்பிகையே - தேவியே!, கல் பகலாம் கணம் உருகும் என்பர் - மலையானதுபிளக்கப்படலாம் நிமிடநேரமுருகுமென்று முரைப்பார்கள், (அங்ஙனிருப்ப) என் காதல் எல்லாம் - எனதுவிருப்பமியாவையும், கற்பு அகலா விதவை தனம் போன்றும் - நிறைநீங்காதவிதவையின் றனத்தைப்போற் பயனற்றதாகியும், கருத்து உருகாய் - உள்ளமிரங்காய், அல் பகல் ஆசி தராய் என்னில் - இரவினும் பகலினும் மங்கலமானவைகளையுதவாயென்றால், கூடல் நின் ஆட்சியன்றோ - மதுராபுரியானது உன்னாட்சியல்லவோ, அற்பகலா மதி பித்தருக்கோ வயம் - சொற்பக்கலையுற்ற பிறைசூடியாகிய சுந்தரபாண்டியற்கோ வெற்றியுண்டாயது? (௩௫)

அம்பிகைக் கார்முக மாதியட் டாங்கத் தடிபணியா
ரம்பிகைக் கார்முகந் தானுமெஞ் சாக்கட லாகுலிப்பத்
தம்பிகைக் கார்முகங் கொண்டோனுங் கூடலைச் சார்ந்ததுன்னா
தம்பிகைக் கார்முக மன்னோதித் தீர்ப்பது தாவத்தையே. [ர்

(இ - ள்.) அம்பிகைக்கு அடி - மீனாட்சிதேவியாரின் திருவடிகளில், ஆர் முகமாதி அட்டாங்கத்துபணியார் - பொருந்தியமுகமுதலிய எட்டங்கவணக்கஞ்செய்யார், ஈகை கார் முகந்தானும் அப்பு எஞ்சா கடல் ஆகுலிப்ப - கொடையை யுடையமேகமானது மடுப்பினும் நீரிற்குறைவுபடாதசமுத்திரந் தத்தளிக்கும்படி, தம்பிகை கார்முகம் கொண்டோனும் - தம்பியின்கையிலிருந்த வில்லைவாங்கியவிராமமூர்த்தியும், கூடலை சார்ந்தது உன்னார் - (தனதுதுயரொழியும்பொருட்டு) மதுராபுரியையடைந்ததுமுணரார், (ஆயின்) பிகு ஐக்கு முகமன் ஓதி - கட்டுகின்ற கபத்துக்கு இனியவசனமுரைத்து, தம் தாவத்தை தீர்ப்பது ஆர் - தமது (மரண) வாதையைப்போக்குவது யாவரோ? [அம்பிகைக்கு என்பது உருபுமயக்கம்] (௩௬)

தாவிக் கலைய மடவார் முலையன்றித் தங்கமலர்
வாவிக் கலைய மரர்போற்றுங் கூடன் மனோன்மணியைப்
பாவிக் கலையமெய் தாய்மன மேவிழற் பாழ்க்கிறைத்தென்
னாவிக் கலைய முடியா தினுமுன்னை யாதரித்தே.

(இ - ள்.) மனமே - மனமே!, தாவி - குதித்து, மடவார் கலையம் முலை பம் அன்றி - மாதரின் குடம் போன்றகொங்கைகளிடத் தடங்குவதல்லது, தங்கம் மலர் வாவி பொற்றாமரைத் தடாகத்தையும், கலை அமரர் போற்றும் - விளக்கமுற்ற தேவரின்புகழ்தலையும்பொருந்திய, கூடல் மனோன்மணியை - மதுராபுரியம்பிகையை, பாவிக்க எய்தாய் - தியானித்தற்கொருப்படாய், (ஆகலின்) இன்னும் உன்னை ஆதரித்து - இன்னமுமுன்னையநுசரித்து, பாழ் விழற்கு இறைத்து - பயனற்றவிழலுக்கு (நன்னீரை) இறைத்து, அலைய - திரிய, என் ஆவிக்கு முடியாது - எனதுசீவனுக்குமுடியாது. (௬௭)

ஆதரித் தேகஞ்ச மாதருங் கூடலி னார்ந்துவப்பா
ராதரித் தேகஞ் சதமென்று மீனவ ளாட்சியைநம்
பாதரித் தேகஞ்ச ராகிநல் லோரைப் பழிப்பர்பொருப்
பாதரித் தேகஞ்ச னின்னோரை யீண்டுப் படைத்ததுவே.

(இ - ள்.) கஞ்சம் மாதரும் - கமலாதனிகளும், கூடலின் ஆர்ந்து - மதுராபுரியிற்பொருந்தி, ஆதரித்தே உவப்பார் - போற்றிக்களிப்பார், ஆதர் - மூடர், மீனவள் ஆட்சியை நம்பாது - மீனாட்சிதேவியாரினரசாட்சியென்பதை யுண்மையாக்கொள்ளாது, இ தேகம் சதம் என்று - இந்தச்சரீரத்தைநிலையென்றெண்ணி, அரித்தே (பணங்) தேடியே, கஞ்சராகி - உலுத்தராகி, நல்லோரை பழிப்பர் - பெரியோரைநிந்திப்பார், இன்னோரை - இவர்களை, ஏகு அஞ்சன் - செல்லுமன்னமாகியபிரமன், தரித்து - கொண்டு, ஈண்டு - இவ்வுலகில், படைத்தது - சிருட்டித்தது, பொருப்பா - கல்லா? (௬௮)

படைகலந் தாலன்ன கண்ணாரைப் பற்றிப் பவக்கடலி
னுடைகலம் போலழுந் தாதுன் கழற்புணை யுற்றவரை
யடைகல மாயினு நினகூடன் மேன்மைக் கடிமைகொள்வா
யிடைகலங் கும்முலை முன்மூன்று பின்னிரண் டெய்தன்னையே

(இ - ள்-) இடை கலங்கும் முலை - மருங்குல் துவளத்தக்க தனங்கள், முன் மூன்று பின் இரண்டு எய்து அன்னையே - முன்னர் மூன்றும் பின்னரிரண்டுமாகப் பெற்ற தடாதகைப் பிராட்டியே? படைகலந்தால் அன்ன கண்ணாரை பற்றி - ஆயுதங் கலந்தாற்போலுங் கண்களையுடைய மாதரைப் பற்றி, பவம் கடலின் - பிறவிக்கடலிடத்து, உடைகலம்போல் அழுந்தாது - தகர்ந்த கப்பலைப்போல் மூழ்காது, உன் கழல் புணை உற்றவரை - நினது திருவடியாகிய தெப்பத்தை

படைந்தனரை, அடைகலம் ஆயினும் - சார்ந்திலேமாயினும், நின் கூடல் மேன்மைக்கு - நினக்கும் மதுராபுரிக்கு முகந்த சீர்த்தியின் பொருட்டு, அடிமை கொள்வாய் - ஆட்கொள்வாயாக, (௬௯)

அன்னமடங் கடிநாய் காவலென் னவகத்தி லயன்
றன்னமடங் கடிதாக்குவனே லிந்தத் தொல்லுலகிற்
பின்னமடங் கடிந்தீடேறக் கூடற் பிராட்டி நின்றன்
பொன்னமடங் கடிக் காளாவ தெங்ஙன் புகலெனக்கே.

(இ - ள்.) கூடல் பிராட்டி — மதுராபுரிக்குத் தலைவியே! அன்னம் மடம் கடி நாய் காவல் என்ன - அன்னமிடுஞ் சத்திரத்தில் கடிக்கின்ற நாயைக் காவல்வைத்தாற்போல, அகத்தில் மடம் கடிது துன்ன - இதயாலயத்தில் மடமையையும் கடுமையையுஞ் சாரும்படி, அயன் ஆக்குவனேல் — பிரமா அமைப்பானாயின், இந்த தொல் உலகில் — இந்தப் பழமையாகிய பூமியின் கண்ணே, பின்னம் அடம் கடிந்து ஈடேற - பேதத்தையுந் தீவினையையும் ஒழித்துய்வதின் பொருட்டு, பொன் அம் அடங்கும் - இலக்குமிதேவியினழகு மடங்கத்தக்க, நின்றன் அடிக்கு ஆள் ஆவது எங்ஙன் - நினது திருவடிகளுக்குத் தொண்டுபுரிவதெவ்வாறு, எனக்கு புகல் - (இதனை) அடியேனுக்குத்தரவு கொடுப்பாயாக

எனக்களிப் பாயென்று நம்பிவந் தேத்துனர்க் கிட்டமெலா
மனக்களிப் பாத்தரு மம்மைநின் கூடல் வசிப்பதல்லாற்
கனக்களிப் பாக்குவைத் தெங்கா ரழைப்பினுங் காமுறேன்
வனக்களிப் பாற்பசுப் பாலொக்கு மோபிணி மாற்றினுமே.

(இ - ள்.) நம்பி வந்து எனக்கு அளிப்பாய் என்று ஏத்துனர்க்கு நம்பிக்கையொடு மடைந்தெனக் கருள்வாயென்று போற்றுவார்க்கு - இட்டம் எல்லாம் - விரும்பிய வனைத்தும், மனம் களிப்பாய் தரும் அம்மை - உளமகிழ்வாய்க் கொடுக்குந்தாயே. நின் கூடல் வசிப்பது அல்லால் - நினது மதுராபுரியிற் றரிப்பதல்லாமல், கனம் களி பாக்குவைத்து - மேன்மைக்குரிய தாம்பூலாதிகளை வைத்து, எங்கு ஆர் அழைப்பினும் காமம் உறேன் - எப்பதிக்கெவ ரழைப்பினு மிச்சை கொள்ளேன், (ஏனெனில்) வனம் கள்ளி பால் பிணி மாற்றினும் - காட்டிலுள்ள கள்ளிப்பாலானது (சில) வியாதியை நீக்குமாயினும். பசு பால் ஒக்குமோ - பசுவின்பாலையொக்குமோ, (௭௧)

மாற்றல ரைப்படை காணத் தனையிடு மன்னர் துணிப்
பீற்றல ரைப்படை யங்கொண் டுழல்வதும் பிச்சையர்தோ
ளாற்றல ரைப்படை யாவேந்த ராவது மார்செயற்றென்
காற்றல ரைப்படைக் கும்வரைக் கூடற் கனிமயிலே.

(இ - ள்.) அலரை படைக்கும் தென் காற்று வரைகூடல் - மலர்களையுண்டாக்குந் தென்றற் காற்றையுடைய (பொதிய) மலைவளஞ் சூழ்ந்த மதுராபுரியில், கனி மயிலே - உவப்புற்ற மயிற்சாயையுடைய பிராட்டியே? படை காண மாற்றலரை தளை இடும் மன்னர் - சேனைகள் காணும்படி பகைஞரைச் சிறைப்படுத்தும் (வீரமுடைய) அரசர்கள், பீற்றல் துணி அரை படு ஐயம் கொண்டு உழல்வதும் - கந்தை வத்திரத்தை யிடையிற் கட்டிப் பிச்சையேற்று வருந்துவதும், பிச்சையர் - வறுமையுற்றோர், அரைப்பு அடையா தோள் ஆற்றல் வேந்தர் ஆவதும் - சிதைவுறாத புயவலியுடைய வேந்தராவதும், ஆர் செயல் - யாவர்செய்கை, (எஉ)

மயிலே மதிக்குல மன்மலை யத்துவ சன்மகளாங்
குயிலே மதிக்கடங் காப்பொரு ளேயருங் கூடலன்பர்க்
கயிலே மதிட்டிவ ராதெனு நான்மறை யாய்ந்தொழுகப்
பயிலே மதிட்டநின் சித்தம தாயுறும் பான்மையதே.

(இ - ள். மயிலே - பசந்தமேனியுடையாளே? மதி குலம் மன் மலையத்துவசன் மகளாம் குயிலே - சந்திரகுலத்திற் பொருந்திய மலையத்துவசபாண்டியராஜன் குமாரியாகிய குயில்போலு மின்னிசையுற்றவளே? மதிக்கு அடங்காப் பொருளே - கரணங்களுக் கெட்டாத பொருளே, அரும் கூடல் அன்பர்க்கு - அருமையாகிய மதுரைநகரி னன்புடையார்க்கு, அயில் ஏம திட்டி வராது என்னும் நால் மறை - முனையுற்ற (ஆயுதங்களைக்கொண்ட) மறலியினது பார்வையணுகா தென்றுரைக்கின்ற நான்கு வேதங்களையும், ஆய்ந்து ஒழுக பயிலேம் அதிட்டம் - ஆராய்ந்தனுட்டிக்கும் பழக்கம் பெறாத யாங்களுடையத் தக்க பலன், நின் சித்தமதாய் உறும் பான்மையது - நினது திருவுள்ளமாகவரும் தன்மையுடையதன்றோ, (எஙு)

பாலாலம் போதர வுண்ட பிரான மகிழ்பாரிவடி
வேலாலம் போதரவென் னுதிடை யகடு விழிக்கு
நூலாலம் போதரமென் றயன் மாதரை நோக்கினருட்
சேலாலம் போதர தானந்தங் கூடலிற் சேர்வதென்றே.

(இ - ள்.) பால் போதர ஆலம் உண்ட பிரான் மகிழ் பாரி பாற்கடலினுண்டாகிய விடத்தையருந்திய சிவபெருமான் சந்தோஷிக்குமணவாட்டியாகிய தேவியே, வடி வேலாலம்ப உதரா - கூரியவேலாயுதனை தாங்கிய வயிற்றையுடைய விநாயகமூர்த்தியே, என்னுது -

என்றுபுகழாது, (இம்மாதின்) இடை அகடு விழிக்கு - மருங்குல் வயி றுகண்களுக்கு, நூல் ஆல் அம்போ தரம் என்று - நூலும் ஆலிலையும் பாணமுமோ இணையாவதென்று, அயல் மாதரை நோக்கின் - பரதா ரங்களைக் காதலிக்கின், கூடலில் - மதுராபுரியில், சேலால் அருள் அம் போதம் ரசம் ஆனந்தம் - (அம்பிகையின்) மீனம் போலுங் கண்களா லருள்கின்ற அழகிய வுணர்வாகிய பேரின்பக்களிப்பை, சேர்வது என் று - அடைவதெக்காலம், (எச)

என்றும் பரவையும் போற் றொளிமானமு மேத்தொலியு
மென்றும் பரவைகை யுஞ்சாருங் கூடற் கிறைவியரு
ளென்றும் பரவையங் கூவிநிற்பா ரிரண் டெட்டறியா
வென்றும் பரவைநின் பார்வையன்றேல் வெலற்கென்செய்வனே

(இ - ள். என்றும் பரவையும் போற்றும் ஒளி மானமும் ஏத்து ஒலியும் - இரவியுங்கடலும் புகழத்தக்க கிரணம் வீசுகின்றவிமானமுந் துதிமுழக்கமும், பரம் வைகையும் - உயர்வுற்ற வேகவதிநதியும், என் றும் சாரும் கூடற்கு இறைவி - எக்காலத்தும் பொருந்தி யிருக்கின்ற மதுராபுரிக்கரசியே, உம்பர் - தேவர்கள், அருள் என்று - கடாட்சிப் பாயென்று, அவையம் கூவி நிற்பார் - அவையவோலமிட்டு நிற்பாரா யின், எட்டு இரண்டு அறியா என் - எட்டுமிரண்டுமறியாப் பேதையே னது, தும்பு அரவை - பாசமாகிய சர்ப்பத்தை, வெல்லற்கு - வெல்லு தற்கு, நின் பார்வை அன்றேல் - நினது பார்வையைக்கொண்டல்லது, என் செய் வன் - யாது செய்யக் கடவேன், (எரு)

செய்யுட் கலம்பகத் தேவாரவாசகத் தேன் சொரிந்தோர்
பொய்யுட் கலம்பகமாசென் செய்கேமெனப் போற்றி யுய்ந்தார்
பைய்யுட் கலம்பகங்கொள் பேதையே னினைப் பாடலுள்ளிற்
றுய்யுட் கலம்பகம் பார்த்தருள் கூடற் றுரைமகளே.

(இ - ள்.) கூடல் துரை மகளே - மதுராபுரிக் கரசன் குமா ரியே, செய்யுள் கலம்பகம் தேவாரம் வாசகம் தேன் சொரிந்தோர் - பாவினங்களாலாகிய கலம்பகந் தேவாரம் திருவாசகமென்னுந் தேனை யபிடேகஞ் செய்த மெய்யன்பராயினோர், பொய் உட் கலம் மாசு பகம் என் செய்கேம் என்ன போற்றி உய்ந்தார் - பொய்க்கு வருந்தேங்குற் றத்தைப் பகுக்கேமென்ன செய்வேமென்றேங்கிப் புகழ்ந்தீடேறினோர் கள் (அங்ஙனிருப்ப) பைப்புட்கு அலம்பு அகம் கொள் பேதையேன் நினை பாடல் உள்ளில் - துன்பத்திற்குத் ததும்பும் நெஞ்சையுடைய

பேதையேனின்னைப் பாடுதலைநினைப்பின், தூய்புள் கல் - உணவிற் கல்லையொக்குமாயினும், அம்பகம் பார்த்து அருள் - கண்களால் நோக்கிக் கருணை செய்வாயாக, (எசு)

மகத்தில கங்கர ணாதியும் பெற்றில மன்மணிக்கிச்
சகத்தில கம்பிகை நின்மேனி சாரருட் டந்தனையெம்
மகத்தில கந்தவிர்க் காயே னரியொலி யாழியன்றோ
முகத்தில கம்பொரு கூடலின் வாழ்வுறு மோகனையே.

(இ - ள்.) அம்பிகை - தேவியே!, இ சகத்து - இந்தப்பூமியாகியபெண்ணினது, இலகும் முகம் திலகம் பொரும் - விளங்குமுகத்திலுற்றதிலகம்போன்ற, கூடலின் வாழ்வு உறும் மோகனையே - மதுராபுரியின்வாழ்க்கைகொள்ளும் விருப்பமுடையாளே!, மகத்து இல்ல - மகத்துவமுள்ளனவல்ல, கம் கரணாதியும் பெற்றில - தலையேனுங் கரணமுதலியவேனுமடைந்துள்ளனவுமல்ல, மன் மணிக்கு - கிடக்குமிரத்தினங்களுக்கு, நின் மேனி சார் அருள் தந்தனை - நினதுதிருமேனியையடையுங்கிருபையை யளித்திருக்கின்றாய், எம் அகத்தில் அகம் தவிர்க்காயேல் - எமதுள்ளத்துற்ற பாவத்தைப் போக்காயாயின், நரி ஒலி ஆழி அன்றோ - நரிச்சத்தங்கடலைமுட்டுமெல்லவோ. (எஎ)

மோகவி டாயிவ ளன்னையன் றோவென முந்தத்தனைச்
சாகவி டாயுதம் போற்சீறி மெய்தடிந் தானலைந்திங்
காகவி டாயவன் பாதக மோட்டி யருட்புனலாற்
சோகவி டாய்தணி வித்தாய் மதுரையின் சுந்தரியே.

(இ - ள்.) மதுரையின் சுந்தரியே - கூடற்பதியில்வீற்றிருக்கின்றதேவியே!, மோக விடாய் - மோகமுற்ற தூர்த்தனே, இவள் அன்னை அன்றோ என்ன முந்து அத்தனை - இவள் (உனது) தாயல்லவோ வென்றுரைத்த முதிர்ந்தபிதாவை, விட ஆயுதம்போல்சீறி சாக மெய் தடிந்தான் - சர்ப்பத்தைப்போற்சினந்து மரணமடையும்படிதேகத்தைவெட்டியகொடியன், அலைந்து இங்கு ஆக விடாய் - திரிந்துஇப்பதிக்குற்றவனைக்கைவிடாதவளாய், அவன் பாதகம் ஓட்டி - அன்னதுபாதகத்தையொழித்து, சோக விடாய் - வியதனதாகத்தை, அருள் புனலால் தணிவித்தாய் - கருணைநீராற்றணிவித்தாயன்றோ. (எஅ)

தரித்திர மாசுண நோய்ப்புலி சூழுமித் தாரணிநின்
சரித்திர மான்மிய மந்திர வாட்கையிற் சார்ந்தவரைப்
பரித்திர மாய்வினம் மேகூட லின்பதம் பற்றியொளி
ரரித்திர மாக்குதி யேலநு வேயெமக் கானந்தமே.

(இ - ள்,) கூடல் அம்மே - மதுராபுரியில் வாழுந்தாயே, தரித்திரம் மாசுணம் நோய் புலி சூழும் இ தாரணி - வறுமை யென்னும் பாம்பும் பிணியென்னும் புலியும் சூழ்கின்ற இந்தப் பூமியின்கண்ணே, நின் சரித்திரம் மான்மியம் மந்திரம் வாள் கையில் சார்ந்தவரை - நினது சரித்திர மேன்மையை விளக்கும் (பஞ்சாக்கர) மந்திரவாளை கைக்கொண்டிருக்குந் தொண்டரை, பரித்து இரம் மாய்வின் - வகித்திரோமாகிய வெங்கள் முடிவில், நின் பதம் பற்றி ஒளிர் — நினதுதிருவடிகளிற் பற்றி விளங்காநின்ற, அரித்திரம் ஆக்குதியேல் - குங்குமமாகும்படி செய்வாயாயின், அதுவே எமக்கு ஆனந்தம் - அதேஎங்களுக்கு முத்தியாகும், (எக)

ஆனந்தம் பாடல மெண்ணு தருந்தி யழிந்துமத்தி
யானந்தம் பாடலம் போல்விழிப் பாரம ணாக்கிவிட்ட
வானந்தம் பாடலங் கூடலுன் னூருளத் தன்புருகி
யானந்தம் பாடலங் காகார் வசையெங்ங னாறுவதே.

(இ - ள்.) தம் பாடு அலம் எண்ணாது - மனைவி முதலியோரின் வருத்தமாகியசஞ்சலத்தை நினையாது, மத்தியானம் ஆனம் அருந்தி அழிந்து - பகலினுங்கள்ளைக்குடித்து (அறிவு) கெட்டு, தாம் பாடலம் போல் விழிப்பார் - தாம்பாடலமலர்போலும்விழிப்பார், அமண் ஆகி விட்ட ஆன் நந்து கூடல் - சமணர்களுண்டாக்கிவிடுத்த (மாயப்) பசுவொழிந்தமதுராபுரியானது, அம்பாள் தலம் உன்னார் - மீனாட்சி தேவியின்வாழ்க்கையிடமென்பதைக் கருதார், உள்ளத்து அன்பு உருகி ஆனந்தம் பாடல் அங்கு ஆகார் - மனத்தன்புருகிச் சுகமாகப்பாடிக் கொண்டிருக்குந் (தொண்டர்) கூட்டத்துச்சாரார், (இன்னார்) வசை ஆறுவது எங்ஙன் - வசையொழிவதெவ்வாறு? (அ0)

வதனம் பலதர மிந்துமுத் தம்ப வளமிடைதந்
துதனம் பலதர வெற்பக டால்பொருஞ் சுந்தரிவாழ்
சதனம் பலதரங் கூடலிற் சூழ்தவச் சார்பொழிந்து
மதனம் பலதரந் தைக்கே னுழைப்பது வன்னெஞ்சமே.

(இ - ள்.) வல் நெஞ்சமே - கடியமனமே! வதனம் பல் அதரம் - முகமும்பற்களுமிதழும், இந்து முத்தம் பவளம் - சந்திரனையும் முத்துக்களையும் பவளத்தையும், இடை தந்து - மருங்குல் நூலையும், தனம் பலம் தரம் வெற்பு - கொங்கைகள்வலியுற்றமலைகளையும், அகடு ஆல் பொரும் சுந்தரிவாழ் - வயிறுனதுஆலிலையையும் எதிர்க்கத்தக்க

அழகியமீனாட்சிதேவியார் வீற்றிருக்கின்ற, சதனம் பலதரம் கூடலில் சூழ் தவம் சார்பு ஒழிந்து - கோயிலைப்பலதடவை மதுராபுரியில்வல ஞ்செய்யுந்தவப்பற்றையிழந்து, மதன் அம்பு அல்லது அரந்தைக்கு உழைப்பது ஏன் - காமபாணத்திற்கேனுந் துன்பத்திற்கேனும் (கார ணமாயவைகளில்) பாடுபடுவதென்னோ. (அக)

நெஞ்சோதி யானப் பகைபொறி யோவெளி நீள்விழிகா
ரஞ்சோதி யார்தனங் கொண்டாடும் புந்திய கங்காரமோ
செஞ்சோதி யானல தேதெனு மின்னனஞ் சித்தமுமேற்
றஞ்சோதி யானந்தி கூடலைப் போற்றலெச் சார்புகொண்டே.

(இ - ள்.) ஆனந்தி - அம்பிகையே!, பொறியோ வெளி - இந்தி ரியங்களோ விடயங்களைப்பற்றுவன, நெஞ்சோ தியானம் பகை - மன மோ தியானத்தைப்பகைப்பது, புந்தி - புத்தியோ, நீள் விழி கார் அஞ்சு ஓதியார் தனம் கொண்டாடும் - நீண்டகண்களையும் மேகமஞ்சத் தக்ககூந்தலையு முடையமாதரின்கொங்கைகளைக் கொண்டாடும், அகங் காரமோ - அகங்காரமோ, யான் அல்லது செம் சோதி ஏது என்னு ம் - என்னையன்றிச்செவ்விய தேஜோமயவஸ்துவென்பது ஏதென்றுமு ரணும், இன்னணம் சித்தமுமேல் - இவ்வாறுசித்தமு மியையுமாயின், எ சார்பு கொண்டு தஞ்சு ஓதி கூடலை போற்றல் - எவ்வாதரவைய டைந்து தாழ்மையைத்தெரிவித்து (நினது) மதுராபுரியைத்துதிக்கத் தகும்? (அஉ)

கொண்டீர வம்புலி நோயதைப் போக்கிடுங் கூடற்பெறீர்
துண்டீர வம்புலி வேணிப் பிரான்மகிழ் சோபனையைக்
கண்டீர வம்புலி பாம்புமன் றேதொழுங் கற்றுணரீர்
புண்டீர வம்புலி ராதோட்டு மோநுங்கள் புன்மருந்தே.

(இ - ள்.) கற்று உணரீர் - கற்றுத்தெளியீர்காள்!, துண்டு ஈர ம் அம்புலி வேணி பிரான் மகிழ் சோபனையை - குளிர்ந்த அர்த்தசந் திரனைச்சடையிற்றரித்த சிவபிரான்மகிழத்தக்க சோபனையாகியதேவி யை- கண்டீரவம் புலி பாம்பும் அன்றே தொழும் - சிங்கமும் வியாக் கிரமும்சர்ப்பமு மல்லவோபணியாநிற்கும், (அங்ஙனிருப்ப) அவம் புல்லி நோய் கொண்டீர் - அவமாயவைகளைப்பற்றிப் பிணியையடை ந்தீர்!, அதை போக்கிடும் கூடல் பெறீர் - அதனையொழிக்கும்மதுரை நகரைவணங்கப்பெறீராயின், நுங்கள் புல் மருந்து - உங்களின்புல்லு ங்கல்லுமாகிய மருந்தாயவைகள், புண் தீர உள் வம்பு இராது ஓட்டு

மோ - வருத்தமொழியும்படியகத்துற்ற தீங்கையறப்போக்கத்தக்கவை யாகுமோ? [ல-ள—ஒற்றுமைபற்றியும் எதுகைநோக்கியும் நான்காம டியில் உள்-என்பது உல் எனநின்றது.] (அங)

மருந்தே னுணவிற் சுவையாறுந் தள்ளெனும் வைத்தியமேன்
தருந்தேனு கற்பகங் கொண்டாடுங் கூடற் றடாதகையை
யருந்தே னுனைமறந் தென்றேத்திப் பூசிக்கு மன்பினர்க்கும்
வருந்தே னுலகினென் றுசைபி லேசிக்கும் வன்பர்க்குமே.

(இ - ள்.) தரும் தேனு கற்பகம் கொண்டாடும் கூடல் தடாதகையை - கொடுக்கின்றகாமதேனுவுங் கற்பகாதிதருக்களுங் கொண்டாடத்தக்கமதுராபுரியின் மீனாட்சிதேவியாரை, உன்னை மறந்து அருந்தேன் என்று ஏத்தி பூசிக்கும் அன்பினர்க்கும் - நின்னைமறந்துண்ணேனென்றுபோற்றிப் பூசிக்குமன்புடையார்க்கும், உலகின் தேன் வரும் என்று ஆசையிலே சிக்கும் வன்பர்க்கும் - உலகவாசனையினிடத்தின்பங்கிடைக்குமென் றுஎசயிற்பட்டுழலும் வன்பர்க்கும், மருந்து ஏன் - ஔஷதமெதற்கு, ஆறுசுவையும உணவில் தள் என்னும் வைத்தியம் ஏன் - ஆறுசுவையும் உண்டியிற்றள்ளல் வேண்டுமென்று சொல்லும் வைத்தியமெதற்கு? (அச)

வன்பரம் போருக மாமிக் கலியின் வராயவெளியி
னென்பரம் போருக நந்தியைத் தாக்கிநின் றெத்திசையு
மின்பரம் போருகந் தீசனைக் கண்விலங் கிட்டுவென்றுள்
ளன்பரம் போருக மார்கூடன் மீண்டொளி ரம்மையென்னே.

(இ - ள்.) எ திசையும் நின்று மின் பரம் போர் உகந்து - முழுதுலகினும் நிலைத்துவிளங்கத்தக்கமேன்மையுற்ற யுத்தத்தைவிரும்பிச்சென்று, அம்போர் உக நந்தியை தாக்கி - வாளிமுதலியஆயுதவீரர்களழியும்படி நந்திதேவரையடித்து, கண் வில் அங்கு இட்டு ஈசனை வென்று - கண்களாகியகணைகளை (புருவமாகிய) வில்லினிடத்தேறிட்டுச்சிவபிரானையும்வெற்றிகொண்டு, உள் அன்பர் அம்போருகம் ஆர் கூடல் மீண்டு ஒளிர் அம்மை - உள்ளன்பர்களுந் தாமரைகளும் பொருந்திய மதுராபுரிக்குத் திரும்பியடைந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிற தேவியே!, வன் பரம்பு ஓர் உகமாம் இ கலியின் - வன்கண்மைபரவுகின்றவோர் உகமாகிய இந்தக்கலிகாலத்து, வெளியின் வராய் என்பர் - புறத்துக்காணப்படாயென்று கூறுவார்கள், என்னே - எதனாலோ?

அம்மையி லேகுயி லேயென்று கூடலுற் றாரணியின்
செம்மையி லேபனக் குங்குமப் பூம்பதச் சிந்தைகொண்டோம்
வெம்மையி லேசமுஞ் சாரோ மினியும்பர் வேண்டிநிற்ப
விம்மையி லேபெறு வோஞ்சித்தி முத்தி யிரண்டையுமே.

(இ - ள்.) கூடல் உற்று - மதுரைநகரையடைந்து, அம்மயிலே குயிலே என்று - அழகிய மயிலே! குயிலே! யென்றுபாடிப்புகழ்ந்து, ஆரணியின் - மீனாட்சிதேவியின், செம்மை குங்குமம் இலேபனம் பூபதம் சிந்தைகொண்டோம் - சிவந்தகுங்குமச்சாந்தணிந்த திருவடிக் கமலங்களைச்சிந்திக்கப்பெற்றோம், இனி இலேசமும் வெம்மை சாரோம் - இனியற்பமேனுந்தீயநெறியிற்செல்லோம், உம்பர் வேண்டி நிற்ப - தேவர்களும்பிரார்த்தித்துநிற்கும்படி, சித்தி முத்தி இரண்டையும் இம்மையிலே பெறுவோம் - சித்திமுத்தியிரண்டையுமிச்சனனத்திலே யடைவோம். (அ௬)

இரண்டுந் தரும்பொரு ளென்னும் பொருளை யிணைசொல்வதோ
முரண்டுந் தரும்பகைக் கெட்டா தெழுகடன் மூவுலகும்
புரண்டுந் தருமணக் குங்கூட லன்பரைப் போற்றிமிகுஞ்
சரண்டுந் தரும முதனான்கு மீயுந் தனிப்பொருட்கே.

(இ - ள்.) முரண்டு உந்து அரும் பகைக்கு எட்டாது - முரணைச் செலுத்துகின்ற வரிய பகைஞர் களுக்கெட்டாததும், ஏழு கடல் மூவுலகும் புரண்டும் - சத்தசமுத்திரங்களுந் திரிலோகத்தும் பெயர்ந்து வரினும், தரு மணக்கும் கூடல் அன்பரை போற்றி மிகும் - சோலை மணக்கின்ற மதுராபுரியையும் அன்பரையுங் காப்பாற்றிச் சேடித்திருப்பதும், தருமம் முதல் நான்கும் சரண் தும் ஈயும் தனி பொருட்கு - தருமமுதலிய நான்கையுந் திருவடித்தூளியினாலே யளிக்கத்தக்கதுமாகிய வொப்புயர்வற்ற நித்தியப் பொருளுக்கு, இரண்டும் தரும் பொருள் என்னும் பொருளை இணை சொல்வதோ - அறத்தையுமின்பத்தையு முதவும் பொருளென்கின்ற பொருளை நிகர் கூறத்தக்கதோ.

பொருந்துவ ராகம வேதாந்த வேட்டைப் பொருளறியார்
திருந்துவ ராகம தம்பல பேசிச் செயலழிந்து
வருந்துவ ராக மதியாவ தென்னை மனோன்மணிபா
லருந்துவ ராகமன் றேகூட லோங்கமைச் சாகினவே.

(இ - ள்.) வேதாந்தம் ஆகமம் ஏட்டை பொருந்துவர் பொருள் அறியார் - வேதமுடிவாகிய வுபநிடதநூல்களுமாகம சாஸ்திரங்களு

மாகிய புஸ்தகங்களைக் கொள்வாரல்லது அதன் பொருளையுணராராகி யும், திருந்துவராக பல மதம் பேசி செயல் அழிந்து - தேர்ந்தனர்போ லப் பல சமயங்களைப் பிதற்றி யாசாரங்களுங் கெட்டு, உவராகம் வரு ந்து மதி ஆவது என்னை - கிராணத்தால் ஒளியிழந்த சந்திரனுக்கிணை யாவதெதற்கு, மனோன் மணி பால் அருந்துவராகம் அன்றோ - தேவி யின் (முலைப்) பாலையுண்ட பன்றிகளுமல்லவோ, கூடல்ஓங்கு அமை ச்சு ஆகின - மதுரை நகரிற்சிறந்த மந்திரிகளாயின. (அஅ)

ஆகுந் துதிக்கையுங் கொண்டோற்கு மெங்கட்கு மன்னையுனக்
காகுந் துதிக்கையெவ் வாறோ தெளிகில னாசைகொள்வேன்
பாகுந் துதிக்கைய நின்கூடன் மானம் பரிப்பதிசைப்
பாகுந் துதிக்கை யிலையென்னு மோதரை பாலிக்கவே.

(இ - ள்) ஆகும் துதிக்கையும் கொண்டோற்கும் எங்கட்கும் அன்னை - மூடிகவாகனத்தையுந்துதிக்கையையுங் கொண்டிருப்பாராகி யவிநாயகமூர்த்திக்குமெங்களுக்குந்தாயே, உனக்கு ஆகும் துதிக்கை எவ்வாறோ தெளிகிலன் ஆசை கொள்வேன் - நினக்குகந்த துதித்த லெவ்வகைப் பட்டனவோ வறிகிலேனாயினும் விருப்பமடைவேன்' பாகு உந்து கயம் நின் கூடல் மானம் திக்கு பரிப்பது இசைப்பா - பாகராற் செலுத்தத்தக்க யானைகள் நினது மதுராபுரியில் விளங்கும் விமானத்தைத் திசைதொறுந் தாங்கி நிற்ப திசைபாடியா, தரை பா லிக்க குந்து உதிக்கு ஐ இல்லை என்னுமோ - பூமியானது உண்டாக்கு தற்கு அடிப்பலமற்ற வுதியமரத்துக் சமுகில்லையென்றொழிக்குமோ. ()

பாலை வனத்தழற் கானலை நீரெனப் பார்த்தலையார்
பாலை வனத்தனம் வேறாக்கி யுண்ணும் பரிசளிப்பான்
பாலை வனத்தனக் கௌமாரி கூடற் பராசத்தியெம்
பாலை வனத்தத்தை போலிருப் பாளைப் பணிந்தவரே.

(இ - ள்.) வனத்து பாலை அன்னம் வேறு ஆக்கி உண்ணும் பரிசு அளிப்பான் - நீரினிடத்துக் கலந்த பாலை யன்னப்பட்சி பிரித் துண்பதுபோலிரட்சிக்கும்பொருட்டு, பராசத்தி - அம்பிகையார், பா லை - இளமையளாகவும், வனம் தனம் கௌமாரி - அழகிய கொங்கைக ளையுடையயுவதியாகவும், கூடல் - மதுராபுரியில் எழுந்தருளி, எம்பால் ஐ வண்ணம் தத்தைபோல் இருப்பாளை பணிந்தவர் - எமதுளத்துப் பஞ்சவர்னக்கிள்ளையை யொப்ப விருப்பாளாகிய மீனாட்சிதேவியைவ ணங்கினோர், பாலை வனம் தழல் கானலை நீர் என்ன பார்த்து அலையார் - பாலையென்னுங் கானக வெப்பக்கானலை நோக்கி நீரென்றோடித்திரியார் யுவதியென்பது - பதினாறுவயதுடைய பெண். (கூ௰)

பணிவிடை யாற்றில னென்றே பிரம்படி பட்டவனைப்
பணிவிடை யாளனென் றேயா திருக்கும் பகர்வதெலாம்
பணிவிடை யார்க்கரு ணின்சேல் விழிக்கடைப் பார்வையன்றோ
பணிவிடை யான்மற வாக்கூடல் வாழும் பராபரையே.

(இ - ள்) யான் மறவா கூடல் வாழும் பராபரையே - என்றால் மறக்கக்கூடாத மதுராபுரியின் வாழ்க்கையுற்ற பராபரையே, பணிவிடை ஆற்றிலன் என்றே பிரம்பு அடி பட்டவனை - கட்டளைப் படி செய்திலனென்று பிரம்பினா லடிக்கப் பெற்ற சொக்கலிங்கப் பெருமானை, பணி விடை ஆளன் என்று இருக்கும் ஓபாது பகர்வது எல்லாம் - சர்ப்பத்தையு மிடபத்தையும் ஆள்பவனென்று வேதங்களுமிடைவிடா திசைப்பன முழுதும், பணிவு இடையார்க்கு அருள் நின் சேல் விழி கடைபார்வை அன்றோ - வணக்கத்திற் பின்னிடார்க் களிக்கின்ற நினது கயல்போலுங் கடாட்சப்பார்வைகொண் டல்லவோ, விடை பணி - (இதற்கு) உத்தரவுசொல்வாயாக. [பராபரை - உலகத் தோற்றத்திற்கு முன்னும் பின்னுமுள்ளவள்] (சுக)

பரவித்த வஞ்சகப் பேயோட்டுங் கூடற் பதியைநிதம்
பரவித்த வஞ்சக ஜீவ பரம்பயன் பாத்துணரிற்
கரவித்த வஞ்சகங் காராதி வென்று கயற்கண்ணியக்
கரவித்த வஞ்சக மெஞ்ஞான மாம்பழங் கைக்கொள்வமே.

(இ - ள்.) அகம் — மனமே!, பர வித்தம் வஞ்சகம் பேய் ஓட்டும் - பிறர்பொருளைக்கவரும் வஞ்சகமாகிய பிசாசை யொழிக்கத்தக்க, கூடல் பதியை நிதம் பரவி - மதுராபுரியைத் தினந்தோறும் பணிந்து, சகம் சீவன் பரம் தவம் பயன் பாத்து உணரில் - சகமென்பதுஞ் சீவனென்பதும் பரமென்பதுந் தவமென்பனவும்பயனென்பனவும் (இத்தன்மையுடையனவென்று) பகுத்துணரின், கரவித்த அஞ்சு அகங்காராதி வென்று - மறைவித்ததும் அஞ்சத்தக்கதுமாகிய அகங்காராதிகளை யடக்கி, கயல் கண்ணி அக்கர வித்து அ அஞ்சு - மீனாட்சிதேவியினது அட்சரங்களுக்கு மூலமாகியவந்தப் பஞ்சாக்கரத்தினாலே, மெஞ்ஞானமாம் பழம் கை கொள்வம் - உண்மையறிவாகுங்கனியைக் கைக்கொள்வோம். (கூஉ)

கொள்ளச்சிந் தாமணி யென்கோ விருக்கொலிக் கூடலன்ப
ருள்ளச்சிந் தாமணித் தீபமென் கோவினை யூட்டுபவப்
பள்ளச்சிந் தாமணிக் கப்பலென் கோவெங்கள் பக்கமென்கோ
கள்ளச்சிந் தாமணி ரந்தான் பிணைகயற் கண்ணியையே.

(இ - ள்) கள்ளம் சிந்தாய் மண் இரந்தான் பின்னை கயல் கண்ணியை - கபடத்தொடு வாமன வடிவங்கொண்டு பூமியை யாசித்த விஷ்ணுமூர்த்திக்குத் தங்கையாகியமீனாட்சிதேவியை, கொள்ள சிந்தாமணி யென்கோ - (விரும்பிய வற்றைப்) பெறற்குச் சிந்தாமணியென்பனோ, இருக்கு ஒலி கூடல் அன்பர் உள்ளம் சிந்தா மணி தீபம் என்கோ - வேதங்கள் முழங்குகின்ற மதுராபுரியின்கண் ணன்புடையாரிதையத்து வாடாத விரத்தின விளக்கமென்பனோ, வினை ஊட்டும் பவம் பள்ளம் சிந்து ஆம் அணி கப்பல் என்கோ - வினையாலூட்டப் படுகின்ற பிறப்பென்னுமாழிய கடலைக் கடப்பதற்கேற்ற வலங்காரக் கப்பலென்பனோ, எங்கள் பக்கம் என்கோ — எங்களன்புருவமென்பனோ. (கூ௩)

கண்ணே திரவியமே யருங் கூடலிற் காஞ்சனையின்
பெண்ணே திரவியஞ் சாருன் றிருவுளம் பேதமுறின்
விண்ணே திரவியஞ் சோமாங்கி யேதரி வேதியனே
தெண்ணே திரவியங் கும்பக லேதுமற் றேதுரையே.

(இ - ள்-) கண்ணே - நேத்திரமே, திரவியமே - பாக்கியமே அரும் கூடலில் காஞ்சனையின் பெண்ணே - அரிய மதுராபுரியிற் காஞ்சனமாலையாரின் புத்திரியே, திரம் வியம் சார் உன் திருவுள்ளம் பேதம் உறின் - நிலைத்த பெருமையைப் பூண்ட நினது திருவுள்ளம் வேறுபடுமாயின், விண் ஏது - ஆகாயம் (முதலிய பூதங்கள்) ஏது, அம் இரவி சோமன் அங்கி ஏது - அழகிய சூரியசந்திராக்கினி யேது, அரி வேதியன் ஏது - விஷ்ணு பிரமாவேது, எண் ஏது - கணக்கேது, இயங்கும் பகல் இரவு ஏது - வழங்கும் பகலிரவென்னுங்காலமேது, மற்று உரை ஏது - வேறுசொல்லேது. (கூச)

உரையாக் கனுக்கண்ட மூங்கைய ராய்ச்சம ணோயச்சம்பந்
தரையாக் கனுமயக் கூடற் பிராட்டியைச் சாற்றுமன்பர்
நிரையாக்க னுருரிப் பார்க்குங்கொ டாரையென் னோர்வரை
வரையாக்க னுவெனப் பாடார் வருந்தினு மானிடமே. [யும்

இ - ள்.) உரையா கனு கண்ட மூங்கையராய் சமண் ஓய - சொல்லத்தகாத சொப்பனங்கண்ட வூமையரையொப்பச் சமணர்க் ளொடுங்குமாறு, சம்பந்தரை ஆக்கும் அனுமயம் கூடல் பிராட்டியை சாற்றும் அன்பர் - சம்பந்தமூர்த்தியை யுண்டாக்கியவளும் நோயற்ற மதுரைநகர்க் கரசியு மாகியதேவியைப்புகழுந் தொண்டராயினோர்,

வருந்தினும் - வறுமைப்படினும், நிரையா கல் நார் உரிப்பார்க்கும் கொடாரை என் - வரிசையாய்க்கல்லில் நாருரிப்பவர்களுக்கு மீயாரைப்பற்றியென்னசொல்வது? நேர்வரையும் - கொடையாளரையும், வரையா கன்று என்ன மானிடம் பாடார் - மாருதகர்னனேயென்று மனிதரைப்பாடார். (௬௫)

மானேந்தி யங்க மலையுரித் தோனைநன் மன்னனென்று
ஞானேந்தி யங்கர ணாதியைச் சீவ னயப்பதுபோற்
கோனேந்தி யங்கவைத் தாயன்னை யன்னவன் கூடலன்ப
ரானேந்தி யங்கவி டாதா ளினுநின் னடைக்கலமே.

(இ - ள்.) அன்னை - மீனாட்சிதேவியே!, சீவன் - ஜீவான்மா, ஞான இந்திரியம் கரணாதியை நயப்பதுபோல் - ஞானேந்திரியங்களையுங் கரணமுதலியவற்றையுந் தழுவிவாழ்வதுபோல, மான் ஏந்தி அங்கம்மலை உரித்தோனை - மானைப்பிடித்தும் யானையையுரித்துந் திரிந்தசிவனை, நல் மன்னன் என்று - நன்மையுற்றசுந்தபாண்டிய மகாராஜனென்றுகொண்டாடும்படி, கோல் நேர்ந்து இயங்க வைத்தாய் - (நினது செங்) கோலையளித்துவிளங்கச்செய்தனை, அன்னவன் - அச்சோமசுந்தரக்கடவுள், கூடல் அன்பர் ஆனேம் தியங்க விடாது ஆளினும் - மதுராபுரிக் கன்புடையேங்களை மயங்கவிடாதுகாப்பாற்றினும், நின் அடைக்கலமே - நினதுகாவலினின்றும் புறம்பாகேமன்றோ. (௬௬)

அடைக்கலந் தாங்கலு மாங்காங் குலகையுண் டாக்கியவை
யிடைக்கலந் தாளலும் போக்கலு மாற்றுமென் றேத்துமறை
மடைக்கலந் தாளிற மோதுந் திரைவைகைக் கூடலின்வாழ்
படைக்கலந் தாங்கும் பலராம சோதரி பாதத்தையே.

(இ - ள்.) கல் மடை அம் தாள் இற திரை மோதும் - கற்கட்டுமதகுகளையு மழகியபூட்டுக்களையும்நொறுங்கும்படியலைமோதுகின்ற, வைகை கூடலின் வாழ் - வேகவதி நதிசூழ்ந்த மதுராபுரியின் வாழ்க்கையுற்றவளும், படைக்கு அலம் தாங்கும் பலராமன் சோதரி பாதத்தை - ஆயுதத்திற்குக் கலப்பையைத்தரிக்கும் பலராமனது சகோதரியுமாகிய மீனாக்ஷிதேவியாரின் திருவடிகளை, ஆங்கு ஆங்கு உலகை உண்டாக்கி - அவ்வவ்விடங்களில் உலகங்களைப் படைத்தலும், அவை இடை கலந்து ஆளலும் - அவைகளுட்டோய்ந்து காத்தலும், போக்கலும் - (ஊழிக்காலத்து) அழித்தலும், அடைக்கலம் தாங்கலும் - அடிமையேற்றுக்கொள்ளலும், ஆற்றும் என்று மறை ஏத்தும் - இயற்றுமென்று வேதங்கள் துதிக்கும். (௬௭)

பாதர சத்துழ லாக்கூட லன்பர் பசிக்கமுதம்
மாதர சத்துவி தர்க்கொளி யாப்பொருண் மற்றெவர்க்கும்
பூதர சத்துரு வாமுலைத் தாய்சிவ போகவத்தா
மாதர சத்துளத் தொட்டா ளெனக்குயி ரம்பிகையே.

(இ - ள்-) அம்பிகை - மீனாட்சிதேவியார், பாதரசத்து உழலா கூடல் அன்பர் பசிக்கு அமுதம் -இரசத்தைப்போற் சலியாது மதுராபுரிக்கன்பினரது பசியையொழிக்கு மமுதாவாள், மாது அரசு - மங்கையர்க்கரசியாவாள், அத்துவிதர்க்கு ஒளியா பொருள் - அத்துவிதசம்பந்தமுடைய சைவசித்தாந்திகளுக்குக் காட்சிப் பொருளாவாள், மற்று எவர்க்கும் - ஏனையயாவர்க்கும், பூதரம் சத்துருவாம் முலை தாய் - மலைகளைப் பகைக்கத்தக்க கொங்கைகளையுடைய வன்னையாவாள், சிவ போகம் வத்து ஆம் - சோமசுந்தரக்கடவுளின் போகத்துக்குகந்த வஸ்துவாவாள், ஆதர் அசத்து உள்ளத்து ஒட்டாள் - அறிவீனரதுகெட்டவுள்ளத்தடையாள், எனக்கு உயிர் - அடியேனுக் காவியாக விளங்குவாள். (௬௮)

கையோ தனத்தை நழுவவிட் டுப்புறங் கைநக்கல்போற்
பொய்யோ தனத்தையன் மாற்கருங் கூடற் புரியையகன்
றையோ தனத்தைய லாரோ டயற்பதிக் கண்டலென்பர்
வெய்யோ தனத்தைய ராதுவென் றுளருள் வித்தகரே.

(இ - ள்.) பொய் ஓதல் நத்து அயன் மாற்கு அரும் - பொய்யுரைத்தலைவிரும்பிய பிரமாவிற்குமாலுக்கு மருமையாகிய, கூடல் புரியை அகன்று - மதுராபுரியைநீங்கி, தன தையலாரொடு - கொங்கைகளையுடைய மனைவிமுதலாயினரொடு, அயல் பதிக்கு அண்டல் - பிறதலங்களுக்கு அடைதலை, வெய் ஓதனத்து அயராது வென்றுள் அருள் வித்தகர் - வெய்யபோர்முகத்துத்தளராது வெற்றிகொண்டாளாகியதடாதகையாரி னருட்குரிய வான்றோர், கை ஓதனத்தை நழுவ விட்டு - கைக்கொண்டவமுதை நழுவவிடுத்து, ஐயோ புறம் கையை நக்கல் போல் என்பர் - அந்தோ புறங்கையைநக்குதலுக் கொப்பாகுமென்றுரைப்பார்கள். (௬௯)

வித்த சனத்தையிங் காக்குதல் போல விதித்துலகை
யொத்த சனத்தைவ ராங்கள் வரையுள் ளொடுக்குதவச்
சுத்த சனத்தை யளிக்கச் சுருதி தொழத்தக்கவாஞ்
சித்தச னத்தையங் கூடற் பிராட்டி திருவடியே.

(இ - ள்.) சித்தசன் அத்தை அம் கூடல் பிராட்டி திரு அடி - மன்மதனுக்கத்தையராகிய அழகியமதுராபுரியில்வீற்றிருக்கின்ற மீனாட்சிதேவியாரின்திருவடிகள், வித்து அசனத்தை இங்கு ஆக்குதல்போல - விதையானது உணவிற்குரியவைகளை இப்பூமியின்கண்விளைப்பது போல, உலகை விதித்து - புவனங்களைப்படைத்து, ஒத்து -(அதனோடு) கலந்து, அசல் நத்து ஐவர் ஆம் கள்வரை - புறத்தைவிரும்புகின்ற பஞ்சேந்திரியங்களாகிய திருடரை, உள் ஒடுக்கு தவ சுத்த சனத்தை அளிக்க - அகத்திலடக்குந்தவத்தெளிவுற்ற தொண்டரைக்காப்பாற்றவும், சுருதி தொழ தக்க ஆம் - வேதங்களாற்போற்றவுந்தக்கன வாகும். (௯)

செயற்கரு மாதவப் பேறோங்கி வாழ்விற் சிறந்துவப்பார்
வயற்கரு மேதிகள் முத்தந் தெறிக்க வளையுழக்கு
மயற்கு மரிக்குமெட் டாக்கூடன் மாநக ராட்சிசெய்யுங்
கயற்கண்ணி தாசனந் தாதியைக் கேட்கினுங் கற்கினுமே.

(இ - ள்.) கரும் மேதிகள் முத்தம் தெறிக்க வளை உழக்கும் வயல் - கரியவெருமைகள் முத்துக்கள் தெறிக்கும்படி சங்கினங்களைத் துகைத்துலவுகின்றவயல்சூழ்ந்த, அயற்கும் அரிக்கும் எட்டா - பிரம விஷ்ணுக்களுக்கும் அரிதாகிய, மா கூடல் நகர் ஆட்சி செய்யும் - பெரியமதுராபுரியையாட்சிசெய்கின்ற, கயல் கண்ணி தாசன் - மீனாட்சிதேவியார்க்குத்தொண்டனிசைத்ததாகிய, அந்தாதியை - அந்தாதியென்னும்நூலை, கற்கினும் கேட்கினும் - படிப்பினுங்கேட்பினும், (அனையர்) செயற்கு அரும் மா தவம் பேறு ஓங்கி - செய்தற்கரியமேன்மையுற்ற தவப்பயன்வளரப்பெற்று, வாழ்வில் சிறந்து உவப்பார் - வாழ்க்கையின் விளக்கமுற்று மகிழ்ந்திருப்பார். (௱க)

மதுரையென்னும்

**கூடலந்தாதிமூலமும் உரையுமுற்றுப்பெற்றது.**

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# தோத்திரமாலை

## காப்பு

எத்திசையு மலைப்புரளத் துளிசிதற மால்வெருவ
விறைஞ்சி வானோர்
அத்திதருஞ் சுதைவிரும்பக் கடலுழக்கி விளையாடுந்
துதிக்கை யானை
புத்திவிசா லத்தினரும் போதினரும் புகழ்மதுரா
புரியின் வாழுஞ்
சித்திவிநா யகமூர்த்தி திருவடியெம் விருப்பளிக்குந்
தேனு வாமே.

தாயே பணிந்தடி தஞ்சமென் றோர்க்குத் தயைபுரிய
நீயே யலதுமற் றுண்டென்பனோ விந்த நீணிலத்திற்
பேயே யெனத்திரிந் தோய்வதல் லானின் பெருமைசற்று
மாயேனைக் காத்தருள் வாய்மது ராபுரி யம்பிகையே. (உ)

தாயாகிச் சேயாகித் தற்பரமாய்ச் சித்துருவாய்த்
தருவாய்ப் பூவாய்
காயாகிக் கனியாகிக் கசிந்தொழுகும் வித்தைப்போற்
கலந்து நிற்பாய்
பேயாகிப் பித்தாகிப் பிதற்றியலைந் திடுவேனின்
பெருமை யெங்ஙன்
வாயாரத் துதிசெய்வேன் மதுரைநகர்க் கயற்கண்ணி
வழங்கு வாயே. (௩)

மாதர சங்கயற் கண்ணிக் கியைந்த மணப்பிள்ளையாய்ப்
பூதர மேத்தச்செங் கோல்கொண் டுலகைப் புரக்குமெந்தாய்
சீதர னும்புகழ் கூடற்சொக் கேச திருக்கடைக்கண்
ணாதர வாயெமைப் பார்த்தருள் வாய்நின் னடைக்கலமே. (௪)

கண்டிகையு மணிமுடியுங் கவிகையுஞ்செங் கோலுமதுக்
கமழும் வேப்பின்
வண்டிசையு மாலிகையு மாதனமுங் கயற்கண்ணி
வழங்கப் பெற்றே
யெண்டிசையும் புகழ்பரவு கூடலுவந் துலகாளு
மிறைவ னென்றன் [ப்பது
றொண்டரோ டெம்மையுங்கொண் டுனைப்போற்றிச் சுகித்திரு
நருள்செய் வாயே. (ரு)

நடம்பார்க்க வேண்டும் புலிச்சேய் பசிகெட நச்சியுண்ணு
மிடம்பாற் கடலை யளித்தா யெனுமிசை யேற்றத்தினு
முடம்பர்வ லுற்றுழ ஞயேற் களித்த லுயர்ச்சியன்றே
கடம்பாருங் கூடலிற் சுந்தர பாண்டியக் காவலனே. (சு)

மட்டுலவு மலர்க்கூந்தன் மாதரசங் கயற்கண்ணி
மணாள ஞகிக்
கொட்டுமுழக் கிடுங்கூடற் புரியையருங் கயிலையெனக்
கொண்ட கோம
எட்டுணையுந் தவமறியா வேழையமென் றளிக்கவுள
மிரங்கா யென்னிற்
பிட்டுதவும் வாணிச்சிக் கருளியதெவ் வாறதனைப்
பேணு வாயே. (எ)

அருவி கொழிக்குந் தரளத்தை முட்டையென் றன்னப்புட்கள்
மருவிக் கிடக்கு மடைவளப் பாண்டி வரைத்தலைவ
குருவிக்கு மெய்ம்மை யிழிவாக்கு வாயெனிற் கூட்டுவரா
மிருவினை யுந்துடைத் தாட்கொள்ளு வாய்மது ரேச்சுரனே. (அ)

கலவரஞ்செய் காமனம்புங் கடும்பிணியுங் காற்றனலைக்
கலந்தா லென்ன
வுலகருக வொறுக்குமதை யொழிக்கவுன தருளடையார்க்
குய்த லுண்டோ
குலவரையைத் தொகுத்ததெனக் கோபுரஞ்சூழ் கூடனகர்க்
குறுதி கூட்டுந்
திலகநுத லங்கயற்கட் செங்கனிவா யம்பிகையின்
சேர்க்கை யோனே. (கூ)

கஞ்சாவு மூனுங் கலந்துண்டும் வேசிக் கலவிகொண்டுந்
துஞ்சாப் பதவி யடைவதுண்டோ விந்தத் தொல்லுலகி
னெஞ்சார நின்றிரு வாக்கருள் வாய்முத்தர் நேயமுறும்
பஞ்சாக் கரப்பொரு ளேகூடல் வாழும் பரசிவமே. (ய)

சந்தன வரையின் சமீரணப் பிள்ளை
தவழ்ந்திருந் தெழுந்துசஞ் சரிக்கும்
நந்தன வனஞ்சூழ் கூடலிற் சோம
சுந்தர நல்லிசைப் பாணற்
கிந்தன மேற்ற தலையனென றியம்பு
வாரியம் பிடவுல கெவைக்கும்
வந்தன பேற்குந் தலைவனென் றுன்னை
வணங்குதும் வரந்தரு வாயே. (யக)

மூப்பிட்டுச் சீப்பட்டுத் தீக்கிட் டுடல்கெடு முன்னர்ப்பல
வாப்பிட்டுத் தோப்பிட்டு மேற்பட்ட வாற்றி னுடைப்படைத்து
மாப்பிட்டுச் சாப்பிட்டுக் காப்பிட்ட கூடலின் மாப்பிள்ளையைக்
கூப்பிட்டுப் பாக்கட்டித் தோட்கொட்டிச் சேர்களி கூருநெஞ்சே

புதுமணம் வீசும் பூநற வுண்ட
பொற்சிறை வண்டென மயங்கிப்
பொதுமடந் தையர்கண் வலையினிற் படாத
புலனெமக் குவந்தருள் புரிவாய்
முதுமறை முழக்கு முத்தமிழ் வழக்கு
மூவுல கத்தையும் விளக்கும்
மதுரையங் கயற்கட் டேவியை மருவும்
வரதனே மாசிலா மணியே. (யரு)

கஞ்சம் புகழுநின் சேவடி போற்றிக் களிக்குமன்ப
ரஞ்சம் பனங்கனை வெல்வரன் றேவெங்க ளம்பிகையி
னெஞ்சங் கலந்த மதுராபு ரேச நினைப்பணிந்து
தஞ்சங் கருதெம்மை யாதரிப் பாய்வரந் தந்துவந்தே. (யச)

தினையளவுஞ் சுவையுணராச் செவிப்புழையிற் கலனுழைத்துத்
திரியு மாந்தர்
பனைமரத்திற் பருத்துயர்ந்தும் பயனில்லை யென்றறிஞர்
பகர வேயு

மனையவரை ரசிக்கிகா மணியெனவின் னிசைபாடி
யலைந்தே னந்தோ
வினையியலைத் தடுத்தாள நினையலதுண் டோமதுரை
விளக்குந் தேவே. (௰௫)

கண்கொண் டுரைத்துச் செவிகொண்டு நோக்கிக் கருத்துணர்த்த
லெண்கொண்ட வேந்தர்க் கியற்கையென் பாரவ் விரண்டுமின்றித்
திண்கொண்ட தெக்கண மூர்த்தியின் மோனத் தியானமுற்றாய்
விண்கொண்ட கூட லரசாட்சி யெங்ஙன் விடைவலனே. (௰௬)

குலநலம் பேணு குறிதவம் பூணு
கொலைகள வசத்திய நாணு
நிலையென வாழ்வைக் களிப்பதற் கல்லா
னினைத்தொழக் கலங்குமென் னெஞ்சைப்
பலமணி விறகு வளைசுமந் தன்பர்
பண்புற நடந்தநின் பதும
மலரடிச் சுவடு தோய்தவ மதுரை
வள்ளலே தேற்றியாள் வாயே. (௰௭)

மேவாத மானிடம் பெற்றென் பெருமலென் வேதநன்னூற்
பாவாணர் போற்றருந் தென்கூடற் சுந்தர பாண்டியனுந்
தேவாதி தேவனைச் சேற்கண்ணி நாதனைச் சிந்தைகொண்டு
நாவார வாழ்த்தத் தலைதாழ நேத்திர நாடவுமே. (௰௮)

உதவிசெய் பவர்போ லுண்டுடுத் துவக்கு
முறவின ரொருங்குசூழ்ந் துறினுங்
கதமிகு மறலி வருங்கடை நாளிற்
காக்குன ருனையலாற் காணேன்
மதவரை யுருட்டி மணிகளைத் திரட்டி
மதகொடு மரங்களைப் புரட்டிச்
சிதறிடு வைகை நதித்துறை மதுரைத்
தென்னவ னாகிய சிவனே. (௰௯)

ககராச வாகன் மாலயன் போற்றக் கனகமணிச்
சிகராச லத்தைச் சிலையா வளைத்த சிவபெருமான்
மகராச தானி மதுரா புரியென்று வாழியனேல்
நிகரா சதமக னூர்முற்ற மாமிந்த நீணகர்க்கே. (௨௰)

பங்கையப் பவளக் காலனப் பேட்டை
வெள்குற நடையினாற் பழிக்கு
மங்கையர் குலவு மாடமா ளிகைசூழ்
பொழின்மது ராபுரி மருவி
எங்கணு நிறையும் பொருளதாய்ச் சோம
சுந்தர மாகியேத் திடுவோர்
சங்கடப் பிணிதீர் மருந்துமா மீசன்
றண்மல ரணிகுவாந் தலைக்கே. (உக)

நவப்பிர சம்பொழி சொல்லின ளம்பிகை நாதவுன்றன்
றலப்பிர சன்னமன் பர்க்களிப் பானிம்பத் தாரணிந்தாய்
திவப்பிர பாகரத் தேசார் விமானந் திகழ்மதுரைச்
சிவப்பிர காச விளக்கேற்று வாயெங்கள் சிந்தையினே. (உஉ)

கடுவுடை யரவும் வேங்கையுங் களிறுங்
கதங்கொளுங் கான்வரை யுறைந்து
படுசரு குதக மனிலமுண் டுடலை
யுலர்த்திடு மென்கொலோ பயன்மா
வடுநிகர் விழியா ரொடுமகஞ் சுகித்து
மதுரையீ சனைப்பணி வாரே
லுடுபதி யிரவி யுதிரினு மழியா
வுயர்பதம் வாழ்குவா ருவந்தே. (உங)

வாட்டானை மன்னர் கடைகாத்து நின்று வணங்கியுன்றன்
றாட்டானை சாத்தித் திறையளந் தேத்துந் தலைவசமட்
கோட்டானை மாய்த்தருங் கூடலைப் போற்றினை கூசுமிடி
காட்டானை யுண்ட கனியாக்கி டாதெமைக் காத்தருளே. (உச)

எப்புரியு மிணையிலதா யிலங்குறுதென் கூடலெனு
மிசைபெற் றோங்கு
மிப்புரியி னரியதனை யைந்துகதிப் பரியாக்கி
யேந்தற் கீந்து
முப்புரிநூ லணிமணிவா சகர்துயரை யொழித்தாண்ட
முக்கட் சொக்கைச்
செப்புரிமை கொண்டுபணி நாளெல்லா மின்பளிக்குந்
திருநா ளாமே. (உரு)

திருவால வாயுறை தேனைக் கனியையெந் தெள்ளமுதை
முருகா லகமகி ழுத்தனை மூவர்க்கு மூலத்தனை
ஒருகால மேனுமைந் தக்கரத் தன்புகொண் டுன்னுவரேல்
வருகா லனுமஞ்சித் தெண்டனிட் டோடுவன் மாடிழிந்தே. (உசு

பொன்னாருஞ் சடைமறையப் பொங்கொளிமா மணிமகுடம்
புனைந்து கூடன்
மின்னாருங் கொடிநுசுப்பங் கயற்கண்ணி யம்பிகையின்
வேட்கை பெற்றுத்
துன்னாரை வேரறுத்துத் தொண்டர்தமைக் காப்பாற்றித்
துலங்க வைப்பான்
தென்னாருஞ் செழியரிசை சிறக்கவந்த சுந்தரனைச்
சேவிப் பாமே. (உஎ)

விண்காணா வேதண்ட மாமலை யானையெம் வித்தகனைப்
பண்காணா வேத வுரைக்கடங் கானைப் பரஞ்சுடரைப்
பெண்காணா வாமத் திறைவனைக் கூடற் பிரானையென்று
மெண்காணா வந்து பணிமன மேகரை யேறுதற்கே. (உஅ)

கல்லானை யருந்தநெடுங் கரும்பளித்த கரத்தானைக்
கவடர் காண்டற்
கொல்லானை யனுதினமு முளமுருகும் பத்திகொளு
முணர்வி னோர்க்கு
நல்லானை யாரணனு நாரணனு மஞ்சலித்து
நயந்து போற்றும்
வல்லானைத் தென்கூடற் புரிச்சோம சுந்தரனை
வாழ்த்து வாமே. (உகூ)

வாதினை நீசெயி னான்றர மோவிந்த வையகத்தோர்
கோதினை நீத்துச் சுவைகொள்ளு வார்கழைக் கோணலெண்ணா
ரோதினை நால்வருக் குண்மைப் பொருளை யுனதுபதப்
போதினைத் தந்தெமைக் காப்பாய் மதுரை புரப்பவனே. (௩௰)

பகுத்தறி வில்லாப் பேதையென் பாயே
லைந்தொழிற் குரியநின் பரிவால்
வகுத்தமூ வுலகுக் கத்தனீ யன்றோ
மற்றெவர் மக்களின் றுயரைச்

செருத்தறி வுறுத்துங் கருணைகொண் டாள்வா
ரரசனுந் தெய்வமு மாகித்
தொகுத்திடக் கதிரோன் றழைக்குநெல் விளைக்குந்
துவாதசாந் தத்தலத் துரையே. (௫௧)

பண்ணானைப் பண்ணின் பயனானைப் பத்தரைப் பார்த்தருளுங்
கண்ணானைக் கண்ணின் மணியானைக் கூடற் கயற்கண்ணியாம்
பெண்ணானைப் பெண்ணின் பெருமானைப் பேய்மன வஞ்சகர்பால்
நண்ணானை நண்ணுவ ரேலவ ரேயெங்க ணற்றுணையே. (௫௨)

தேசிக னெனநின் றிருவடி மலரிற்
றிரம்பெற மனதினைச் செலுத்தேன்
வாசியை யடக்கும் வழியையு மறியேன்
வன்கணா ரொடுநிதம் வதிந்திக்
காசினி யதனிற் காலனுக் காளாய்க்
கலங்குறுங் கடையனேற் கிரங்கி
மாசிலா வபைய வரமளித் தாள்வாய்
மதுரைமா லிங்கமாம் வடிவே. (௫௩)

தேனார் மொழிபிறை நெற்றிமுத் தந்நகை யென்றுதின
மானார் கலவி மடுவீழ்ந்து மாழ்கி வருந்துமெம்முன்
மீனார் கண்ணி யொடுந்தோன்றி மீதெடுத் தாற்றிவிட்டால்
வானாட ரேசுவ ரோமது ராபுரி மாணிக்கமே. (௫௪)

பற்றிடாரந் தீவினையைப் பரிதிமுன மிருளென்னப்
பாறச் செய்தே
பெற்றிடலா மிகபரசா தகப்பேறுங் கதியனைத்தும்
பெருத்த கொங்கைச்
சிற்றிடையங் கயற்கணுமை திகழ்ந்தருள்கூ டற்பதியிற்
றேவ ரேத்த
வுற்றிடுசொக் கலிங்கேச னுபையசா ணுளத்திருத்தி
யோது வோரே. (௫௫)

முத்தனை மூவுல குந்தொழுங் கூடன் முளைத்தெழுந்த
சுத்தனைச் சொக்கலிங் கேசனைச் சொன்மல ராணிமி
னெத்தனை யோசனை னத்தினு மேதொடர்ந் தெய்துமிவ்வினை
யத்தனை யுங்கதி ரோன்முனந் தண்பனி யாய்விடுமே. (௫௬)

ஆதியிடை கடையிலனா யகண்டபரி பூரணனா
யருண்மெய்ஞ் ஞானச்
சோதியனாய்ச் சூக்குமனாய்ச் சுருதிசொல் திருபாதத்
தொழுவ னாகி

வேதியனும் விருத்தனொடு விறற்குமர பாலனுமாய்
விளங்குஞ் சொக்க
நாதனிரு நளினபத நலனளித்தெம் முளத்துவந்து
நடிக்குந் தானே. (ரு௭)

வண்டாரும் பூங்குழ லங்கயற் கண்ணிகைம் மாலிகையைக்
கொண்டானுங் கூடலிற் கோல்வளை கோல்வளை கொண்மினென
விண்டானுஞ் சூத்திரங் கொண்டண்ட முற்றும் விதிர்ப்பவனுங்
கண்டாரு மன்னவ னைப்பணி வீர்பவக் கட்டறுமே. (ரு௮)

வேலையி னகன்று வேலினைக் கனன்று
வெங்கடுத் தோய்ந்தரி படர்ந்து
மாலையி னுலவு மாடவர் மனத்தை
மருட்டுகண் மாதரான் மயக்குற்
றுலதைத் தீர்த்துன் னரியயற் கரிய
வம்புயப் பதத்துணை யகத்துட்
சீலமோ டுறையத் திருவருட் புரிதி
தேம்பொழிற் கூடனா யகனே. (ரு௯)

ஆடற் குவந்தனன் சங்கப் புலவ ரருகிருந்து
பாடப் பலகை யளித்தபிரா னுமை பாகன்மணி
மாடச் சிகர மதிதொழச் சாளர வாயுதவுங்
கூடற் பதிப்பர னேயெம்மை யாளுங் குலதெய்வமே. (௬0)

தேனுகுக்கு மலர்த்தடஞ்சூழ் தென்கூடற் புரியரசு
செலுத்து மெந்தாய்
வானுலகு நான்மறையு முனிவரரும் புலமையரும்
வழுத்து நின்னை
யானுமொரு கவிஞனெனப் பாடவகங் கொண்டதையிங்
நகரி லாயிற்
பானுமுன மின்மினியா மெனினுமுன தருட்கேற்பப்
பாலிப் பாயே. (௬௧)

உம்பல வாமுலை வேசிய ரூட லொழித்துவந்து
தம்பல வாயித முண்டுள் ளுருகித் தவங்கலையாக்
கம்பல வாறிழந் தேங்கினை வீர்சொக் கலிங்கவெள்ளி
யம்பல வாணனைப் போற்றுதி ரேல்வரு மானந்தமே. (௬௨)

தன்னிகரி னின்னரிய திருவிளையா டலைமருவிச்
சரணம் புக்கேம்
புன்னிதையப் பேதையெமக் கின்னலிழுங் கன்னன்மொழி
புகலு கிற்பாய்

கன்னிவயற் சூழ்கூடற் காவலர்பெம் மானெனவோர்
காரணப்பேர்
பன்னிடவுற் றுலகோம்பும் பசுபதியங் கயற்கணுமை
பாகத் தோனே. (௪௩)

பலவள மார்மது ரைக்கிறை யாவட பால்விளங்கும்
நலவள கைத்தன தன்றோழ னுஞ்சொக்க நாதபொருட்
செலவறி யாக்கடை லோபரைத் தோத்திரஞ் செய்தடுத்திங்
கிலவ மரக்கிளி யாக விடாதெமக் கீந்தருளே. (௪௪)

வின்மை நிகரு நுதற்கூந்தன் மீன நோக்கின் மடவாலைப்
பன்மை யோருங் குதுகலிப்பப் பாணி பிடித்துப் பதியாகி
நன்மை தருவா ரெனும்பெயரு நீயே நாட்டிக் கொண்டனையெம்
புன்மை தவிர்த்துப் புரப்பதுநின் புகழ்க்கா மிடையிற் புரிச்சிவனே()

பாடகந் தண்டை சிலம்பார் திருவடிப் பார்வதியி
னூடகத் தாருல வும்முலைப் பாலை யருந்தப்பெற்றோன்
நாடகப் பாவலர் போற்றும் மதுரை நதிவிடுத்த
வேடக மாநக ரீசன் பதந்துணை யெங்களுக்கே. (௪௬)

பொங்கவியா லெரிவளர்க்கும் பூசுரருங் காவலரும்
புலமை யோருஞ்
சங்கவிலா சமூமிரவி சந்திரனும் வியந்தேற்கத்
தருஞ்செஞ் சோதித்
தங்கவிமா னமும்விளங்குந் தென்கூடற் கெழுந்தருளித்
தழைக்கு மெங்கள்
புங்கவிமா மார்பழகன் பொன்னடியைத் தலைக்கணிந்து
போற்று வாமே. (௪௭)

வேலிரும் பாமனக் கைகேயி சொல்லை விழைந்துமலர்க்
காலிருங் கான்சென்று மானத்து மீண்ட கருமுகிலெம்
பாலிருந் தாளுந் திருமார் பழகனைப் பார்த்துவக்கும்
மாலிருஞ் சோலையுங் கூடலும் வைகையு மற்றவுமே. (௪௮)

மந்தர மலையிட் டாழியைக் கடைய
வந்தெழு ளமுதினை வாங்கி
யந்தர வமரர்க் களித்ததற் கிசைய
வளியனுக் களித்தலுன் றொழிலாங்
கந்தரங் கவியு மாலிருஞ் சோலைக்
காவல கமலையின் கணவ
சுந்தர ராஜ நின்னுளங் களிபத்
துதித்தடி தொழுவதெந் தொழிலே. (௪௯)

வாகா வரைத்தடக் கொங்கைநல் லாளுமை மாதுதவு
யோகா மலர்க்குழல் வள்ளிதெய் வானை யுகந்திடுசம்
போகா வுனைத்துதிக் கின்றவெம் பாலருட் பூரணஞ்செய்
தேகா திருப்பரங் குன்று குகாவுப தேசிகனே. (ருய)

அன்பரி னிதைய கமலமுந் தெண்ணீ
ராவியி னம்புய மலரு
மின்பமு நறவும் பெருகவேத் தொலியு
மதுகரச் சுருதியு மிசையுந்
தென்பரங் கிரியிற் காவடி செலுத்தித்
திகழ்வடி வேலனைச் செபித்துத்
துன்பம தொழியத் தொழுதன மனமே
சுகந்தருந் திருவடித் துணையே. (ருக)

மிருதங்கந் தர்ப்பணம் பாலுறு மோவென விம்மிநையு
மிருதங்க மங்கையைச் சேர்ந்தளிப் பாய்கன மேருபஞ்சா
மிருதங்கம் பிந்திசை கந்தர மானனம் விண்ணுதலாள்
மிருதங்க நேரொலிச் சாரற் பரங்கிரி வேலவனே. (ருஉ)

நிழலுறு பொழில்க ளானு நீர்பெறு நதிக ளானுங்
கழனிவாழ் செந்நெ லானுங் காஞ்சிரங் கூப்பி யேத்தித்
தொழுமடி யார்க ளானுஞ் சூழ்ந்திடும் பெருமை பூண்ட
பழநியங் கிரியின் வாழும் பரமனைப் பணிகு வாமே. (ருஙு)

அடலிற் சிறந்திடு வேலா பழநியி லறுமுக
வுடலிற் கலந்த வுயிர்போ லுனைநம்பி யூக்கமுற்றேன்
குடலிற் றுளைக்க வருங்கால னம்பின் கொதிப்படக்காய்
கடலிற் கரைத்த புளியோ வெனதுகவின்முற்றுமே. (ருச)

மாதரசி பர்வதவர்த் தனிராம நாதனடி
மலரு நான்கு
வேதமுறை யிடுகந்த மாதனமும் விண்முகடு
வெடிக்க வார்த்து
மோதுதிரைக் கடலிரண்டி னிடையிரகு ராமனருண்
முதிரச் செய்த
சேதுதரி சனமுமெம்மைத் துயர்க்கடலின் கரையேற்றுந்
தெப்ப மாமே. (ருரு)

துடிக்கும் படிக்கெய்ய வேள்வரும் போதிசைத் தொண்டுசெய்
முடிக்குந் தொழிற்கற்ற மாங்குயில் காளது மோசமன்றோ [து
பொடிக்குங் குமக்கொங்கை யாளுனக் கேமயல்பூண்டுகுன்றைக்
குடிக்கும ராவரச் சொன்னென் றேயினிக் கூவுமினே. (ருசு)

வானத் தவர்க்கு மரிதாக மனமே வாய்த்த வடிவத்தை
யீனத் தொழிலுக் கிழுத்தலைவ தென்னே யினிநா மீடேறத்
தானத் தானை மடுவாளை தாவிக் கமுகின் றலைகிழிக்குங்
கானப் பேரூர்க் காளையர்கோன் கஞ்சக் கழலைக் கருதுதுமே. ()

வானத்தே வாசவ னுன்முகன் செந்திரு மால்மருவுந்
தானத்தே சார்திவச் சத்திய வைகுந்தச் சார்பெளிதாம்
மானப்பேர் துங்கர வேணிப் பிரான்கவி வாணர்க்குற்றோன்
கானப்பே ரூர்மகிழ் காளையர் கோயிலைக் கண்டவர்க்கே. (௫௮)

மருவையனும் புகழ்முனியின் பாரதத்தை மேருவரை
வல்லோர் கொம்பு
மிருவையிறு மும்மதமு நால்வாயு மைங்கரமு
மேற்றோன் றுதை
திருவையமைத் தெழிலளக்குஞ் செப்புமுலை யிளமடவார்
திகழு மாடக்
கருவைநகர்ப் பால்வண்ண நாதனிணைத் தாண்மலரைக்
கருது வாமே. (௫௯)

வல்வே லனகருங் கண்ணார்க் குழைத்தவர் மாளிகைக்குக்
கல்வேலி கட்டிக் கடுங்காவ லிட்டுப்பின் கைப்பொருள்போய்
பல்வேலை செய்து பதராய்ப் பறப்பினும் பைங்கழையி
னெல்வேலி நாதனைச் சிந்திப்ப ரேலரு ணேர்ந்திடுமே. (௬௰)

பண்டைமுத லென்றழைத்துப் பரிதவித்த குஞ்சரத்தின்
பகையை மாய்த்திட்
டண்டருக்கு மரும்பதத்தை யதற்களித்த தாமரைக்கை
யபயங் காட்டித்
தொண்டருளம் போற்குளிருஞ் சோலைவளப் பொருநைநதி
சூழுஞ் சீவை
குண்டமெனுந் தலத்திலங்கும் பெருமாளைச் சேவித்தெங்
குறைதீர்ந் தோமே. (௬௧)

வருகைக் கடுங்கணை மாரனைக் கூவுயிர் வாளிபட்டென்
னுருகைக் கிரங்கலிர் மாங்குயில் காளினி யுற்றுவரந்
தருகைக் கழகனம் மாழ்வார்க்கு வந்தருள் தண்டலைசூழ்
குருகைப் பிரானெனைச் சேரினென் னுழுங்கள் கூக்குரலே. (௬௨)

கன்றெடுத்து விளவுகுத்துங் கஞ்சன்விடு பூதனைபால்
கவர்ந்து மாய்த்துங்
குன்றெடுத்துக் குடைபிடித்துங் கோவலரின் குலம்புரக்குங்
கோமான் றன்னை

டென்றிருப்பே மெனக்கரையு மேழையருக் குவந்தளிப்பா
னிரங்கி மேலாந்
தென்றிருப்பே றையினிலங்குந் திருமாலின் சேவடியைச்
சேவிப் பாமே. (சுங)

மோகன மாதரை முன்னணி யாக்குநின் மோதல்செல்லா
தேகனங் காவெனுஞ் சாதனச் சேனை யெமக்களிப்பான்
பாகனஞ் சொல்நடை யார்தேவி மாரொடும் பச்சைமயில்
வாகன மேல்வரு வாய்திருச் செந்திலின் வாழ்குகனே. (சுச)

குடத்தினி லிட்ட தாகுமிக் கலியிற்
கோபுர விளக்கென வடியா
ரிடத்திரு ளனுகா தொழித்துவந் தளிப்பா
யிகபரத் தென்னுதற் கிணங்கத்
திடத்திரைக் கரத்தாற் சங்கொடு முத்தஞ்
செம்பவ ளத்தையுஞ் சிதறுங்
கடற்கரை விளங்குஞ் செந்திலின் முருக
காப்பெமக் களிப்பதுங் கடனே. (சுரு)

நிரந்தரு வாயுல கெங்கும் புரப்பினு நீதியுற்றார்க்
குரந்தரு வாயுணர்ந் தீவா னருட்கொண் டுதிக்குமுன்றன்
தரந்தரு வாய்துவர் கார்மேனி கண்பதங் கஞ்சமன்றோ
வரந்தரு வாய்தொழு தேன்வான மாமலை மாதவனே. (சுசு)

அள்ளியே கொடுக்கு மவரையுந் தடுத்துத்
தாமுமொன் றளித்திடா தாரும்
கள்ளியே யுலோபக் கண்டகர் தம்மைக்
கவிகொடு புகழ்ந்துநாட் கழித்துத்
துள்ளியே யுழன்ற பேதையே னெளினுந்
துணையென நின்பதந் தொழுதேன்
வள்ளியூர் விளங்குங் கதிர்வடி வேல
மகிழ்ந்திடு வரந்தரு வாயே. (சுஎ)

விராதாதி வீரரை வென்றோன் சகோதரி வேண்டினருட்
டராதா வுனது கடைக்கண் வரந்தாத் தாமதமா
யிராதாள் வரகுண பாண்டியன் றேவி யிசைபெருகு
மிராதா புரத்தன்னை கல்யாணி நின்பத மேத்துவனே. (சுஅ)

பழமறை யோது தமிழ்ப் பாவல ரெந்நாளுந்
தழைய வரங்க ளெலாந் தருவா யதுபோலிங்
கெழிலியின் மேனியனே யிராதா புரம்வாழு
மழகிய மணவாள வெண்ணையு மாண் டருளே. (சுகூ)

குணவாள னென்று மனோன்மணி நீமுனங் கொண்டவனிங்
குணவார் தருவரென் றேட்டாண்டி யாகி யுடையிழந்து
பணவா ளரவணிந் தம்பலத் தாடலைப் பார்த்துமற்றோர்
மணவாள னைக்குறித் தோகட லாடி வசிப்பதுவே. (௭௰)

தன்னியா மகமா யுலகெலா மீன்றுந்
தளர்விலாத் தனிப்பரா சத்தி
கன்னியா குமரி யாவென நாடிக்
கருணைசெய் தாயெனக் கருதிச்
சென்னியான் பெற்ற பயன்பெறத் தொழுதேன்
றென்கடற் கரையுறை தேவி
புன்னியா தார வரமுவந் தளிப்பா
யுத்தம ருளத்துறை யுமையே. (௭௧)

கனந்தங்கு தூயர்க் குடன்பிறந் தார்நலங் கண்டுகொள்ள
மனந்தரு மென்ப துலகோர் மதிக்கும் வழக்குண்மையா
லனந்த புரத்துப் பிழையாக் கிடையனின் னண்ணன்மருந்
தினந்தந் தெழுப்புதற் கோவாழி சார்ந்தனை யெங்கன்னியே. ()

உலகினிடு மனைவிளக்க முற்றதனி விருந்தினர்க்கு
முதவு மாபோற்
பலமுதவும் பதிவிரதை யனசூயை கற்பதெங்கும்
பலிப்பா னெண்ணி
நலவளனுந் திருவருளும் பெருமையொடு மருவுசுசீந்
திரத்தெந் நாளு
மிலகிடுதா ணுவொடயன்மா லெனும்பொருளை யெமதிதையத்
திருத்து வாமே. (௭௩)

பிறக்கைக்குஞ் சாகைக்கு மச்சமுற் றலெனப் பேசிவெண்ணெ
யுறக்கைக்கு ணெய்க்கலை பேதைநெஞ் சேயுனக் கோதுவன்கேள்
மறக்கைக் கரக்கரை மாய்த்தாள் பவனை வணங்குதியேற்
பறக்கைக் குளாமது சூதன மாலருள் பாலிக்குமே. (௭௪)

விருப்பதிலாழ்ந் தறந்துடிக்கச் சானகியைச் சிறையிலிட்ட
வெய்யோன் றன்னைப்
பொருப்பதிரக் கடல்வறளப் பொங்கியெழுஞ் சேனையொடு
பொருது மாய்த்துக்
கருப்பதியா தடியவரைக் கரையேற்றுங் கண்ணிரண்டுங்
கருணை கூரத்
திருப்பதிசா ரத்திலங்குந் திருவாழு மார்பானைச்
சேவிப் பாமே. (௭௫)

புயனத்து மேனியும் பொன்னுடையுங் கொண்டு பூந்தவிசி
னயனத்த னுந்திரு மாலே கடலி னரவனந்த
சயனத்துப் பங்கய நாபா நினதுசெந் தாமரைநேர்
நயனக் கருணை புரிவா யளித்திடு நாயகனே. (எசு)

உருவனந்த சரதன்மக னென்ன வாய்ந்துன்
னுரியவர சிளையானுக் குதவி யோங்குந்
தருவனந்த மடர்கொடுங்கா னடந்து வானோர்
தலையெடுக்கத் தவஞ்செழிக்கத் தசக்கி ரீவக்
கருவனந்தச் சிலைகுனித்து வாகை சூடிக்
கற்பரசி யொடுமீண்ட கமல நாப
திருவனந்த புரத்துனைக்கண் காணப் பெற்றேந்
தீங்கொழித்துக் காப்பதுநின் சீர்த்திக் காமே. (எஎ)

எதிர்கால முற்று மறியுஞ் சனார்த்தன யெம்பெரும
பிதிர்தேவ ருக்களிக் குங்கடன் யாவுநம் பேர்க்களிப்பார்
குதிர்போ லிருந்துண்ண லாமென்ன வோவருள் கூர்ந்துதிரை
யதிர்வேலை சூழ்பொழில் வற்கலை வாழ்க்கைக் கமைந்தனையே. ()

தாயலும் பகலு மியாவுமெம் பெருமான்
றன்மய மென்றூரந் தழையத்
தோயலுந் துயரைக் கடக்கலா மென்னத்
துதிப்பவர்க் கறிகுறி துலங்கக்
காயலுந் தோடுங் கலந்தலை மோதுங்
கடலையுங் கடத்தியே கவின்வ
சாயலுங் கொடையுங் கண்டுமஞ் சேற்கும்
வற்கலச் சனார்த்தனன் சரணே. (எசு)

பாலேறு மாழியுஞ் செந்திருவோடு பரிந்திருக்கு
மேலேய்வை குந்தமும் பாகவ தோத்தமர் வேண்டிடமு
மாலே ரிலைபு மடியா ரிதையமு மாரணமும்
மாலே நினக்கம் பலப்புழை யாய்வந்து வாய்த்ததுவே. (அ0)

மாயசஞ் சார வசுரரை மயக்கி
வானவர்க் களித்ததின் மதுரப்
பாயசஞ் சார மென்றுணத் தெளிந்தம்
பலப்புழை பரிந்திருப் பாயேற்
றேயசஞ் சாரஞ் செய்துனைக் காணச்
செறிந்திடு மன்பருந் திரமாய்
வாயசஞ் சாரங் குறைநரும் வளையின்
மணமலா லென்கொள்வாய் மாலே. (அக)

மிக்கக் கடுவுணி கூத்தாடி பிச்சை விரும்பியுடற்
செக்கச் சிவந்ததும் பாகமென் பார்மக தேவனையாம்
பக்கப் பலம்பப் படாம்பஞ்ச தாரையும் பார்த்தளிக்கும்
வைக்கப் பெருந்திருக் கோயிலப் பாவென்ன வாழ்த்துவமே. ()

முச்சிரனைப் படைக்கமைத்த கரன்பதித்த மாதேவன்
முராரிப் பாதம்
மெச்சிவிரும் பியவளிக்கும் காவலரும் பாவலரு
மேவுங் காவும்
பச்சியரு மச்சியரும் வாத்தியரும் போத்தியரும்
பாட்டு மூட்டும்
விச்சிகத்தி னட்டமியும் விளங்குபெருந் திருக்கோயில்
வேண்டினோர்க்கே. (அ௫)

மருக்கோ கனகத்து மங்கையர் வாழ்வுறும் வைக்கப்பெருந்
திருக்கோ யிலப்ப மகாதேவ நின்றனைச் சேவடியன்
பருக்கோ கையாய்வரம் பார்த்தளிப்பாய்தொழும் பார்ப்பனரோ
திருக்கோ கடன்முழக் கோவெது நின்செவிக் கேற்பதுவே. ()

காலப் புழையிற் பட்டதெனக் கலியா லுழலுங் காசினிக்குப்
பாலப் புழையி லனம்பிரிக்கும் பரிசு காட்டிப் பார்த்தளிக்குஞ்
சேலப் புழைக்கட் பகவதியே செகஜீ வபரச் செம்பொருளே
ஆலப் புழையின் மகிழ்தாயே அடியேம் நின்ற னடைக்கலமே.

அங்கம் புளகிக்கு மன்பரு நான்மறை யந்தணருஞ்
சிங்கம் பொருமிடை யாள்வேத நாயகி சேற்கண்களுங்
கொங்கன் குலவு பவாநிமெய் காவிரி கூர்நதியுஞ்
சங்க முகேச னெஞ்சே நமையாளுந் தயாபரனே. (அ௬)

சொந்தா து கூலங்க ளெவையுஞ் சதாசூழ்ந்து துணை செய்வதாம்
மந்தானி லந்தேனை மகரந்த மொடுவாரி மணம் வீசுறுஞ்
செந்தா மரைத் தேவி வளமேவு கொச்சித் திருப்பூரணச்
சந்தான கோபால னருள்சன் னதியுீ னின்று தரிசிக்கினே (அஎ)

மாலா னவன்முதற் றேவரெல் லோர்க்கு மனங்குளிர
வாலால முண்டருள் காரோண நாதனை யாதரித்து
வேலா யுதற்கன்னை யாய்த்திரு நாகைக்குள் வீற்றிருக்கும்
நீலாய தாட்சியைக் கண்டே மெமைக்கலி நீங்கியதே. (அஅ)

மாலான வர்க்கு மறைநான் முகற்கு மற்றந் தரர்க்குமரிதா
மாலால முண்டு களிதந்தகாய வாரோ கணேசன் மகிழும்
நூலா மிடைச்சி மலையாமுலைச்சி நுதலாம் பிறைச்சி யருள்சேர்
நீலாய தாட்சி சரணும் புயத்தி னிழலே யளிக்கு நிதியே.(௮௯)

பாகைப் பழித்தசொன் னீலாய தாட்சியைப் பக்கத்திலிட்
டிகைக்கு வந்தருள் காரோண நாத னெனும்பொருளை
ஓகைத்தொ னித்திரை மோதுங் கடற்கரை யோங்குதிரு
நாகைக்கு ளேகண்டு கொண்டேயெம் வாழ்க்கை நலம்பெற்றதே

சீரூருந் தமிழ்பாடுஞ் சுந்தரற்காத் தூதுசென்ற
தியாகே சன்பா
லேரூருங் கமலாம்ப நீயுமிடப் பங்குபெறற்
கியைந்து நோக்கித்
தேரூருந் தெருமுழுதும் பரமனடிச் சுவடுகண்டு
திருமால் போற்று
மாரூருங் கைக்கொண்டீ ரெம்மூரும் யாங்களுநும்
மாட்சிக் காமே. (௯௧)

நீரூர்வ ரான்முட்டக் கன்றென்று மேதி நிரைசொரிபால்
பாரூருங் காவிரி காலுடைத் தோடிப் பரந்துநெல்லுங்
காரூருஞ் சோலையுந் தொண்டரு மோங்கக் கருணைசெய்யு
மாரூர்த் தியாகனைக் காணப்பெற் றேங்கம லாலயத்தே. (௯௨)

எல்லையிலாப் பொருளிருக்கு மிடமறியா திரந்துழலு
மேழை நெஞ்சே
முல்லைநிக ரிளமுறுவன் முகிழ்மூலையம் பிகைமகிழு
முதலோன் வள்ளல்
தில்லைநகர் வாழுமெங்க ணடராஜன் றிருவடியைத்
தியானிப் பாயேற்
றொல்லைவினைக் கட்டறுத்துச் சுயஞ்சோதிப் பொருளடைந்து
சுகிக்க லாமே. (௯௩)

கதங்கொண்டு கூற்றை யுதைத்தந் தணனுயிர் காத்ததிருப்
பதந்தனைத் தூக்கி நடிக்குமெங் கோனைப் பரவுசைவ
மதந்தங்கு வேதியர் மூவா யிரரொடு வாழ்பவனைச்
சிதம்பரத் தேகண்டு கொண்டோ மெமக்கருட் சித்திக்கவே. ()

தானந்தத் துவமுணருந் தவமறையோர் முதலன்பர்
தழைத்த ஞேர்ந்
வானந்தத் தமதிடமீ தென்றமரர் மகிழ்பூத
நகரம் வாழ்த்த
மீனந்தத் தையர்கணிழற் றம்மினமென் றெதிர்ந்தேற
வெள்ளம் பொங்கு
மானந்தக் காவிரிவா யரசிருக்கும் விநாயகநின்
னருள்செய் வாயே. (௯௫)

வருவானைக் காளையின் மீதன்பர் போற்ற மகிழ்ந்துவரந்
தருவானைக் காரண னென்றறி யாது தருக்குனரை
மருவானைக் காரடை யுஞ்சோலை பொன்னி வளம்பெருகுந்
திருவானைக் காச்சம்பு கேசனைக் கண்டுகண் சீர்பெற்றவே. (௯௬)

நீவிரிருந்தொன் னூர்களை வென்றெற்
கிசையொடு சநகியு நேர்ந்தி
ராவிரினிக்கிட் கிந்தை யிலங்கைக்
கெனவிடை துணைவருக் களித்தாய்
பூவிரிபொழிலும் புலவரி னெழிலும்
பூசுரர் தொழிலொடு பொருந்துங்
காவிரிசூழு மரங்கநா யகநின்
கருணைதந் தாளெமைக் கனிந்தே. (௯௭)

...AJA MUNIVAR LIBRARY

விலைக்கோட் டையல்குலை விற்றுணும் வேசியர் வீண்மயக்கைத்
துலைக்கோட் டையாவெனப் போற்றடி யாரின் றுயரொழிக்குஞ்
சிலைக்கோட் டையாபரன் போல்வார் பயிலுஞ் சிராப்பள்ளியின்
மலைக்கோட் டையானை முகேசன் சரணை வணங்குதுமே. (௯௮)

கங்கையைத் தலையின் வைத்தாய் கடவுளே கரியமாலின்
றங்கையை யுடம்பின் வைத்தாய் தடாதகைப் பிராட்டியாய
நங்கையை யுளத்தின் வைத்தாய் நலந்தரு வடக்குக்கோச
மங்கையை யருளின் வைத்தாய் போலுநின் வாழ்க்கைநன்றே.

கரும்புங் கதலியுங் காவுங் கமலமுங் கட்சொரியச்
சுரும்புஞ் சுருதியு முண்டார்க்கும் வைகைத் துறைக்கிறைவி
இரும்புங் கனகம தாக்கிய பூவணத் தெந்தையுளம்
விரும்புஞ் சவுந்தர நாயகி தாட்டுணை வேண்டுதுமே. (௱)

மாத்தியா னத்தின் மனம்பொறி யடக்கு
மதிமலி முனிவரர் மருவு
மாத்தியா மிதுவென் றுணர்ந்துளக் கனிவா
யன்புகொண் டனுதின மணுகி
யேத்தியார் தொழினு மவரவர்க் குகந்த
தளித்திடுஞ் சேற்றலைக் கிறைவி
காத்தியா யனியின் பதமலர் தொழுது
களித்ததெங் கண்ணொடு கருத்தே. (௱க)

தூமதி யாதவ மண்டலத் தூடுர சுந்துவச
மாமதி லாலயஞ் சூழ்ந்தேத்தி வாழ்த்தி வணங்குனர்க்குத்
தாமதி யாது மனோபீட்ட மாம்வரந் தந்தருளுங்
கோமதி சங்கர நாரா யணன்பதங் கோருதுமே. (௱உ)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# ஆறுமுகப்பதிகம்.

## விநாயகர் காப்பு.

ஆக்கு மயனைச் சிறைப் படுத்தி யரற்கோங் காரப் பொருளுரைத்த
கோக்கு மரனைத் தமிழ்ப் பதிகங் கொண்டு புகழ்ந்தெம் முளங்குளிர
வாக்கும் பொருளுஞ் சுவைபெருகி வாழ்க வரங்கள் மகிழ்ந்தளித்துக்
காக்கு மியானை முகக்கடவுள் கமல மிசையுங் கழற்றுணையே.

## நூன்முகம்.

மாதவம் புரிகின்ற தொண்டர்சக வாசத்தை மறவா திருக்க வறி
யேன், மாசற்ற தேசிகரை வாழ்த்திமெஞ் ஞானநிலை மார்க்கத்தை
வினவி யறியேன், பேதமற நல்லருள் சுரக்குஞ் சடாக்கரப் பெருமை
யை யுணர்ந்து தெளியேன், பிரியமொடு நின்னிணை யடிக்கமல மீது
ளம் பிறழா திருத்த வறியேன், போதமழ கில்லா திருப்பினும் பெற்
றதாய் புதல்வரை வெறுத்தி டாள்போற், புன்மையாற் பிழைபல
வியற்றிடினு நினையலாற் பொறுமைகொண் டெவர் போற்றுவார்,
ஆதலி னெமக்கருள்வ துன்கடமை யண்ணலே யருமறை துதிக்கு
மமுதே, அடியவர்க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முரு
கையனே. (க)

வரவுசெல வெண்ணாது கணவனை யிகழ்ந்திடும் வன்னெஞ்ச மனை
வி போல, வாதிக்கு மூதாரந் தனக்கஞ்சி யிரைதேடு மார்க்கத்து வறு
மை யென்னுங், கரவுடைய வரவுதீண் டியவிட மகற்றிடக் கருதிநீ
ராட வேகிக், களரிடையின் மூழ்கியதை மானவெவ் வசைதருங் கவ
டமார் வேட மேற்றுப், பரவுமிசை யின்றியே குங்குமச் சுமையலாற்
பயனற்ற கரம தேய்ப்பப், பாரெங்கு மோடினும் நின்னடிமை யல்
லாது பவநோ யறுக்க வசமோ, அரனையுயர் பொருளோதி மகிழ்வித்
த நாதனே யன்புதந் தாட் கொள்ளுவாய், அடியவர்க ளகமகிழ நட
னமிடு மயிலில்வரு மாறுமுக முரு கையனே. (உ)

தாளத்தை வரையைக் கடைந்திடுஞ் செப்பினைத் தங்கக் குடத்தை வென்று, தன்னகங் கொண்டுபூ ரித்துப் புடைத்துமா தவமுலைத் திலகு பொன்னம், பாளத்தை யொத்தவகன் மார்பைக் கவர்ந்தினைஞர் வலியைப் பறித் தறிவெனும், பறவைபட வமுதொடு கலந்துவிடமோவெனும் பண்புறக் கண்கறுத்து, வேளைத் தகர்க்கமுன் சென்றிருளை வாள்வீசி வெட்டியொளி செய்யு மிழையை, விலகென்று சீறிக் கிளர்ந்துவிரை யாற்கச்சு வெடிபடத் தலைகுலுக்கி, யானைப் பிடிக்குமிரு கொங்கைமங் கையர்மோச வழலைக் கடக்க வருள்வாய், அடியவர்க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முருகையனே. (௩)

நெஞ்சைக் கலக்கிமதி துஞ்சற்பு தத்தையொரு நிமிடத்து வரவழைக்கும், நிலையற்ற சாலத்தொ ழிலையப்பி யாசித்து நிறைகண்டுரைத் தளக்கும், வஞ்சக்க ரத்திலெவ ருஞ்சிக்கு றச்சிறிதும் வரவில்லை யென் றடித்து, மலிவைக் குறைத்தேக விலும்வர்த்த கச்சூதின் மருவித் தெளிந்து மாய்க்கும், பஞ்சத்தை யெற்றுகொடை மஞ்சைத் துதித்துழுதா பயிரிட் டிடப் பயின்றும், பலதர்க்க மிட்டோது கலைகற்று மதிகார பதமுற்று மறிவி லார்க்குன், அஞ்சத்தி பெற்றகர கஞ்சத் தமைத்திலகு மபையத்தி னின்ப முறுமோ, அடியவர்க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முருகையனே. (௪)

கட்டாரை யொட்டாது நிட்டூர மிட்டவரை நணுகுமெம வாதை யாலே, நலிவுகொளு மாவியைக் காக்கமுடி யாதகர ணாதியை நயந்து கூடிக், கொட்டாவி நெட்டினை தொட்டோடு நாய்நரி குவலயங்கன லாதிகள், குதிகொண் டெனக்கெனக் கென்றுமொய்த் துண்ணு பல கூறுகொள நாறு முடலைப், பட்டாடை யெட்டாத கட்டாணி முத்திலகு பணியா லலங் கரித்துப், பசிகெட வருந்தலை நிசமென விருந்திடிற் பத்தருக் காளாவனோ, அட்டாறு நிட்டாவ நுட்டான சிட்டருக் கன்பொழுகு தேவ தருவே, அடியவர்க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முருகையனே. (௫)

தன்னிலையி தென்னமன முன்னலற நன்னு டனைத்தேய்த் தகர்த்தை யுற்றுத், தவதான தர்மகல சிவஞான மர்மமுள சதுர்மறைகளைப் பழித்துச், சென்னியுரை யோடட னடுங்குழப் பெய்தினுஞ் சிற்றின்ப மாவ லித்துத், திமிதால திம்மவென நவிலாடி கோற்குளாய்ச் சிரழியு மற்க டம்போற், பன்னிரை தெரிந்திடக் கெஞ்சியுங்

கொஞ்சியும் பரிபவத் தா ளாகியே, பலமாதர் காதலிற் பட்டுளக் கண்ணற்ற பாதகர்க் கேது கதியோ, அன்னிலைக் கஞ்சிநினை யண்டுமடி யேற்கபய மாதரித் தருள் செய்குவாய், அடியவர்க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முருகையனே. (௬)

வனசத்தி னிரசத்தை யளிமொய்ப்ப தலதற்ற மண்டூக மதி யாதுபோல், வங்கவர் தாரதரங் கிணையளவு முணர்விலா மதமேற்ற வன்கண்ணருங், கனகத்தை மிகவுற்ற தனதப்பெ ருமைபெற்ற கன்னனே யென்று போற்றிக், கவி மாலை புனையினும் புலவரே போம்பொழுது கதவடைத் தேகு மென்னு, மனதிற்க டுமையிட்டு விழியைத் துயிலவொட்டு வஞ்சலோ பியரு மேவும், மனைவாயி னிலவுகாக் கின்றகிளி யென்னவெனை வைப்பவொண் ணாது கண்டாய், அனலைத் திரிபுரத்தி லெரியப்பு னகையிட்ட வரனுக் குகந்த குமரா. அடியவர்க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முருகையனே. (௭)

காமாதி யாங்கொடிய மிருகத்தை மதியெனுங் கத்தியாற் றுண்டமிட்டுக், கன்மவலி படருமஞ் ஞானமாங் காட்டினைக் கற்றுணர் வினாலழித்துப், பூமாதர் பொன்னவாம் படுபள்ள மூடுறப் பொய்த்திடரை வெட்டி வீசிப், புனிதமொடு சமமுற்ற நெஞ்சினின் பாதாம் புயப்பற் றுரத்தை யேற்றி, நாமாதி பேதங்க ளற்றபர வத்துநின் னயவித்தை வித்தி ஞான, நல்வேலி கொண்டுகாக் கின்றனர்க் கானந்த நல்கருட் பொழியு முகிலே, ஆமாறு தேர்ந்திடாப் பேதைக் கிரங்கியவ் வருட்சிறிது முதவொ ணாதோ, அடியவர்க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முருகையனே. (௮)

மண்டவுண ரொண்டலைபு ருண்டுபடு சண்டையிடு வடிவேல் பிடித்த வரமோ, மதிவதன ரிருவர்துணை முலைதழுவி யிதழ்பருகு மணவாள னென் பரிசோ, பண்டுமத கண்டகர்வெ ருண்டிடவெ குண்டுசெம் பந்தனென வுற்ற வகமோ, பலகுரவ ரலையுமன நிலைபயினு மலையினுறை பதம்வாய்ந்த கம்பீ ரமோ, எண்டிசையும் வண்டமிழை மொண்டுபொழி தொண்டரொலி யேழைசொற் கேட்க விலையோ, இவைதகவொ முதுமறைக ளிசையினிய வருள்புரிதி யென்றுநீ சிறுபாலனோ, அண்டரிடர் விண்டமுத முண்டுதுதி தண்டுளவ வாரமணி மாயன் மருகா, அடியவர்க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முருகையனே. (௯)

எளியோரை யாதரிப் பதிலாண்மை குன்றுமோ வீராறு கர மெதற்கோ, இருவினையு மற்றபெரி யோரடா தென்பரோ ஈந்திடுங் கருணை யிலையோ, தெளியாத வென்கவிகள் பத்திரச மற்றவோ செஞ் சுகத் துரை கசப்போ, தெரிகிலே னேதிருப் பினுமெங்க ணெஞ்சி னிடர் தீர்க்கவிது சமையம் வருவாய், ஒளியே துதிக்குதவு செல்வ மே மலையிஞெளி ரொப்பிலாச் சஞ் சீவியே, உண்மைக் குகந்திடுந் தெய்வமே வுயிரினுக் குயிரான கண்ணின் மணியே, அளிமேவு தே ன்பொழி கடம்பிலகு மார்பனே யானந்த முத்தி முதலே, அடியவர் க ளகமகிழ நடனமிடு மயிலில்வரு மாறுமுக முருகையனே. (ய)

ஆறுமுகப்பதிகம்

முற்றிற்று.

## விளம்பரம்.

இப்புத்தமும், இன்னும் வேண்டிய தமிழ், இங்கிலீஷ், தெலுக்கு, கிரந்தம் முதலிய புத்தகங்களும், பாவலர் நாவலர்களுக்கு வேண்டிய இலக்கண இலக்கியப் புத்தகங்களும், வைத்திய சித்தாந்தங்களும் அடியிற்கண்ட விலாசதாரிடம் நேரிலும் வி. பி. மூலமாகவும் கிரயத் திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

**இ. ராம. குருசாமிக் கோனார்,**

புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.